# அத்தியாயம் 5


## வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

### 5.1 பொதுநோக்கு


**இலங்கையின் வெளிநாட்டுத்துறையானது மோதல் முடிவடைந்தமையின் மூலம் ஏற்பட்ட சாதகமான தோற்றப்பாடு மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கை என்பனவற்றின் காரணமாக 2009இன் பின்னரைப் பகுதியில் மீட்சியடைந்தது.** முதலரைப் பகுதியில் வெளிநாட்டுத்துறையின் பொதுவான செயலாற்றம், குழப்பகரமான வெளிநாட்டு பொருளாதார நிலைமைகளிலிருந்து கசிந்த தாக்கங்களினாலும் உலகளாவிய திரவத்தன்மைக் குறையினாலும் பாதிக்கப்பட்டதுடன் இது நாட்டிற்கான நிதியியல் பாய்ச்சல்களைக் கட்டுப்படுத்தி அரச பிணையங்களில் காணப்பட்ட குறுங்கால முதலீடுகளின் மீளப் பெறுகைகளையும் தூண்டியது. எனினும், உலகளாவிய நிதியியல் குழப்ப நிலைமைகள் குறைவடைந்தமை மற்றும் உள்நாட்டுப் பொருளாதார சூழ்நிலை உறுதியடைந்தமை என்பனவற்றின் காரணமாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் நாட்டிற்கான மூலதனம் மற்றும் நிதியியல் பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. இதற்கமைய, 2009 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 1,082 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் நீங்கலான மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2009இன் கடைசி மூன்று காலண்டுகளில் ஐ.அ.டொலர் 5,097 மில்லியன் கொண்ட சாதனை மட்டமொன்றிற்கு குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.

**நடைமுறைக் கணக்கின் குறைந்த பற்றாக்குறை, கணிசமாக உயர்ந்த நிதியியல் பாய்ச்சல் என்பன 2009இல் சென்மதி நிலுவை குறிப்பிடத்தக்களவு உயர்ந்த மிகையினைப் பதிவு செய்ய வழிவகுத்தன.** பெரும்பாலான மற்றைய நாடுகளைப் போன்றே இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகமும் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டது. எனினும் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்படட குறைப்பு குறிப்பிடத்தக்களவிற்கு பெரிதாக இருந்தமையின் காரணமாக 2009இல் வர்த்தகப் பற்றாக்குறை 47.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களின் பேரிலான உட்பாய்ச்சல்கள் ஐ.அ. டொலர் 3330 மில்லியனுக்கு அதிகரித்து மிகப் பெரிய வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளராக 2009இல் மாறியதுடன் இது வர்த்தகப் பற்றாகுறையினை விஞ்சிக் காணப்பட்டது. வர்த்தக மற்றும் வருமானக் கணக்குகளில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் குறைந்த பற்றாக்குறை உயர்ந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் பணிகள் கணக்கில் ஏற்பட்ட மிகை என்பனவற்றுடன் இணைந்தமையின் விளைவாக நடைமுறைக் கணக்கு 2008இன் ஐ.அ.டொலர் 3,886 மில்லியனுடன் கொண்ட உயர்ந்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 214 மில்லியன் கொண்ட சிறிதளவு பற்றாக்குறையைப் பதிவு செய்தது. 2008இன் பிற்பகுதியிலிருந்து 2009இன் தொடக்கம் வரை அரச பிணையங்களிலிருந்த முதலீடுகள் தொடர்ச்சியாக மீளஅனுப்பட்டமையின் மோசமான தாக்கத்தினைக் குறைப்பதற்காகவும் நாட்டிற்கான நிதியியல் பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்காகவும் மற்றைய நாடுகளிலிருந்தான சிறப்பு நிதியிடல் தொடர் ஒழுங்குகள், வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடையே திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடுகளைத் தூண்டுகின்ற ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் துணைநில் ஒழுங்குவசதிக்காக ப.நா. நிதியத்துடனான கலந்துரையாடல் தொடங்கப்பட்டமை என்பன உள்ளிட்ட பல இணைக்கப்பட்ட வழிமுறைகள் மத்திய வங்கியினாலும்

வரைபடம் 5.1 சென்மதி நிலுவை




வரைபடம் 5.2 வெளிநாட்டு செலாவணி வருவாய்களின் முக்கிய மூலகங்கள்




அரசினாலும் மேற்கொள்ளப்பட்டன. மோதல் முடிவடைந்ததைத் தொடர்ந்து முதலீட்டாளர் நம்பிக்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், குறிப்பாக அரச பிணையங்கள் சந்தைக்கான உயர்வடைந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள், முழுத் தோற்றப்பாடும் புதிய பரிமாணமொன்றிற்கு மாற்றமடைய உதவின. இச் சாதகமான அபிவிருத்திகளின் தாக்கம், 2009 ஒத்தோபரில் இடம்பெற்ற ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட இரண்டாவது நாட்டிற்கான முறிகளின் மிக வெற்றிகரமான வழங்கலினூடாக தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. இப் பாரிய உட்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவை 2009இல் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,725 மில்லியன் கொண்ட முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மிகையைப் பதிவு செய்ய காரணமாகின.

**2009இல் செலாவணி வீதக் கொள்கையானது முதல் ஒரு சில மாதங்களில் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்களவிலும் அதன் பின்னர் உட்பாய்ச்சல கணிசனமாளவிலும் காணப்பட்ட பின்னணியில் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையில் உறுதியான தன்மையொன்றைப் பேணுவதில் கவனம் செலுத்தியது.** ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து குறிப்பிடத்தக்களவு வெளிப்பாய்ச்சல் காணப்பட்டதுடன், வெளிநாட்டு செலாவணி திரவத்தன்மைக்கு காணப்பட்ட மிகையான கேள்வி ஈடுசெய்யப்படுவதனை இயலச் செய்யும் விதத்தில் தேறிய அடிப்படையில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணியை நிரம்பல் செய்தது. 2009 மேயிலிருந்து நாட்டில் ஏற்பட்ட சமாதான விடியலின் மூலம் வெளிநாட்டுச் சூழலில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்திகள் நாட்டிற்குப் பெருமளவு உட்பாய்ச்சலை ஏற்படுத்தியதுடன் செலாவணி வீதம் கடுமையாக உயர்வடைவதற்கான அழுத்தத்தையும் ஏற்படுத்தியது. வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய ஈர்ப்பின் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி மேற்கொண்ட தலையீடு உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில், வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் மிகையான நிரம்பலைக் குறைக்க உதவிய வேளையில் அலுவல்சார் ஒதுக்குகளும் கட்டியெழுப்பப்பட்டன. மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட தலையீட்டு உபாயம் 2009ஆம் ஆண்டுப்பகுதியில் உறுதியான செலாவணி வீதத்தினைப் பேண உதவியது.

**உலகளாவிய பொருளாதாரத்தில் காணப்படும் படிப்படியான மீட்சி, உலகளாவிய சந்தைத் தன்மையில் காணப்பட்ட எளிதான நிலைமை, உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மேம்பட்ட வளர்ச்சி வாய்ப்புக்கள் என்பனவற்றின் காரணமாக 2010இல் வெளிநாட்டுத்துறை மேலம் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள் வெளிநாட்டுத்துறை அதன் மீள்எழுச்சி, போட்டித்தன்மை மற்றும் மாறுகின்ற வெளிநாட்டு நிலைமைகளுக்கு ஏற்ப பதிலிறுத்தும் தன்மை என்பனவற்றை மேம்படுத்தும் விதத்தில் மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தியது. பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த போட்டித்தன்மையினை உயர்த்தும் நோக்குடன், தனியார் துறைக்கான நிதியிடல் மற்றும் முதலீடுகளை உயர்த்துவதில் மேலதிக நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குவதற்காக மூலதன கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக பல தாராளமயமாக்கல் வழிமுறைகள் முன்மொழியப்பட்டுள்ளதுடன் அவற்றில் சில ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுமுள்ளன. வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவத்தினைப் பொறுத்தவரை, பன்னாட்டு வர்த்தகத்திற்கும், முதலீடுகள் மற்றும் நிதியியல் பாய்ச்சல்களுக்கும் வசதியளிக்கும் விதத்தில் செலாவணி வீதத்தில் ஏற்படும் நியாயமற்ற தளம்பல்களைத் தொடர்ந்து தடுப்பதே இலங்கை மத்திய வங்கியின் கொள்கையாக இருக்கும். நீண்ட காலத்தில் உறுதியான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுமதித் தளத்தினை மேலும் விரிவாக்கி பன்முகப்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

## 5.2 வெளிநாட்டுத்துறைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**பெரும்பாலான மற்றைய நாடுகளைப் போன்றே, உலகலாவிய மந்தநிலை இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தினையும் மோசமாகப் பாதித்தது.** 2009இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உபாயத்தின் கவனம், உலகளாவிய மந்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களை இறக்குமதியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் வெற்றி கொள்வதற்கு உதவுவதன் மீது குவிந்திருந்தது. ஏற்றுமதிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் பெரும்பாலான ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன ஏற்றுமதிகள் மீதான அத்தகைய நிகழ்வுகளின் மோசமான தாக்கத்தைத் தணிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினை தேவைப்படுத்தியது. இவை, நேரடி மற்றும் மறைமுக ஏற்றுமதியாளர்களின் காசுப்பாய்ச்சல் இடர்ப்பாடுகளை வெற்றி கொள்வதற்கான இலகுபடுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரித்திட்டத்தின்

அட்டவணை 5.1

## சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் 2005 | 2006 | 2007 | 2008(ஆ) | 2009(இ) | ரூபா மில்லியன் 2005 | 2006 | 2007 | 2008(ஆ) | 2009(இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வா்த்தக நிலுவை** | **-2,516** | **-3,370** | **-3,656** | **-5,981** | **-3,122** | **-253,082** | **-350,037** | **-404,703** | **-647,207** | **-358,707** |
| ஏற்றுமதிகள் | 6,347 | 6,883 | 7,640 | 8,111 | 7,085 | 638,276 | 716,579 | 845,683 | 878,499 | 813,911 |
| இறக்குமதிகள் | 8,863 | 10,253 | 11,296 | 14,091 | 10,207 | 891,359 | 1,066,615 | 1,250,386 | 1,525,705 | 1,172,618 |
| பணிகள் (தேறிய) | 338 | 257 | 302 | 401 | 391 | 34,043 | 26,660 | 33,357 | 43,557 | 44,780 |
| பெறுகைகள் | 1,540 | 1,625 | 1,775 | 2,004 | 1,892 | 154,877 | 168,802 | 196,249 | 217,180 | 217,378 |
| கொடுப்பனவுகள் | 1,202 | 1,368 | 1,472 | 1,603 | 1,501 | 120,833 | 142,142 | 162,892 | 173,623 | 172,598 |
| வருமானம் (தேறிய) | -299 | -389 | -358 | -972 | -488 | -30,049 | -40,424 | -39,054 | -105,032 | -55,814 |
| பெறுகைகள் | 35 | 311 | 449 | -32 | 116 | 3,629 | 32,457 | 50,213 | -3,133 | 13,551 |
| கொடுப்பனவுகள் | 335 | 700 | 807 | 940 | 603 | 33,678 | 72,881 | 89,267 | 101,899 | 68,365 |
| **பொருட்கள், பணிகள் மற்றும் வருமானம் (தேறிய)** | **-2,478** | **-3,503** | **-3,712** | **-6,552** | **-3,219** | **-249,088** | **-363,801** | **-410,401** | **-708,681** | **-369,740** |
| **நடைமுறை மாற்றல்கள் (தேறிய)** | **1,828** | **2,004** | **2,311** | **2,666** | **3,005** | **183,842** | **208,385** | **255,684** | **288,639** | **345,498** |
| தனியாா் மாற்றல்கள் (தேறிய) | 1,736 | 1,904 | 2,214 | 2,565 | 2,927 | 174,542 | 197,861 | 245,006 | 277,711 | 336,578 |
| பெறுகைகள் | 1,968 | 2,161 | 2,502 | 2,918 | 3,330 | 197,968 | 224,678 | 276,814 | 316,091 | 382,818 |
| கொடுப்பனவுகள் | 233 | 257 | 288 | 353 | 403 | 23,426 | 26,817 | 31,808 | 38,380 | 46,240 |
| அலுவல்சாா் மாற்றல்கள் (தேறிய) | 93 | 101 | 97 | 101 | 77 | 9,300 | 10,524 | 10,677 | 10,928 | 8,920 |
| **நடைமுறை கணக்கு** | **-650** | **-1,499** | **-1,402** | **-3,886** | **-214** | **-65,246** | **-155,416** | **-154,717** | **-420,042** | **-24,242** |
| **மூலதன, நிதியியல் கணக்குகள்** | **1,224** | **1,808** | **2,097** | **1,773** | **2,594** | **123,866** | **190,768** | **230,978** | **193,713** | **299,381** |
| **மூலதனக்கணக்கு** | **250** | **291** | **269** | **291** | **233** | **25,108** | **30,292** | **29,669** | **31,456** | **26,832** |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 250 | 291 | 269 | 291 | 233 | 25,108 | 30,292 | 29,669 | 31,456 | 26,832 |
| பெறுகைகள் | 257 | 299 | 278 | 303 | 247 | 25,863 | 31,171 | 30,735 | 32,774 | 28,465 |
| கொடுப்பனவுகள் | 7 | 8 | 10 | 12 | 14 | 755 | 879 | 1,066 | 1,319 | 1,633 |
| **நிதியியல் கணக்கு** | **974** | **1,517** | **1,828** | **1,483** | **2,361** | **98,757** | **160,477** | **201,309** | **162,258** | **272,550** |
| நீண்டகாலம் : | 798 | 907 | 1,251 | 1,016 | 1,304 | 80,391 | 95,089 | 140,054 | 109,174 | 149,772 |
| நேரடி முதலீடு | 234 | 451 | 548 | 691 | 384 | 23,505 | 46,985 | 60,768 | 74,837 | 44,112 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு | 234 | 451 | 548 | 691 | 384 | 23,505 | 46,985 | 60,768 | 74,837 | 44,112 |
| தனியாா் நீண்டகாலம் (தேறிய) | 11 | -35 | 31 | 74 | 79 | 1,054 | -3,590 | 3,314 | 7,768 | 9,105 |
| உட்பாய்ச்சல்கள் | 197 | 139 | 199 | 265 | 390 | 19,739 | 14,469 | 22,033 | 28,693 | 44,795 |
| வெளிபாய்ச்சல்கள் | 186 | 174 | 168 | 191 | 311 | 18,685 | 18,058 | 18,719 | 20,925 | 35,691 |
| அரச நீண்டகாலம் (தேறிய) | 553 | 491 | 672 | 252 | 840 | 55,832 | 51,694 | 75,971 | 26,568 | 96,555 |
| உட்பாய்ச்சல்கள் | 747 | 932 | 1,290 | 1,059 | 1,780 | 75,309 | 97,690 | 144,146 | 114,658 | 204,435 |
| வெளிபாய்ச்சல்கள் | 194 | 441 | 618 | 807 | 940 | 19,477 | 45,996 | 68,175 | 88,090 | 107,880 |
| குறுங்காலம் : | 176 | 610 | 577 | 466 | 1,058 | 18,366 | 65,387 | 61,256 | 53,084 | 122,777 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் | 60 | 51 | 101 | 60 | -6 | 6,103 | 5,377 | 11,249 | 6,460 | -785 |
| தனியாா் குறுங்காலம் (தேறிய) | 16 | -30 | 20 | 594 | 228 | 1,640 | -3,066 | 1,868 | 63,987 | 26,108 |
| வா்த்தக வங்கி சொத்துக்கள் (தேறிய) | -223 | 297 | -281 | 210 | -435 | -19,669 | 23,789 | -31,352 | 17,889 | -51,298 |
| வா்த்தக வங்கி பொறுப்புக்கள் (தேறிய) | 323 | 293 | 364 | -185 | -98 | 30,292 | 39,287 | 38,746 | -11,858 | -8,836 |
| அரச குறுங்காலம் (தேறிய) | - | - | 372 | -213 | 1,369 | - | - | 40,744 | -23,395 | 157,588 |
| **எஸ்டிஆா் ஒதுக்குகள் (ஈ)** | - | - | - | - | **508** | - | - | - | - | **58,353** |
| **மதிப்பீட்டு சீா்திருத்தங்கள்** | - | - | - | - | - | - | - | - | - | - |
| **பிழைகளும் தவறுகளும்** | **-72** | **-105** | **-165** | **728** | **346** | **-10,494** | **-1,830** | **-16,259** | **80,534** | **40,082** |
| **திரண்ட நிலுவை (உ) (ஊ)** | **501** | **204** | **531** | **-1,385** | **2,725** | **48,125** | **33,523** | **60,002** | **-145,795** | **315,221** |
| நாணய அசைவுகள் (உ) (ஊ) | -501 | -204 | -531 | 1,385 | -2,725 | -48,125 | -33,523 | -60,002 | 145,795 | -315,221 |
| **ஆண்டுச்சராசரி செலவாணி வீதம் ரு/ஐ.அ.டொ** | | | | | | **100.50** | **103.96** | **110.62** | **108.33** | **114.94** |
| **மொ.உ.உ இற்கான விகிதம் சதவீதங்களில் (எ)** | | | | | | | | | | |
| வா்த்தக கணக்கு | -10.3 | -11.9 | -11.3 | -14.7 | -7.4 | -10.3 | -11.9 | -11.3 | -14.7 | -7,4 |
| நடைமுறை கணக்கு | -2.7 | -5.3 | -4.3 | -9.5 | -0.5 | -2.7 | -5.3 | -4.3 | -9.5 | -0.5 |
| கொடைகளற்ற நடைமுறை கணக்கு | -3.0 | -5.7 | -4.6 | -9.8 | -0.7 | -3.0 | -5.7 | -4.6 | -9.8 | -0.7 |

(அ) இந்த வெளிப்படுத்துகை பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டள்ளது. மேலும் 1994 இலிருந்து கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளது.

மூலம் : இலங்கை மத்திய வங்க

(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை

(இ) தற்காலிகமானவை

(ஈ) பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்தான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் பொது மற்றும் விசேட ஒதுக்குகள்

(உ) ஐ.அ.டொலா் பெறுமதிகள் ஆண்டின் இறுதி செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி ருபாய் பெறுமதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஊ) வெளிநாட்டுச் நொத்துக்கள் வகைப்படுத்தலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக மத்தியவங்கியினால் உள்நாட்டு வங்கிகளில் வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயங்கள் 2008 இலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

(எ) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைகளத்தினால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டது.

**அட்டவணை 5.2**
**சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)**

| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008 (ஆ) | 2009(இ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **10.4** | **11.2** | **12.4** | **12.6** | **19.4** |
| உணவும் குடிப்பானங்களும் | 9.6 | 10.7 | 13.5 | 14.8 | 26.8 |
| அரிசி | 10.6 | 23.4 | 3.1 | 3.1 | 5.4 |
| மாவு | 3.8 | 33.7 | 31.9 | 22.6 | 22.0 |
| சீனி | 1.5 | 1.9 | 23.9 | 32.8 | 26.5 |
| கோதுமையும் மெசுலினும் | 1.1 | 5.6 | 6.3 | 6.7 | 32.2 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 10.2 | 9.6 | 7.7 | 2.0 | 29.2 |
| கருவாடு | 5.9 | 5.0 | 2.9 | 9.4 | 10.9 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 9.8 | 7.8 | 4.9 | 8.7 | 18.3 |
| ஏனையவை | 22.0 | 24.2 | 20.8 | 24.2 | 27.2 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 11.1 | 11.7 | 11.2 | 8.4 | 6.7 |
| உந்து ஊர்திகளும் துவிச்சக்கர வண்டிகளும் | 18.9 | 18.3 | 16.3 | 7.7 | 6.2 |
| வானொலிப் பெட்டிகளும் | 13.6 | 7.1 | 7.7 | 6.3 | 7.1 |
| இறப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் | 26.2 | 19.2 | 22.4 | 19.2 | 20.1 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.5 | 0.3 | 0.4 | 0.4 | 0.4 |
| ஏனையவை | 8.7 | 10.3 | 10.6 | 13.0 | 8.6 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **2.1** | **1.5** | **1.5** | **2.2** | **5.0** |
| வளமாக்கி | 2.7 | 2.5 | 2.7 | 2.5 | 2.5 |
| மசக்கெண்ணெய் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலிய பொருட்கள் | 1.9 | 2.3 | 1.6 | 4.7 | 19.0 |
| இராசாயன கூறுகளும் கலவைகளும் | 2.0 | 1.8 | 1.9 | 1.8 | 1.9 |
| நிறமூட்டல், தோல் பதனிடல் | 4.4 | 2.6 | 2.5 | 2.1 | 2.1 |
| தாளும் தாள் மட்டையும் | 6.0 | 2.4 | 2.2 | 2.0 | 2.1 |
| புடவைகள் | 0.1 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 4.5 | 3.3 | 3.3 | 2.9 | 4.9 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **5.8** | **5.2** | **4.8** | **5.3** | **4.4** |
| கட்டடப்பொருட்கள் | 7.8 | 9.2 | 7.2 | 7.2 | 8.2 |
| போக்குவரத்து கருவிகள் | 9.7 | 7.0 | 7.1 | 7.1 | 3.7 |
| பொறிகளும் கருவிகளும் | 3.3 | 3.2 | 2.7 | 3.1 | 2.5 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 5.3 | 3.4 | 4.2 | 3.9 | 3.3 |
| **சராசரி இறக்குமதித் தீர்வை வசூலிப்பு வீதம்** | **4.6** | **4.3** | **4.1** | **4.6** | **7.8** |

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான இறக்குமதி தீர்வை சேகரிப்பு (பொ.கா.பெ).
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கைச் சுங்கம்

நடைமுறைப்படுத்தல் பெறுமதிசேர் வரி 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமை, மற்றும் ஏற்கனவேயுள்ள சந்தைகளைப் பாதுகாத்தல், புதிய சந்தைகளுக்குள் நுழைதல் மற்றும் முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய பணிகளை இணைத்தல் ஆகிய குறிக்கோள்களுடன் ஏற்றுமதி அபிவிருத்தி வெகுமதித்திட்டம் என அழைக்கப்படும் பொருளாதார தூண்டல் பொதியின் அறிமுகம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இலகுபடுத்தப்பட்ட பெறுமதிகூட்டப்பட்ட வரித்திட்டம் நேரடி ஏற்றுமதியாளர்கள் மறைமுக ஏற்றுமதியாளர்களிடமிருந்து மூலப் பொருட்கள், நுகரத்தக்க பொருட்கள் மற்றும் துணைப் பொருட்களை பெறுமதிசேர் வரி இடைநிறுத்தல் வசதியின் கீழ் கொள்வனவு செய்வதற்கானதாக இருந்ததுடன் 2009இல் இத்திட்டத்தின் கீழ் ரூ.2 பில்லியன் வழங்கப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி வெகுமதித் திட்டத்தின் கீழ் தேயிலை, இறப்பர், கறுவா, ஆடைகள், தோல் மற்றும் தேயிலைத் துறைகளுக்கு சலுகைகள் வழங்கப்பட்டன. எனினும் ஏற்றுமதியாளர்கள் வெகுமதித் திட்டத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு பெறுமதிகூட்டலை தேவையான மட்டத்தில் பேணுமாறும் ஏற்றுமதிப் பெறுமதியினையும் தொழில்வாய்ப்பினையும் நெருக்கடிக்கு முன்னைய மட்டத்தில் பேண வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேலும் உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக கேள்வியில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சியின் காரணமாக ஒன்று திரண்டு கொழும்பு தேயிலை ஏலத்தில் காணப்பட்ட விற்கப்படாத தேயிலையை கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கம் ஏற்றுமதியாளர்களுக்கு உதவியது. இத்தகைய விதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தேயிலை, சந்தைக்கு எந்தவிதமான குறிப்பிடத்தக்க இடையூறுகளும் ஏற்படாத விதத்தில் அடுத்து வந்த ஏலங்களில் மீள விற்பனை செய்யப்பட்டன. அத்துடன், இலங்கைத் தேயிலைச் சபையும் வழமையான நிலை மீண்டும் அடையப்படும் வரை மிகையான நிரம்பலைத் தடுக்கும் விதத்தில் கொழும்பு ஏலங்களுக்கு வரும் தேயிலையின் அளவினை கட்டுப்படுத்துவதற்காக கடுமையான வழிமுறைகளை குறித்துரைத்தது.

**2004இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து பிரிவுத் தீர்வையமைப்பு 2009இலும் தொடர்ந்தது.** உற்பத்தி வகைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை 5 பிரிவு தீர்வை அமைப்பினை பேணியது. இன்றியமையாத பொருட்களின் இறக்குமதிகளுக்கு பூச்சியத் தீர்வையும், அடிப்படை மூலப்பொருட்களுக்கு 2.5 சதவீதமும், ஓரளவு பதனிடப்பட்ட பொருட்களுக்கு 6 சதவீதமும் இடைநிலை உற்பத்திகளுக்கு 15 சதவீதமும் ஏனைய முடிவடைந்த உற்பத்திகளுக்கு 28 சதவீதமும் விதிக்கப்பட்டன. எனினும், அரசிறையை உருவாக்கும் நோக்கத்திற்காகவும் உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காகவும் 2009ஆம் ஆண்டுப்பகுதியில் வர்த்தகத்துடன் தொடர்பான மற்றைய பல வரிகளும் விதிக்கப்பட்டன. எனவே, சுங்கத் தீர்வைக்கு மேலதிகமாக சில இறக்குமதிகள் செஸ், சிறப்புப் பண்டத் தீர்வை, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதிசேர் வரி என்பனவற்றிற்கு உட்பட்டிருந்தன. உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிக்கும் நோக்குடன் தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகள் மேலதிக தீர்வை மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை என்பனவற்றிற்கு உட்பட்டிருந்தன. 2009 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்கு வந்த மொத்தப் புரழ்வு மீதான 1 சதவீதத்தினைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2009 யூலை 01ஆம் நாளிலிருந்து 3 சதவீதத்திற்கு திருத்தப்பட்டது. மேலும், அரசாங்கம் பெறுமதிசேர் வரியின் நியம வீதத்தினை 2009 சனவரி 1ஆம் நாளிலிருந்து 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு குறைத்துக் கொண்டது. உந்து ஊர்திகள் ஆடம்பரப் பொருட்கள் மற்றும் குடிவகை என்பன மீது ஏற்புடைத்தான 20 சதவீத பெறுமதிசேர் வரி போன்ற சில வரிகள் மாற்றமின்றிக் காணப்பட்டன. மொத்த இறக்குமதிகள் மற்றும் சுங்கச் சேகரிப்புக்களின் அடிப்படையில் கணிக்கப்பட்ட சராசரி இறக்குமதித் தீர்வை வீதம் 2008இன் 4.6 சதவீதத்திலிருந்து 2009இல் 7.8 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

**ஆண்டின் பிற்பகுதியில், உள்நாட்டுச் சந்தையில் அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் உயர்வடைந்தமையின் காரணமாக, உள்நாட்டு நுகர்வோருக்கு நிவாரணங்களை வழங்கும் பொருட்டு சில நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான வரிகளை அரசாங்கம் நீக்கியது.** இதற்கமைய அரிசி, உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், உள்ளி, சீனி மற்றும் மிளகாய் என்பனவற்றின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை துறைமுகம் மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தி தீர்வை, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, சமூகப் பொறுப்பாண்மைத் தீர்வை, பெறுமதிசேர் வரி மற்றும் மேலதிக விதிப்புக்கள் என்பன 2009 நவெம்பரில் குறைந்தளவு சிறப்பு பண்டத் தீர்வையொன்றின் மூலம் நீக்கப்பட்ட வேளையில் அரிசி மற்றும் சீனி என்பன மீதான சிறப்பு பண்டத் தீர்வை 2009 திசெம்பரில் மேலும் குறைக்கப்பட்டது.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் இலங்கை கட்டளைகள் நிறுவனமும் ஏற்றுமதிப் பொருட்களின் பன்னாட்டுத் தரத்தையும் நியமங்களையும் பேணுவதற்கு ஏற்றுமதி யாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும், பதனிடுவோருக்கும்**

**உதவியது.** ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செலவுகளை பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில், சிறந்த வேளாண்மை நடைமுறைகள், சிறந்த தயாரிப்பு நடைமுறைகள் தீங்கு பகுப்பாய்வு நெருக்கடிக் கட்டுபாட்டுப் புள்ளி, தரப்படுத்தலுக்கான பன்னாட்டு அமைப்பு 22000, குறித்துரைக்கப்பட்ட உற்பத்திகளுக்கான சந்தைத் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய இடைவெளிச் சான்றிதழ் போன்ற தரச் சான்றிதழ்களைப் பெறுவதற்கு உதவிகளை வழங்கியது. அதிகரித்துச் செல்லும் பன்னாட்டுக் கேள்விக்கு வசதியளிக்கும் பொருட்டு நீண்ட காலமாக உணரப்பட்ட தேவையான சேதன வேளாண்மை நடவடிக்கைகளை சான்றுபடுத்துவதற்கான உள்;ர் பரீட்சிப்பு சபையொன்றினையும் கட்டுப்பாட்டு அதிகார சபையொன்றினையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஈடுபட்டிருந்தது. இலங்கைக் கட்டளைகள் நிறுவகமும் தரங்களை உருவாக்குதல், உற்பத்திகள் மற்றும் சந்தையுடன் தொடர்புபட்ட தகவல் பணிகளை வழங்குதல், உற்பத்திகளின் பரீட்சிப்பு வசதிகளை வழங்குதல், தர முகாமைத்துவப் பயிற்சி மற்றும் சான்றுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் தேசிய தரத்திற்கான பரிசுகளை வழங்குதல் என்பன மூலம் பன்னாட்டு வர்த்தகத்திற்கான வசதிகளை வழங்கியது. மேலும் 103 உற்பத்திகள் தொடர்பாக அவை இலங்கைக் கட்டளைகளினால் குறித்துரைக்கப்பட்டவாறான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவை தொடர்பாக இறக்குமதிப் பரீட்சிப்பு திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**2009இல் இலங்கை இருபுடை, பல்புடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளினூடாக வெளிநாட்டு வர்த்தக உறவுகளை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவாக்கியிருக்கின்றது.** பல்புடை மட்டத்தில், இலங்கை உலக வர்த்தக அமைப்பின் டோகா சுற்று வர்த்தகப் பேச்சு வார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்ததுடன் குறிப்பாக வேளாண்மை, வேளாண்மையல்லா துறைகளில் சந்தை வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் புலமைச் சொத்து உரிமை அம்சங்களுடன் தொடர்பான வர்த்தகம், ஒழுங்குவசதிகள் மற்றும் பணிகள் இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களை பாதுகாத்து ஊக்குவிக்கும்

**அட்டவணை 5.3**

**வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

1997=100

| வகை | 2008 (ஆ) | | | 2009 (இ) | | | வளர்ச்சி வீதம் (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகிற்கான விலைச் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகிற்னான சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகிற்காண விலைச் |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **174.6** | **130.3** | **134.0** | **159.1** | **122.7** | **129.7** | **-8.9** | **-5.9** | **-3.2** |
| தேயிலை | 176.4 | 125.4 | 140.7 | 164.4 | 114.8 | 143.2 | -6.8 | -8.4 | 1.8 |
| இறப்பர் | 159.0 | 80.7 | 196.9 | 125.4 | 89.0 | 140.9 | -21.2 | 10.2 | -28.4 |
| தெங்கு | 145.4 | 123.0 | 118.2 | 141.3 | 119.2 | 118.6 | -2.8 | -3.1 | 0.3 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 198.1 | 187.8 | 105.5 | 165.8 | 182.8 | 90.7 | -16.3 | -2.7 | -14.0 |
| **கைத்தொழில்கள் ஏற்றுமதிகள்** | **178.9** | **162.4** | **110.2** | **154.1** | **139.7** | **110.3** | **-13.8** | **-13.9** | **0.1** |
| புடவைகளும் ஆடைகளும் | 152.2 | 154.6 | 98.4 | 143.7 | 148.4 | 96.8 | -5.6 | -4.0 | -1.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 261.7 | 62.9 | 416.1 | 138.4 | 55.0 | 251.4 | -47.1 | -12.5 | -39.6 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 228.3 | 187.9 | 121.5 | 177.8 | 129.0 | 137.9 | -22.1 | -31.4 | 13.5 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **109.4** | **134.2** | **81.5** | **99.3** | **122.4** | **81.1** | **-9.3** | **-8.8** | **-0.5** |
| இரத்தினகற்கல் | 92.0 | 124.3 | 74.0 | 83.0 | 111.8 | 74.2 | -9.8 | -10.1 | 0.3 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 338.6 | 264.3 | 128.1 | 314.1 | 262.1 | 119.8 | -7.2 | -0.8 | -6.5 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **174.5** | **154.4** | **113.0** | **152.4** | **135.4** | **112.5** | **-12.7** | **-12.3** | **-0.4** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப்பொருட்கள்** | **201.5** | **194.7** | **103.5** | **158.0** | **184.9** | **85.5** | **-21.6** | **-5.0** | **-17.0** |
| உணவும் குடிப்பானங்களும் | 177.2 | 156.2 | 113.4 | 153.8 | 140.7 | 109.3 | -13.2 | -9.9 | -3.7 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 236.9 | 250.6 | 94.5 | 164.2 | 249.0 | 65.9 | -30.7 | -0.6 | -30.2 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **269.5** | **154.2** | **174.7** | **183.2** | **133.0** | **137.8** | **-32.0** | **-13.8** | **-21.2** |
| வளமாக்கி | 868.6 | 197.8 | 439.2 | 291.4 | 135.8 | 214.7 | -66.5 | -31.4 | -51.1 |
| மசகெண்ணைய் | 500.9 | 102.3 | 489.7 | 368.2 | 114.1 | 322.7 | -26.5 | 11.5 | -34.1 |
| ஏனைய பெற்றோலியம் | 742.7 | 202.3 | 367.2 | 433.6 | 128.3 | 337.9 | -41.6 | -36.6 | -8.0 |
| இராசாயனக்கூறுகளும் கலவைகளும் | 265.7 | 181.3 | 146.6 | 229.8 | 176.6 | 130.1 | -13.5 | -2.6 | -11.2 |
| கோதுமையும் மெசுலீனும் | 272.5 | 116.4 | 234.0 | 188.2 | 130.0 | 144.7 | -30.9 | 11.7 | -38.2 |
| புடவைகள் (ஆடைகள் உற்பட) | 122.7 | 143.6 | 85.4 | 104.0 | 132.5 | 78.5 | -15.3 | -7.8 | -8.1 |
| பிளாத்திக்குகள் | 257.0 | 180.3 | 142.5 | 131.9 | 120.2 | 109.7 | -48.7 | -33.3 | -23.0 |
| பிளாத்திக்குகள் | 287.4 | 128.2 | 224.2 | 195.7 | 96.9 | 201.9 | -31.9 | -24.4 | -10.0 |
| ஏனையவை | 217.1 | 196.3 | 110.6 | 160.2 | 181.4 | 88.3 | -26.2 | -7.6 | -20.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **229.8** | **215.1** | **106.9** | **184.8** | **201.2** | **91.8** | **-19.6** | **-6.4** | **-14.1** |
| கட்டடப் பொருட்கள் | 346.9 | 246.3 | 140.9 | 262.9 | 186.9 | 140.7 | -24.2 | -24.1 | -0.1 |
| போக்குவரத்துக் கருவிகள் | 210.9 | 99.2 | 212.6 | 209.7 | 98.0 | 214.0 | -0.6 | -1.2 | 0.7 |
| பொறியும் கருவியும் | 179.0 | 244.6 | 73.2 | 136.2 | 240.9 | 56.6 | -23.9 | -1.5 | -22.7 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 326.2 | 154.3 | 211.4 | 279.1 | 161.7 | 172.6 | -14.5 | 4.8 | -18.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | **240.2** | **176.3** | **136.3** | **174.0** | **159.0** | **109.5** | **-27.6** | **-9.8** | **-19.7** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | **82.9** | | | **102.8** | | | **24.0** |

(அ) ஐ.அ.டொலரில்
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

நோக்குடன் பல்வேறு முக்கிய பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டது. எனினும், 2009இல் டோகா சுற்று வர்த்தக பேச்சுவார்த்தையின் மந்தமான செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, 2009 திசெம்பரில் ஜெனிவாவில் நடத்தப்பட்ட 7ஆவது உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாட்டில், 2010இல் பேச்சுவார்த்தைகளை முடித்து வைக்க வேண்டியதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. 2010 மார்ச்சில் "இருப்பெடுக்கும் நடவடிக்கை" இனை மேற்கொள்வதற்கு அமைச்சர்கள் உடன்பட்டனர்.

**வர்த்தக வசதிப்படுத்தல் மீதான உத்தேச உடன்படிக்கையின் மீதான நிபந்தனையை அடிப்படையாகக் கொண்ட பேச்சுவார்த்தைகளில் இலங்கை தீவிரமாகப் பங்கேற்றது.** ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீவிரமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து வர்த்தக வசதிப்படுத்தல்களை இணங்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பனவற்றிற்கான ஒன்று திரட்டப்பட்ட குறிப்புக்களைக் கொண்ட வரைபொன்று தயாரிக்கப்பட்டது. உத்தேச வர்த்தக வசதிப்படுத்தல் மீதான உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான இலங்கையின் இயலாற்றலை பெருக்குவதற்காக அரச மற்றும் தனியார் துறையிலுள்ள அனைத்து ஆர்வலர்களினதும் பங்கேற்புடன் உலக வர்த்தக அமைப்பின் உதவியுடன், வர்த்தக வசதிப்படுத்தலுக்குத் தேவையான மதிப்பீடொன்று கொழும்பில் மேற்கொள்ளப்பட்டது.

**முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறை + திட்டத்தின் கீழ் 2009இல் ஐரோப்பிய சந்தைகளை அடைவதற்கான முன்னுரிமைகளை இலங்கை தொடர்ந்தும் பெற்றது.** ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள், ஐரோப்பிய ஆணைக்குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு, இத் திட்டத்தினை 2009 - 2011 வரையான காலப்பகுதிக்கு புதுப்பித்தன. 2010 பெப்புருவரி 15ஆம் நாள் ஐரோப்பிய ஒன்றியம் முன்னுரிமைத் தீர்வை நன்மைகளை 2010 ஒகத்து 15ஆம் நாளிலிருந்து விலக்கிக் கொள்வது பற்றிய தமது எண்ணத்தினை அறிவித்தது. இத் தீர்மானமானது சலுகைக் காலப்பகுதியான இந்த ஆறு மாத காலப்பகுதியில் அபிவிருத்தியின் மீது தங்கியிருக்கும் தன்மையினையும் குறிப்பிட்ட கரிசனைக்குரிய விடயங்களை திருத்தியமைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் நேர்மாறாக்கிவிடக் கூடும். இதற்கமைய, இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தினால் எழுப்பப்பட்ட சில கரிசனைக்குரிய விடயங்கள் பற்றி அதனுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றது. அதேநேரம், ஏற்றுமதியாளர்கள் வர்த்தக நன்மைகளின் மீது அளவுக்கதிகமாகத் தங்கியிருப்பதன் எதிர் விளைவுகள் பற்றி எச்சரிக்கப்பட்டிருப்பதுடன் உலகளாவிய போட்டித்தன்மையினை எதிர்நோக்கும் விதத்தில் அவர்களது உற்பத்தியாக்கத்தினை உயர்த்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டனர் (சிறப்புக்குறிப்பு 7).

**இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தல் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகம் வளர்ச்சியடைய உதவியுள்ள போதும், 2009இல் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் வீழ்ச்சியடைந்து உலகளாவிய பொருளாதாரம் மெதுவடைவந்தமையினைப் பிரதிபலித்தது.** இந்தியாவிற்கான ஆண்டிற்கு ஆண்டு ஏற்றுமதிகள் 2009இல் ஐ.அ.டொலர் 322 மில்லியனிற்கு 23.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் 2009இல் ஐ.அ.டொலர் 1,820 மில்லியனிற்கு 47.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், குறிப்பிட்ட பொருட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்தியாவிற்கான ஏற்றுமதிக் கூடை இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடங்கப்பட்டதிலிருந்து 2007 - 2009 வரையான காலப்பகுதியில் கணிசமானளவிற்கு பன்முகப்படுத்தப்பட்டிருக்கிறது. கணிசமானளவு ஏற்றுமதிப் பெறுகைகளை விளைவித்த புதிய விடயங்கள் கோழித்தீன், குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள், தீ பற்ற வைக்கும் அலகுகள், கப்பல்கள், தாள் உற்பத்திகள், கண்ணாடிக் குவளைகள் மற்றும் பிளாத்திக்கு கொள்கலன்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. எனினும், மரக்கறி எண்ணெய், பித்தளை மூலப் பொருட்கள், மாஜரின், சலவைக்கல் மற்றும் மிளகு போன்ற முக்கிய ஏற்றுமதிகளில் குறைப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. அதேவேளை, 2009இல் இந்தியாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகள் பெற்றோலிய இறக்குமதிகள், இரும்பு மற்றும் உருக்கு, பருத்தி, உந்து ஈருளிகள் மற்றும் உந்து ஊர்திகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. எனினும், இவ்விறக்குமதிகளில் பெரும்பாலானவை தீர்வை முன்னுரிமைகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், இதன் காரணமாக இவை இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் வரவில்லை.

**பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2009 மாச்சு 20ஆம் நாள் தொடக்கம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வையினை கட்டம் கட்டமாக நீக்குகின்ற இறுதிக் கட்ட நடவடிக்கையை பாகித்தான நடைமுறைப்படுத்தியது.** இதன் விளைவாக தீர்வையற்ற அடிப்படையின் கீழ் 4,500 இற்கும் கூடுதலான தீர்வையற்ற விடயங்களை ஏற்றுமதி செய்ய இலங்கை தகைமையுடையதாகும். இலங்கையின் கட்டம் கட்டமான இறுதித் தீர்வைக் குறைப்புக் கடப்பாடு 2010 யூனில் நடைமுறைக்கிடப்பட வேண்டும். பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கை, புரோசரின் மட்பாண்ட மேசைப் பொருட்கள், பொறி தொடர்பான பொருட்கள், மட்பாண்ட ஓடுகள், தளபாடங்கள், மின்னியல் முடுக்கிகள் போன்ற கைத்தொழில் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தமையின் மூலம் மரபுவழி வேளாண்மை ஏற்றுமதிகளுக்குப் புறம்பாக அதன் ஏற்றுமதிச் சொத்துப்பட்டியலை பன்முகப்படுத்தியிருக்கிறது. சந்தைக்கான வழிவகைகள் அதிகரித்த போதும் பாகித்தானுக்கான மொத்த ஏற்றுமதிகள் 2009இல் ஐ.அ.டொலர் 55 மில்லியனுக்கு 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மாறாக சீமெந்து, பருத்திப் புடவை நூலிழைகள் நூல் மற்றும் துணிகள், மருந்தாக்கல் உற்பத்திகள் கருவாடு மற்றும் அரிசி என்பனவற்றை உள்ளடக்கிய பாகித்தானிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகள் 2009இல் ஐ.அ.டொலர் 197 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தன.

**அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதாரப் பங்குடமை உடன்படிக்கையின் கீழ் இந்தியா மற்றும் பாகித்தானுடன் இருபுடை வர்த்தகம் மற்றும் முதலீடுகளின் மூலம் வளர்ச்சி காண்பதற்கான ஏதுநிலை பெருமளவில் காணப்படுகின்றது.** தொடர்பான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஆரம்பித்த நாளிலிருந்து இந்நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்தில் முன்னேற்றங்கள் காணப்பட்ட போதும் ஏற்றுமதியாளர்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதாயிருந்த

## சிறப்புக்குறிப்பு 7

## தீர்வை முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டம் + இலங்கையின் சலுகைகள்

**பின்னணி**

வர்த்தக மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக் குழுவானது குறைந்த வருமானம்பெறும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரித்தல், கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை அதிகரித்தல் போன்ற குறிக்கோள்களுடன் தீர்வை சலுகைகளை வழங்கும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டத்தினை ஆரம்பித்தது. ஐரோப்பிய ஒன்றிய 1971 இல் பொதுவாக்கப்பட முன்னுரிமைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பித்ததுடன் அதனைத் தொடர்ந்து ஏனைய பல அபிவிருத்தியடைந்த நாடுகளும் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, யப்பான், கனடா போன்ற ஏனைய நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு சலுகைகளை வழங்கும் நோக்குடன் பொதுவாக்கப்பட முன்னுரிமைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தின. ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட தீர்வை முன்னுரிமை திட்டமானது ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள 27 நாடுகளால் பின்பற்றப்படும் ஒரு தன்னியக்கவியல்பான வர்த்தக உடன்படிக்கை ஆகும். ஐரோப்பிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டமானது 176 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் மற்றும் பிராந்தியங்களினதும் உற்பத்திப் பொருட்கள் தங்குதடையற்ற முன்னுரிமை அடிப்படையில் அதிக விருப்பு தேசத்தின் தீர்வை வீதங்களிலான தீர்வை விலக்காகவோ தீர்வைக் குறைப்பாகவோ அல்லது தீர்வைக் கழிவாகவோ உள் நுழைவதற்கு அனுமதியளித்தது.

**பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை திட்டம் +**

ஐரோப்பிய ஒன்றியம், தமது அபிவிருத்தித் திட்ட உருவாக்கத்தின் தொடர்ச்சியான முன் முயற்சியாகக் குறை அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தல் என்ற கட்டுப்பாட்டுடன் 2006 இலிருந்து 2010 ஆண்டு காலத்திற்கு நியம ஏற்பாடுகள் மற்றும் இரண்டு விசேட எற்பாடுகளினூடாக ஐரோப்பிய ஒன்றியம் மேலதிக முன்னுரிமையாக விரிவாக்கம் செய்தது. இந்த இரண்டு விசேட ஏற்பாடுகளில் ஒரு விசேட எற்பாடானது குறை அபிவிருத்தியடைந்த நாடுகளின் உற்பத்திகளுக்கு ஐரோப்பாச் சந்தையில் தீர்வை விலக்கினை வழங்கியதுடன் மற்றைய விசேட கொடுப்பனவு ஏற்பாடானது பொதுவாக்கப்பட முன்னுரிமைத் திட்டம் + எனப் பொதுவாக குறிப்பிடப்படும் தகுந்த அபிவிருத்தி மற்றும் சிறந்த அரசாட்சி, என்பவற்றை உள்ளடக்கிய திட்டமாகும். இது மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி மற்றும் சிறந்த அரசாட்சி என்பவற்றின் முக்கிய பன்னாட்டு விழுமியங்களை சரிவர அமுல்படுத்தும் விசேட அபிவிருத்தித் தேவைகள் தேவைப்படும் நாடுகளுக்கு வழங்கப்பட்டது. பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் + ஆனது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் மதிப்பிடப்படும்.

**இலங்கையும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டமும் +**

இலங்கைக்கு பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் திட்டம் + தீர்வைச் சலுகைகள் யூலை 2005 - டிசம்பர் 2008 வரையான காலப்பகுதிக்கு 2005 இல் விதிக்கப்பட்டது. இலங்கையானது பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மேலதிக முன்னுரிமையை பெற்றுக்கொள்ளும் 16 பயனாளி நாடுகளில் ஒன்றாக இருப்பதுடன் தென் ஆசிய பிராந்தியத்தில் ஒரே ஒரு நாடாகவும் விளங்குகின்றது. 2009 - 2011 வரையான காலப்பகுதிக்கான அடுத்த தவணைக்கான இலங்கையன் இயலுமைத் தன்மையினை மதிப்பீடு செய்தல் என்ற நிலைப்பாட்டுடன் 2008 திசெம்பரில் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை திட்டச் சலுகையினை ஐரோப்பிய ஒன்றியம் மீள வழங்கியது.

ஒத்தோபர் 2008 இல் ஆரம்பித்த மதிப்பீடுகள் ஓராண்டு காலப்பகுதியில் முடிவடைந்ததுடன் அதன் வெளிப்பாடு இலங்கைக்கு சாதகமானதாக இல்லை என்ற விடயம் 2009 ஒத்தோபரில் இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் அரசங்கமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கிய கருத்துக்களை மையப்படுத்தி தனது கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் தெளிவுப்படுத்தி நவெம்பர் 2009 இல் ஐரோப்பிய ஒன்றிற்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தது. இருப்பினும் பெப்ரவரி 2010 அன்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இலங்கைக்கான பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் + அடுத்த ஆறு மாதத்தில் நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துவது என அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தினை மாற்றியமைப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை தனது பக்க கருத்துக்களை முன்வைப்பதனூடாக மேற்கொண்டது. அதனடிப்படையில் இலங்கை அதிகார சபைகள் தொடர்ந்து பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் + தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் செயற்பட்டு வருகின்றது. இருப்பினும் இந்த முயற்சிகள் சார்பானதொரு வெளிப்பாட்டினை ஏற்பாடுத்தாத போதிலும் இலங்கையானது நியம பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டத்தினை 15 ஒகத்து 2010 முதல் ஐரோப்பிய சந்தையில் அனுபவிக்கும்.

**பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் + நன்மைகளற்ற சூழலிற்கு இயைபாக்கமடைதல்**

இலங்கை மத்திய வங்கியின் 2007 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்று "ஆரம்பத்தில் வழங்கப்பட்ட காலத்திற்கு மேலதிகமாக பரஸ்பரமற்ற சலுகைகளைத் தொடர்வது எல்லா விதிகளினதும் வெற்றிகரமான அமுல்ப்படுத்தலிலும் உறுதிப்பாட்டிலும் மாத்திரமன்றி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சமூக அரசியல் மற்றும் வர்த்தக கொள்கைகளால் தங்கியிருப்பதனால்,

முன்னுரிமைச் சலுகைகள் தொடர்ந்தும் கிடைப்பதில் எப்பொழுதும் இடர்நேர்வு காணப்படுகின்றது". (சி.கு 12- முன்னுரிமையிலான வர்த்தக நுழைவுகளும் அதன் தாக்கங்களும், பக்கம் 99) இது எதனைக் குறிப்பிடுகிறது என்றால் திறந்த வர்த்தக உடன் படிக்கைகளினால் பெறப்படும் பொருளாதார நன்மைகள் பொதுவாக குறுகிய காலத்திற்கே நிலைக்கும் என்பதுடன் திறந்த வர்த்தக உடன் படிக்கைக்காக பல பொருளாதாரங்களின் விருப்புக்களையும் குறைவடைய செய்யும். அத்துடன் குறுகிய கால வர்த்தக நன்மைகளுக்காக ஏற்றுமதியாளர்களால் உற்பத்தி திறன் மிக்க வளங்கள் தவறாக ஒதுக்கீடு செய்யப்படுவதனைத் தடுப்பதுடன் பன்னாட்டுச் சந்தை சூழலில் போட்டித் தன்மையினை அதிகரிக்கக் கூடிய வகையில் உள்நாட்டு கைத்தொழில்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் ஊக்கமளிக் கின்றது.

குறிப்பாக 2008 இன் இரண்டாம் காலப்பகுதியில் மீள வழங்கப்படக்கூடிய பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம்+ சலுகைகளின் தொடர்ச்சியின் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக அனைத்து தொடர்புடையோரும் தெரிந்து வைத்திருந்தனர். இருப்பினும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டமானது + சலுகைகள் ஆரம்பத்தில் இலங்கை ஏற்றுமதியாளர்கட்கு தமது உற்பத்திகளின் உயர் தரத்தினையும் உரிய நேரத்தில் வழங்கலை மேற்கொள்ளும் உறுதிப்பாட்டினையும் ஐரோப்பிய சந்தையில் தெரியப்படுத்துவதற்கு உதவி புரிந்தது. எனவே இந்த வர்த்தக உடன் படிக்கைகளின் மூலம் சேர்த்துக் கொண்ட அனுபவங்களும் நன்மதிப்பும் உற்பத்திகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு தயார்ப்படுத்தும் அதே வேளை அவர்களின் பாதையில் விரிந்த சந்தை வாய்ப்புகளில் புதிய சந்தைகளை கைப்பற்றுவதற்கும் உற்பத்தித் திறனுக்குமான முறைகளைச் சரிவரச் செயற்படுத்துவதனையும் வலுப்படுத்தும்.

சலுகைகள் வழங்கப்படாததொரு நிலைமை ஏற்படுமானால் அது கைத்தொழில்களில் வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தும்.தமது வியாபாரத்தை முன் கொண்டுச் செல்ல எந்த மாற்றங்களையும் மேற்க்கொள்ளாது பெரியளவில் சலுகைகள் தங்கியிருக்கும் சில கைத்தொழில்கள் சில வேளை அதிகளவில் பாதிக்கப்படக்கூடும். இருப்பினும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம்+நன்மைகள் இல்லாத சூழலில் சிறந்த முகாமைத்துவ செயற்படுத்துகையினால் உற்பத்தி செயற்பாடுகளில் செயற்றிறனை அதிகரித்தல் மற்றும் புதிய தொழில் நுட்பங்களை கையாழுதல் போன்ற பொறுத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் சில கைத்தொழில்கள் சவாலை எதிர் கொள்ளக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. தைத்த ஆடைகள் கைத்தொழிலானது குறிப்பாக, போட்டித்தன்மை வாய்ந்த தைத்த ஆடைக்கான நிலையை உலகத்தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் உட்கட்டுமானங்களுடன் தன்னகத்தே உருவாக்கிக்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க நகர்வுகளை மேற் கொண்டது. அதே வேளை வளர்ந்து வரும் கிடைச்சம நிலையான ஒருங்கிணைக்கப்பட்ட கைத்தொழிலான தைத்த ஆடைகள் கைத்தொழிலானது தமது போட்டியாளர்களிடையில் செயற்திறன் மிக்க வகையில் போட்டியிடுவதற்கு வடிவமைப்பு, பச்சை மற்றும் பொறுப்பு எண்ணக்கருவினை உற்பத்திச் செய்முறையில் பயன்படுத்தியது.

**முன்னோக்கிச் செல்வதற்கான பாதை**

மூன்று தசாப்த நீண்ட முரண்பாட்டின் முடிவானது இலங்கையை உட்கட்டுமானங்கள் மற்றும் உற்பத்தித் திறன் வாய்ந்த வளங்களின் அபிவிருத்தியினுடாக உயர் வளர்ச்சி பாதையினுள் பிரவேசிக்கச் செய்துள்ளது. நாட்டின் முன்னேற்றமடைந்த வர்த்தகம் மற்றும் முதலீட்டு சூழல் மற்றும் சாதகமான பேரண்டப் பொருளாதார சூழல் என்பன ஆரோக்கியமான வியாபாரத்துக்கு உறுதுணையாக இருந்து உதவிபுரிகின்றது. குறைந்த மட்டத்திலான பணவீக்கமானது உள்ளீட்டு செலவுகளின் மீதான அழுத்தத்தினை குறைத்ததுடன் குறைந்த வட்டி வீதமானது கடன்படு செலவினத்தினையும் குறைத்தது. என்றுமே இல்லாத உயர்ந்த மட்டத்திலான வெளிநாட்டு ஒதுக்குகளுடன் கூடிய முன்னேற்றமடைந்த அன்னியச் செலவாணி நிலைமை மற்றும் முன்னேற்றமடைந்த நாட்டிற்கான தரமிடலின் எதிர்பார்க்கைகள் வெளிநாட்டு வங்கிகளிடம் இருந்து போட்டி வட்டி வீதங்களில் கடன்களைப் பெறுவதற்கு உதவியது. சில முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க பெறுமதிக் குறைவுடனான அன்னியச் செலவாணியின் போக்கும் ஏற்றுமதியாளர்கள் பன்னாட்டுச் சந்தையில் தமது போட்டித் தன்மையை தக்க வைத்துக் கொள்ள உதவியது. எனவே வர்த்தக சலுகைகளில் தொடர்ந்து தொடர்ந்து தங்கியிருப்பது மட்டுமே இலங்கை பொருட்களின் போட்டித் தன்மையை பன்னாட்டுச் சந்தையில் தக்கவைப்பதற்கான மார்க்கம் என்பது ஒரு சரியான பார்வையாக அமையாது.

இலங்கை ஏற்றுமதியாளர்கள் முன்னைய பல்வேறு பாதகமான சூழ்நிலைகளில் தமது இயலுமாந்தன்மையினை நிரூபித்துள்ளார்கள். குறிப்பாக தைத்த ஆடைகள் துறையானது பல் நூலிழை ஏற்பாடுகள் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் குறைந்த செலவில் ஆடைகளை உற்பத்தி செய்யும் ஏனைய நாடுகளுடனான பலமான போட்டியினை தாக்குப் பிடித்தது. அதே நேரத்தில் புதியதும் சவால்மிக்கதுமான சூழ்நிலைகளுக்கு அனுசரித்து நடந்து கொண்டது மட்டுமின்றி உண்மையில் பல்வேறுப்பட்ட இடர் நேர்வுகளை பொருத்தமான முறையில் கைக்கொள்ளக்கூடிய பலமான தன்மையினை அடைந்ததுடன் உலகச் சந்தையில் அவர்களின் பங்கினை அதிகரித்துக் கொள்ளக் கூடியவர்களாகவுமிருந்தனர். இதே போன்று கடந்த 18 மாதங்களாக எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம் + இல்லாத சூழ்நிலையில் ஏற்படும் சவால்களையும் இலங்கைக் கைத்தொழில்கள் வெற்றி கொண்டு வலுவாக வளர்ச்சியடையும். இதன்படி பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை திட்டம்+ சலுகைகளின் நிறுத்தப்படக் கூடிய சாத்தியப்பாடுகள் கைத்தொழிலாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் தமது போட்டி ரீதியிலான சாதகத் தன்மையினை அதிகரிப்பதற்கும் உற்பத்திச் செயற்பாட்டில் செயற்திறனினை அதிகரிப்பதற்கும் உதவும் அதேவேளை அவர்கள் தமது உற்பத்திகளின் அளவினை பன்முகப்படுத்துவதற்கும் புதிய சந்தைகளை தேடுவதற்கும் தூண்டுவதுடன் நீண்ட காலத்தில் இலங்கை ஏற்றுமதிகளை மிகுந்த போட்டித்தன்மையுடையதாகவும் ஆக்கும்.

நன்மைகளை முழுமையாகப் பயன்படுத்தியிருக்கவில்லை. இலங்கையில் காணப்படும் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த சூழ்நிலையை கருத்திற் கொள்கையில், இந்தியா மற்றும் பாகித்தானிலுள்ள பாரிய சந்தைகளைக் கைப்பற்றுவதற்கான தளமாக வர்த்தக உடன்படிக்கைகளை பயன்படுத்துவதன் மூலம் இலங்கை முதலீடுகளைக் கவர்ந்து கொள்ள முடியும். இந்தியாவுடனான உத்தேச அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார உடன்படிக்கைகள், இணக்கப்பாட்டு மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் உற்பத்தித் தரங்கள் போன்ற இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையுடன் தொடர்பான பிரச்சனைகளை கட்டுப்படுத்தும். எனினும், முன்மதியுடனான அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கை பதின்மூன்று சுற்று தொழில்நுட்ப மட்டத்திலான பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னும் வர்த்தக செயலாளர் மட்டத்திலான மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்பும் தாமதமான நிலையிலேயே காணப்படுகின்றது. பாகித்தானுடனான அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கையின் விதியும் 2008 சனவரியில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கான அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றதன் பின்னர் இந்தியாவுடனான ஒப்பந்தத்தின் நிலையிலேயே காணப்பட்டது. இவ்வுடன்படிக்கைகள் வழங்கிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வது அவசியமானதாக இருப்பதுடன் மேலும் கூடுதலான பங்குடமைகளை உருவாக்கிக் கொள்வதற்கு முன்னோக்கிச் செல்லுதலும் வேண்டும்.

**ஐக்கிய அமெரிக்கா - இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கையின் கீழான கூட்டுச்சபை இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்கான நிறுவன ரீதியான பயன்மிக்க ஒழுங்கினை வழங்கியுள்ளது.** இது, இரு நாடுகளினதும் வர்த்தக அலுவலர்களிடையே கிரமமான உயர்மட்ட தொடர்புகளை வழங்கியமையானது, இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்கும் எந்தவொரு தடையினையும் அடையாளம் காணவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் அவர்களை இயலச் செய்தது. வர்த்தக முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கையின் 7ஆவது கூட்டம் 2009 ஒத்தோபரில் கொழும்பில் நடைபெற்றது. வர்த்தக முதலீட்டுக் கட்டமைப்பு உடன்படிக்கையின் பின்னணியில் இலங்கையின் முக்கிய நோக்கம் ஒன்றில் ஏதாவது சிறப்பு வர்த்தக முன்னுரிமைகள் அல்லது ஐ.அமெரிக்காவின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை வசதியினூடாக அதன் ஏற்றுமதிகளுக்கு, குறிப்பாக ஆடை வகைகளுக்கு அதிகரித்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதும் உற்பத்தி பாதுகாப்பு மற்றும் மூல ஒழுங்குவிதிகள் போன்றவற்றின் மீது மேலதிக நெகிழ்ச்சித்தன்மைகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பு உடன்படிக்கையில் புலமை சொத்துரிமை மற்றும் வர்த்தக இயலளவினைக் கட்டியெழுப்புதல் போன்ற துறைகளில் ஐ.அமெரிக்காவின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதுமாகும்.

**ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் கீழான துணைநில் குழுக்கூட்டங்களின் நான்காவது தொடர் அதன் ஆறு உறுப்பினர் நாடுகளான சீனா, வங்காள தேசம், கொரியக் குடியரசு லாவோஸ் மக்கள் சனநாயக குடியரசு மற்றும் இலங்கை என்பனவற்றினால் 2009 திசெம்பரில் முடித்து வைக்கப்பட்டது.** இவ்வுடன்படிக்கையின் கீழான தீர்வை தொடர்பான பேச்சுவார்த்தைகள் 2010 மாச்சில் இறுதிப்படுத்தப்படும். 4,270 உற்பத்திகள் உள்ளடங்கிய ஒன்று திரட்டப்பட்ட சலுகைப்பட்டியல் மூன்றாவது சுற்றில் இறுதியில் திரட்டப்பட்டதுடன் குறைந்த அபிவிருத்தி நாடுகளுக்கென பிரத்தியேகமாக வழங்கப்பட்ட பட்டியலானது உற்பத்திகளை உள்ளடக்குகின்ற நியதிகளில் விரிவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் உத்தேச தீர்வை வெட்டுக்கள் நான்காவது சுற்றில் ஆழமாக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையானது தீர்வையற்ற வழிமுறைகள், வர்த்தகத்தினை வசதிப்படுத்துவது மீதான கட்டமைப்பு உடன்படிக்கைகள் பணிகளிலுள்ள வர்த்தகம் மற்றும் முதலீடுகள் போன்ற மற்றைய துறைகளுக்கும் பேச்சுவார்த்தைகளை விரிவாக்குவதற்கான வழிமுறைகளையும் பின்பற்றியது. வர்த்தக வசதிப்படுத்தல் மற்றும் முதலீடு மீதான கட்டமைப்பு உடன்படிக்கைகள் 2009 திசெம்பரில் கொரியாவில் நடைபெற்ற 3ஆவது அமைச்சர்கள் மட்டக் குழுக் கூட்டத்தில் கையெழுத்தானது.

**தென்னாசிய சுதந்திர வர்த்தக பிராந்தியத்தின் தீர்மானங்களை மேற்கொள்ளும் உயர்ந்த அமைப்பும் உடன்படிக்கையின் நிருவாகத்திற்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் பொறுப்பாகவுள்ள உயர்ந்த அதிகார சபையுமான தென்னாசிய சதந்திர வர்த்தகப் பிராநியத்தினது அமைச்சரவையின் நான்காவது கூட்டம் 2009 ஒத்தோபரில் காத்மண்டு, நேபாளத்தில் நடைபெற்றது.** உறுப்பு நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிராந்திய உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட முன்னேற்றத்தினை அவதானித்தலுடன் பிராந்திய வர்த்தக இணைப்புக்களை விரிவாக்கி வலுப்படுத்துவதன் பொருட்டு தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிராந்திய உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் உறுப்பு நாடுகள் இணங்கிக் கொண்டன.


## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

### ஏற்றுமதிச் செயலாற்றம்

**உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட சுருக்கத்தின் விளைவாக ஏற்றுமதி வருவாய்கள் 2008இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 7,085 மில்லியனிற்கு 12.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** அனைத்து முக்கிய துறைகளும் வளர்ச்சியில் வீழ்ச்சியைப் பிரதிபலித்த வேளையில் ஒட்டுமொத்த ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு கைத்தொழில் துறையும் (831 சதவீதம்) அதனைத் தொடர்ந்து வேளாண்மைத் துறையும் (160 சதவீதம்) பெருமளவிற்கு பங்களித்தன.

**மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 23.9 சதவீதத்திற்கு வகைகூறிய வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2009இல் ஐ.அ.டொலர் 1,690 மில்லியனிற்கு 8.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** எனினும், இறுதிக் காலாண்டுப் பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றத்தில் காணப்பட்ட முன்னேற்றத்திற்கு பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட தேயிலை, இறப்பர் மற்றும் சிறு வேளாண்மைப் பண்டங்களுக்கான உயர்ந்த விலைகள் வழிவகுத்தன. 2009ஆம் ஆண்டிற்கான வருவாய்களில் 16.7 சதவீதத்திற்கு தேயிலை ஏற்றுமதிகளும்

வரைபடம் 5.3 பண்டங்களின்படி ஏற்றுமதிகள்




அதனைத் தொடர்ந்து சிறு வேளாண்மை உற்பத்திகளும் (3.4 சதவீதம்) தெங்கும் (2.4 சதவீதம்) இறப்பரும் (1.4 சதவீதம்) வகைகூறின.

**2009இல் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,185 மில்லியனிற்கு 6.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, ஆண்டின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்களவு விலை அதிகரிப்புக்கள் காணப்பட்ட போதும் நிரம்பல் பற்றாக்குறையின் காரணமாக ஏற்றுமதி அளவுகள் குறைவடைந்தமையே காரணமாகும்.** கென்யா மற்றும் சீனாவினைத் தொடர்ந்து உலகில் இலங்கை தேயிலையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதியாளராக விளங்கியது. உலக சந்தையில் காணப்பட்ட நிரம்பல் பற்றாக்குறைகள் அதேபோன்று இலங்கைத் தேயிலையின் உயர்ந்த தரத்தினை கொண்டிருக்கும் விதத்தில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை சீர்திருத்தங்களும் இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலும் இலங்கைத் தேயிலை விலைகள் 2009 காலப்பகுதியில் சிறந்த விலைகளைத் தொடர்ந்து கவர்ந்து கொள்ளவும் உதவியாக அமைந்தன. தேயிலையின் சராசரி விலை 2009 ஒத்தோபரில் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.65 கொண்ட உயர்ந்த சாதனை மட்டத்தினை அடைந்தது. எனினும், இலங்கை தேயிலையின் பெரும் பங்கினைத் தொடர்ந்தும் (57.8 சதவீதம்) தொகை வடிவிலேயே ஏற்றுமதி செய்து வருவதுடன், இது 2009இல் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.09 கொண்ட சராசரி விலையினைப் பெற்றவிடத்து பெறுமதி கூட்டப்பட்ட வடிவிலான அதாவது தேயிலை விலைகள் உடன் தேயிலை மற்றும் பச்சைத் தேயிலைகளின் ஏற்றுமதி விலைகள் கிலோகிராமொன்றிறகு ஐ.அ.டொலர் 5.36 - 7.53 இற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. உள்நாட்டிலும் சிறந்த விலைகளைப் பேணுவதற்கு பெறுமதிகூட்டல்களை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்வது அவசியமானதாகும். தேயிலைக் கைத்தொழிலின் உறுதித்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கைத் தேயிலை இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த தேயிலையுடன் கலக்கப்படுவதனைத் தடுக்கும் பொருட்டு இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் மீது கிலோகிராமொன்றிற்கு ரூ. 4 கொண்ட செஸ்சை விதித்தது. இலங்கையின் உயர்தர தேயிலைக்காக உயர் பெறுமதி கொண்ட சிறிய சந்தைகளை இலங்கை ஏற்கனவே உருவாக்கியுள்ளமையினால் இத் தொழிலில் தரத்தினைப் பேணுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியதுடன், இப் பிராந்தியத்திலுள்ள தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளிடையே இலங்கையை தேயிலை மையமாக அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளும் வழங்கப்படல் வேண்டும்.

**மற்றைய வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் 2009இல் வீழ்ச்சியடைந்தன.** 2009இல் தேயிலை ஏற்றுமதிகளில் 15.1 சதவீத அதிகரிப்புக் காணப்பட்ட போதும் இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 21.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் இறப்பர் விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். மசகொண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இணையாக செயற்கை இறப்பரின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இத்தகைய நிலைமைக்கு பங்களித்த முதன்மைக் காரணியாக விளங்கியது, உள்ளீட்டு உற்பத்திகளுக்கான தாழ்ந்த விலைகள் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைய முக்கிய காரணமாகவிருந்தது. எனினும், தென்னங்தும்பு மற்றும் தும்பினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கு சீனா, யப்பான், கொரியா மற்றும் சேர்மனியிலிருந்து கிடைத்த பாரிய கேள்வி தென்னந்தும்பு கைத்தொழிலை முன்னெப்பொழுதுமில்லாத மட்டத்திற்கு அபிவிரத்தி செய்ய உதவியது. சிறு வேளாண்மை உற்பத்திகளினது ஏற்றுமதி வருவாய்களும், உலகளாவிய கேள்வி குறைவடைந்தமையின் விளைவாக இப் பண்டங்களில் பெரும்பாலானவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டமையின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. எனினும், வெப்ப வலய பழவர்க்கங்கள் மற்றும் உடன் உற்பத்திகளுக்கான வளர்ந்து வரும் உலகளாவிய கேள்வி பாரிய அளவு வேளாண்மை நடவடிக்கைகளில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது.

**கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2009இல் ஐ.அ.டொலர் 5,305 மில்லியனிற்கு 13.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது, உலகளாவிய கேள்வி குறைவடைந்தமையின் விளைவாக அனைத்துத் துணைத் துறைகளும் சுருக்கமடைந்தமையினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.** எனினும், மொத்த ஏற்றுமதிகளில் 46.2 சதவீதத்திற்க வகைகூறும் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி ஒப்பீட்டு ரீதியில் தீங்கிற்குட்படவில்லை. மொத்த ஏற்றுமதிகளில் இன்னொரு 20.5 சதவீதத்திற்கு வகைகூறிய உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, இறப்பர், வைரங்கள் மற்றும் ஆபரணம், பொறி

அட்டவணை 5.4 ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2008(அ) | | 2009(ஆ) | | பெறுமதியில் மாற்றம்(ஆ) ஐ.அ.டொலர் மில்லியன் | வளர்ச்சி வீதம் (ஆ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (ஆ) % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **1,854.8** | **22.9** | **1,690.3** | **23.9** | **-164.5** | **-8.9** | **16.0** |
| தேயிலை | 1,271.5 | 15.7 | 1,185.1 | 16.7 | -86.4 | -6.8 | 8.4 |
| இறப்பர் | 125.1 | 1.5 | 98.6 | 1.4 | -26.5 | -21.2 | 2.6 |
| தெங்கு | 171.0 | 2.1 | 166.2 | 2.4 | -4.8 | -2.8 | 0.5 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 82.4 | 1.0 | 58.2 | 0.8 | -24.2 | -29.3 | 2.4 |
| ஏனையவை | 88.7 | 1.1 | 108.0 | 1.5 | 19.4 | 21.8 | -1.9 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 287.3 | 3.5 | 240.4 | 3.4 | -46.9 | -16.3 | 4.6 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **6,158.0** | **75.9** | **5,305.4** | **74.9** | **-852.5** | **-13.8** | **83.1** |
| உணவு, குடிப்பானங்கள் மற்றும் புகையிலை | 458.3 | 5.7 | 406.1 | 5.7 | -52.2 | -11.4 | 5.1 |
| புடவைகளும் ஆடைகளும் | 3,468.7 | 42.8 | 3,274.2 | 46.2 | -194.5 | -5.6 | 19.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 254.9 | 3.1 | 134.7 | 1.9 | -120.1 | -47.1 | 11.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 541.9 | 6.7 | 384.7 | 5.4 | -157.2 | -29.0 | 15.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 49.0 | 0.6 | 36.4 | 0.5 | -12.6 | -25.7 | 1.2 |
| தோல், பயணப்பொருட்களும் காலணியும் | 16.7 | 0.2 | 13.6 | 0.2 | -3.1 | -18.7 | 0.3 |
| பொறியும் கருவியும் | 461.0 | 5.7 | 330.3 | 4.7 | -130.7 | -28.3 | 12.7 |
| வைரம் மற்றும் ஆபரணங்கள் | 434.5 | 5.4 | 329.8 | 4.7 | -104.6 | -24.1 | 10.2 |
| ஏனைய கைத்தொழில்கள் உற்பத்திகள் | 473.1 | 5.8 | 395.6 | 5.6 | -77.6 | -16.4 | 7.6 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **97.8** | **1.2** | **88.7** | **1.3** | **-9.1** | **-9.3** | **0.9** |
| இரத்தினக்கற்கள் | 76.4 | 0.9 | 68.9 | 1.0 | -7.5 | -9.8 | 0.7 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 21.4 | 0.3 | 19.8 | 0.3 | -1.5 | -7.2 | 0.2 |
| **பாகுப்படுத்தப்படாதவை** | **0.0** | **0.0** | **0.0** | **0.0** | **0.0** | **-74.7** | **0.0** |
| **மொத்த ஏற்றுமதிகள் (இ) (ஈ)** | **8,110.6** | **100.0** | **7,084.5** | **100.0** | **-1,026.1** | **-12.7** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (உ)** | 108.33 | | 114.94 | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) மீன் ஏற்றுமதிகள் தவிர்ந்த
(ஈ) சீராக்கப்பட்டவை
(உ) ரூபா ஐ.அ.டொலர் செலவாணி வீதம்

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் ஆபரண அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

மற்றும் கருவிகள் போன்ற ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆண்டின் பின்னரைப் பகுதியில் சில முன்னேற்றங்களைக் காட்டியபோதிலும் 2009இல் சுருக்கமடைந்தன.

**கைத்தொழில் ஏற்றுமதிகளில் முக்கிய வகையாகவுள்ள புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2009இல் ஐ.அ.டொலர் 3,274 மில்லியன்களாக விளங்கி 5.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை பிரதிபலித்தன.** 2009இன் முதற்காலாண்டில் சிறந்த செயலாற்றத்தினை இவ் ஏற்றுமதிகள், கைத்தொழில் துறையினால் எதிர்பார்க்கப்பட்டவாறு இரண்டாம் காற்பகுதியில் உலகளாவிய மந்த நிலைமையினால் பாதிக்கப்பட்டன. இரண்டாம் காலாண்டுப் பகுதியில் ஏற்றுமதிச் செயலாற்றம் ஊக்கமளிப்பதாகவுள்ளது. ஆகவே இவ்வாண்டு காலப்பகுதியின் ஒட்டுமொத்த அபிவிருத்திகளைக் கருத்திற் கொள்கையில் இலங்கையின் புடவைகள் மற்றும் ஆடைகள் துறையே 2009இன் கைத்தொழில் ஏற்றுமதிகளில் குறைந்தளவில் பாதிக்கப்பட்டதொரு துறையாகக் காணப்பட்டது. ஆடைக் கைத்தொழில் துறையின் பலம் தொழில் முயற்சியாண்மையின் எதிர்கால நோக்கு மற்றும் மாற்றடைந்து வருகின்ற சூழ்நிலைகளுக்கு ஒத்துப்போவதற்கு விருப்பம் கொண்டுள்ள தன்மை என்பனவற்றிலேயே தங்கியுள்ளது. உயர்தர ஆடைகளின் நம்பமான வழங்குநர் என்ற பன்னாட்டுப் பெருமையை ஈட்டிக் கொள்ள உதவிய உலகத் தரம் வாய்ந்த தயாரிப்பு வசதிகளையும் ஒழுக்கவியல் சார்ந்த தயாரிப்பு நடைமுறைகளையும் இலங்கை கொண்டிருக்கிறது. உலகளாவிய சந்தை அபிவிருத்திகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் கைத்தொழிலிலுள்ள முக்கிய தொழிற்பாட்டாளர்கள் சூழல் - சிநேகபூர்வ தயாரிப்பு பொறிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

**உணவு, குடிபானம், புகையிலை வகையின் ஏற்றுமதி வருவாய்கள் 11.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் கொக்கோ மீன்சார்ந்த உற்பத்திகள் மற்றும் விலங்குத் தீன் என்பனவற்றின் ஏற்றுமதிகள் கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தன.** மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 2008இன் ஐ.அ.டொலர் 165 மில்லியனிலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 171 மில்லியனிற்கு அதிகரித்தன. ஆண்டின் பிற்பகுதியில் வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளுக்கப்பால்


மீன்பிடி மீதான பாதுகாப்புத் தடைகள் நீக்கப்பட்டமை மற்றும் மீன்பிடி உட்கட்டமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்ட இயலளவு விரிவாக்கம் என்பன இத் துறையிலிருந்தான வருவாய்கள் அதிகரிக்க உதவின. எனினும், இக் கைத்தொழில் ஆண்டிற்கு ஐ.அ.டொலர் 1 பில்லியன் வரையில் வளர்ச்சியடைக்கூடிய மிகப் பெருமளவு உள்ளார்ந்த வளங்களைக் கொண்டுள்ளது.

**உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி உலகளாவிய சந்தை தொடர்பான நிச்சயமற்ற தன்மை உயர்ந்த மட்டத்தில் காணப்படுவது என்பன இறப்பர் உற்பத்திகள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் அதேபோன்று பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றின் இலக்கை ஏற்றுமதிகள் மோசமாகப் பாதித்தன.** இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு வட அமெரிக்காவிலும் ஐரோப்பியாவிலும் உள்ள கைத்தொழில் மற்றும் ஊக்கித் துறைகளில் காணப்பட்ட கடுமையான நெருக்கடிகளின் விளைவாக உயர் ஏற்றுமதிகள் குறைந்தளவில் ஏற்றுமதி செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். ஒப்பீட்டு அடிப்படையில் கையுறைகள் மற்றும் கைப் பாதுகாப்பிற்கான சாதனங்களின் ஏற்றுமதிகள் சிறந்த முறையில் செயலாற்றி சுருக்கமடைந்த வரும் சந்தையில் மீள் எழுச்சியொன்றினைக் காட்டின. பதனிடப்பட்ட வைரங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதிகள் மற்றும் ஈருருளிகள், கம்பிகள் தந்திக் கம்பிகள் இழுக்கின்ற மற்றும் தள்ளுகின்ற கலம்கள், மின்மாற்றிகள், நிலையான மின்னோட்ட மாற்றுக் கருவி என்பனவற்றை உள்ளடக்கிய பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளும் 2009இல் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. 2009இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஏனைய முக்கிய துணை வகைகள் அனைத்திலும் சுருக்கம் காணப்பட்ட போதும் 2009இல் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதி வகையில் முனைப்பான ஏற்றுமதியாகக் காணப்படும் கடற்கலம்களின் ஏற்றுமதிகள் சிறந்த முறையில் செயலாற்றின. 2009 இல் இலங்கை இரண்டு கப்பல்களைக் கட்டி ஏற்றுமதி செய்ததன் மூலம் ஐ.அ.டொலர் 57 மில்லியன்களை ஏற்றுமதிப் பெறுகையாக உழைத்தது. அதேவேளை, பெறுமதிமிக்க அருங்கற்கள் மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க அருங்கற்களின் ஏற்றுமதியும் அதேபோன்று காரீயம் உட்பட ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

## இறக்குமதிச் செயலாற்றம்

**2009இல் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 10,207 மில்லியன்களாக விளங்கி முன்னைய ஆண்டினதைவிட 27.6 சதவீதம் கொண்ட கடுமையான வீழ்ச்சியைப் பிரதிபலித்தமைக்கு அளவு மற்றும் விலை இரண்டிலும் ஏற்பட்ட குறைப்புக்களே காரணமாகும்.** இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளும் அதாவது நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் அனைத்தும் வீழ்ச்சியடைந்தன. உலகம் முழுவதுதிலுமுள்ள முக்கிய பொருளாதாரங்களில் காணப்பட்ட மந்தமான வளர்ச்சி எண்ணெய் விலைகள் உட்பட குறைந்த பன்னாட்டு பண்ட விலைகளுக்கு வழிவகுத்தமை மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான தன்மை இறக்குமதி அளவுகளில் கடுமையான வீழ்ச்சியை தோற்றுவித்தமை என்பன இறக்குதிச் செலவினத்தில் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. எனினும், மொத்த

வரைபடம் 5.4 பண்டங்களின்படி இறக்குமதிகள்




இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் ஒப்பீட்டு ரீதியான பங்கு 2009இல் 19.3 சதவீதத்திற்கு அதிகரித்து, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிப் பங்கினைக் குறைத்துவிட்டது.

**2009இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,972 மில்லியனுக்கு 23.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** உணவு மற்றும் நீண்ட கால நுகர்வுப் பொருட்கள் இரண்டினதும் இறக்குமதிகள் மீதான செலவினம் குறைந்த இறக்குமதி விலைகளின் காரணமாக பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்தது. உணவு இறக்குமதிகள் மீதான செலவினம் குறைவடைந்தமைக்கு கோதுமையின் விலை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமை முக்கியமாகப் பங்களித்தது. இறக்குமதி அளவுகளில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும், கோதுமை மீதான செலவினம் 30.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு வழங்கல் தடைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் இறக்குமதிகளை ஊக்குவிப்பதற்காக பல தடவைகள் அரிசி மீதான தீர்வைகள் திருத்தப்பட்ட காலப்பகுதியான ஆண்டின் பின்னரைப் பகுதியில் உயர்ந்த இறக்குமதி அளவுகள் காணப்பட்ட போதும் 2009இல் மொத்த அரிசி இறக்குமதிகள் 523,000 மெற்றிக் தொன்களுக்கு 37.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2009ஆம் ஆண்டுப் பகுதியில் பன்னாட்டு சீனி விலைகள் விரைவாக அதிகரித்து கடந்த மூன்று தசாப்தங்களிலேயே மிக உயர்ந்த மட்ட மட்ட விலையைப் பதிவு செய்தமைக்கு உலகளாவிய நிரம்பல் தடைகளே காரணமாக இருந்தது. இதன் விளைவாக, சீனியின் சராசரி இறக்குமதி விலை 30.6 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் சீனி இறக்குமதி மீதான செலவினம் 2009இல் ஐ.அ.டொலர் 219 மில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏறத்தாழ 95 சதவீதமான பால்மா உற்பத்தியை உள்ளடக்கிய பால்

**அட்டவணை 5.5 இறக்குமதிகளின் உள்ளமைப்பு**

| வகை | 2008(அ) | | 2009(ஆ) | | பெறுமதியில் மாற்றம் (ஆ) ஐ.அ.டொ.மில் | வளர்ச்சி வீதம் (ஆ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (ஆ) % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **2,559.6** | **18.2** | **1,971.8** | **19.3** | **-587.8** | **-23.0** | **15.1** |
| உணவும் குடிப்பானங்களும் | 1,513.0 | 10.7 | 1,246.2 | 12.2 | -266.8 | -17.6 | 6.9 |
| அரிசி | 44.3 | 0.3 | 22.9 | 0.2 | -21.4 | -48.4 | 0.6 |
| சீனி | 206.4 | 1.5 | 218.7 | 2.1 | 12.3 | 5.9 | -0.3 |
| கோதுமை | 375.5 | 2.7 | 259.3 | 2.5 | -116.2 | -30.9 | 3.0 |
| ஏனையவை | 886.8 | 6.3 | 745.4 | 7.3 | -141.4 | -15.9 | 3.6 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 1,046.6 | 7.4 | 725.6 | 7.1 | -321.0 | -30.7 | 8.3 |
| **இடைநிலைப்பொருட்கள்** | **8,344.3** | **59.2** | **5,669.2** | **55.5** | **-2,675.1** | **-32.1** | **68.9** |
| பெற்றோலியம் | 3,368.2 | 23.9 | 2,166.6 | 21.2 | -1,201.6 | -35.7 | 30.9 |
| வளமாக்கி | 576.6 | 4.1 | 193.4 | 1.9 | -383.2 | -66.5 | 9.9 |
| இரசாயனங்கள் | 361.4 | 2.6 | 312.5 | 3.1 | -48.9 | -13.5 | 1.3 |
| ஆடைகளும் புடவைகளும் | 1,702.0 | 12.1 | 1,442.0 | 14.1 | -260.0 | -15.3 | 6.7 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,336.1 | 16.6 | 1,554.6 | 15.2 | -781.5 | -33.5 | 20.1 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **3,047.9** | **21.6** | **2,450.8** | **24.0** | **-597.1** | **-19.6** | **15.4** |
| பொறியும் கருவியும் | 1,330.7 | 9.4 | 1,012.8 | 9.9 | -317.9 | -23.9 | 8.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 438.8 | 3.1 | 436.3 | 4.3 | -2.5 | -0.6 | 0.1 |
| கட்டடப் பொருட்கள் | 942.6 | 6.7 | 714.5 | 7.0 | -228.1 | -24.2 | 5.9 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 335.9 | 2.4 | 287.3 | 2.8 | -48.6 | -14.5 | 1.3 |
| **பகுக்கப்படாத இறக்குமதிகள்** | **139.4** | **1.0** | **114.8** | **1.1** | **-24.6** | **-17.6** | **0.6** |
| **மொத்த இறக்குமதிகள் (இ) (ஈ)** | **14,091.2** | **100** | **10,206.6** | **100.0** | **-3,884.6** | **-27.6** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (உ)** | **108.33** | | **114.94** | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(ஈ) சீரக்கப்பட்டவை
(உ) ரூபா/ ஐ.அ.டொலர் செலவாணி வீதம்

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கை மத்திய வங்கி

உற்பத்திகளின் இறக்குமதிகள் 2009இல் ஐ.அ.டொலர் 166 மில்லியனுக்கு 44.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2009இல் நீண்ட கால நுகர்வுப் பொருள் வகையில் தனியார் உந்து ஊர்திகள், (71.1 சதவீதம்) உந்து ஈருருளிகள் (22.5 சதவீதம்) மற்றும் மின்னியல் கருவிகள் (52.7 சதவீதம்) என்பனவற்றின் இறக்குமதிகளில் கணிசமான குறைப்பொன்று காணப்பட்டது.

**2009இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 5,669 மில்லியனிற்கு 32.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.** பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பெற்றோலிய இறக்குமதிகளின் செலவினம் முன்னைய ஆண்டின் செலவினத்துடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,167 மில்லியனுக்கு 35.7 சதவீதத்தினால் குறைவடைய வழிவகுத்தது. மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை 2008இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 97.00 உடன் ஒப்பிடுகையில் 2009இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 63.95 ஆகக் காணப்பட்டது. எனினும், மசகெண்ணெய்யின் விலைகள் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைந்தமையுடன் சேர்ந்து ஆண்டின் இறுதியில் படிப்படியாக அதிகரித்தன. இதன் விளைவாக, எண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை 2009இன் இறுதிக் காலாண்டில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 76.52 இற்கு உயர்வடைந்தது. 2009இல் வளமாக்கி இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 193 மில்லியனுக்கு 66.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் நிலவிய குறைந்த விலைகளும் இறக்குமதி அளவு குறைவடைந்தமையும் காரணங்களாகக் காணப்பட்டன. பதனிடல் மற்றும் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்கான புடவைகள், வைரங்கள் மற்றும் இரசாயனங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2009இல் வீழ்ச்சியடைந்து மந்தமடைந்த உலக சந்தை நிலைமைகளைப் பிரதிபலித்தது.

**2009இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீது ஏற்பட்ட செலவினம் 19.6 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 2,451 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது.** இவ் வீழ்ச்சியானது பொறிகள், கருவிகள் மற்றும் கட்டடப் பொருட்களின் குறைந்த இறக்குமதிகளின் மூலம் பெருமளவிற்கு பிரதிபலிக்கப்பட்டது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான தன்மை கட்டுமானத் துறையினை பாதித்ததுடன் இதன் காரணமாக கட்டடப் பொருட்கள் அதேபோன்று பொறிகள் மற்றும் கருவிகளுக்கான கேள்வியும் குறைவடைந்து அப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் முறையே 23.9 சதவீதத்தினாலும் 24.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீள்கட்டுமானம் மற்றும்

அட்டவணை 5.6 முக்கிய இறக்குமதிகளின் அளவு (அ)

' 000 மெ.தொ.

| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008 (ஆ) | 2009 (இ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **52** | **12** | **88** | **84** | **52** |
| 1ஆம் காலாண்டு | 43 | 3 | 4 | 41 | 3 |
| 2ஆம் காலாண்டு | 4 | 2 | 7 | 28 | 3 |
| 3ஆம் காலாண்டு | 2 | 3 | 3 | 11 | 2 |
| 4ஆம் காலாண்டு | 3 | 4 | 74 | 4 | 44 |
| **கோதுமை** | **864** | **1,200** | **952** | **919** | **1,026** |
| 1ஆம் காலாண்டு | 272 | 287 | 204 | 272 | 288 |
| 2ஆம் காலாண்டு | 191 | 321 | 388 | 312 | 229 |
| 3ஆம் காலாண்டு | 174 | 331 | 274 | 153 | 220 |
| 4ஆம் காலாண்டு | 227 | 261 | 87 | 182 | 289 |
| **சீனி** | **418** | **525** | **481** | **575** | **467** |
| 1ஆம் காலாண்டு | 49 | 112 | 112 | 163 | 123 |
| 2ஆம் காலாண்டு | 167 | 137 | 138 | 131 | 110 |
| 3ஆம் காலாண்டு | 94 | 127 | 118 | 167 | 142 |
| 4ஆம் காலாண்டு | 108 | 149 | 113 | 114 | 92 |
| **பெற்றோலியம் (மசகெண்ணை)** | **2,008** | **2,151** | **1,938** | **1,853** | **2,066** |
| 1ஆம் காலாண்டு | 586 | 592 | 272 | 229 | 559 |
| 2ஆம் காலாண்டு | 581 | 535 | 557 | 525 | 417 |
| 3ஆம் காலாண்டு | 246 | 582 | 559 | 544 | 416 |
| 4ஆம் காலாண்டு | 595 | 442 | 550 | 555 | 674 |
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம்** | **1,823** | **2,302** | **2,314** | **2,386** | **2,154** |
| 1ஆம் காலாண்டு | 314 | 540 | 597 | 778 | 409 |
| 2ஆம் காலாண்டு | 396 | 587 | 646 | 583 | 605 |
| 3ஆம் காலாண்டு | 711 | 479 | 517 | 465 | 564 |
| 4ஆம் காலாண்டு | 402 | 696 | 554 | 560 | 575 |
| **வளமாக்கி** | **529** | **633** | **569** | **772** | **501** |
| 1ஆம் காலாண்டு | 168 | 166 | 62 | 125 | 46 |
| 2ஆம் காலாண்டு | 111 | 203 | 171 | 223 | 109 |
| 3ஆம் காலாண்டு | 142 | 119 | 131 | 216 | 123 |
| 4ஆம் காலாண்டு | 107 | 146 | 205 | 208 | 223 |

(அ) சீராக்கப்பட்டவை
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை
வரையறுக்கப்பட்ட செரண்டிப் (தனியார்) மா ஆலை
இலங்கை மத்திய வங்கி

அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு பாரிய ஊர்திகள் இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக 2009இன் இறுதிப்பகுதியில் போக்குவரத்துக் கருவிகளின் மீதான இறக்குமதிச் செலவினம் உயர்வடைந்த போதும் முழு ஆண்டிற்குமாக போக்குவரத்துக் கருவிகள் மீதான செலவினம் சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது.

### வர்த்தக நிலுவை


**2009இல் வர்த்தக நிலுவை பெருமளவிற்கு சுருக்கமடைந்தது.** 2009இல் வர்த்தகப் பற்றாக்குறை 2008இன் ஐ.அ.டொலர் 5,981 மில்லியனிலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 3,122 மில்லியனிற்கு 47.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த போதும் 2009ல் இறக்குமதிகள் மீதான செலவினம் கணிசமானளவிற்கு குறைவடைந்தமையினைப் பிரதிபலித்தது. 2009இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.4 சதவீதத்திற்கு வர்த்தக நிலுவை செழுமையானது.

### வர்த்தக மாற்று விகிதம்

**ஏற்றுமதி விலைகளைவிட இறக்குமதி விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாக இருந்தமையினால் 2009இல் வர்த்தக மாற்று விகிதம் 24.0 சதவீதத்தினால் முன்னேற்றமொன்றினைத் தோற்றுவித்தது.** வேளாண்மை ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்பட்ட 3.2 சதவீதம் கொண்ட குறைப்பின் விளைவாக 2009இல் ஏற்றுமதி விலைகள் 0.4 சதவீதத்தினால் மோசமடைந்தது. இவ்வாண்டுப் பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் இறப்பர், தெங்கு உற்பத்திகள், காய்கறிகள், பழங்கள் மற்றும் வாசனைப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. எனினும், இலங்கைத் தேயிலையின் சராசரி ஏற்றுமதியில் 2008 திசெம்பரிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து 2009 ஒத்தோபரில் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்தமட்டத்தினை அடைந்தமைக்கு ஆண்டின் இருமாத காலப்பகுதியிலும் சிறிதளவால் வீழ்ச்சியடைவதற்கு முன்னர் உலகளாவிய நிரம்பலில் காணப்பட்ட தடைகளே காரணமாகும். இதன் விளைவாக 2009ஆம் ஆண்டிற்கான ஆண்டுச் சராசரித் தேயிலை விலைகள் 1.8 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளின் விலைகள் 1.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தன.

**இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட 19.7 சதவீதம் கொண்ட பொதுவான வீழ்ச்சி அனைத்து முக்கிய இறக்குமதி வகைகளிலும் பிரதிபலித்தது.** நுகர்வுப் பொருட்களிடையே கோதுமை மற்றும் அரிசியின் விலைகள் கணிசமாக வீழ்ச்சியடைந்த வேளையில் சீனி மற்றும் பருப்பின் விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு, உலகச் சந்தையில் காணப்பட்ட வழங்கல் பற்றாக்குறையே காரணமாகும். இடைநிலைப் பொருட்களின் சராசரி விலைகள் 21.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மசகெண்ணெய்யின் விலைகள் 34.1 சதவீதத்தினால் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். வளமாக்கியின் இறக்குமதி விலைகளும் 2009இல் 51.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இப் போக்கிற்கு இணையாக, இடைநிலைப் பொருட்களின் மற்றைய அனைத்து துணை வகைகளினதும் விலைகள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. 2009இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி விலைகள் 14.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, பெரும்பாலும் இணைத்து துணை வகைகளினதும் விலைகள் வீழ்ச்சியடைந்தமையினை பிரதிபலித்தது. இதற்கு உலகளாவிய கேள்வி குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும், கட்டட நிருமாணப் பொருட்களின் குறிப்பாக சீமெந்தின் இறக்குமதி விலைகள் மற்றைய முதலீட்டுப் பொருட்களின் விலைகளைவிட கூடுதலான அளவில் வீழ்ச்சியடைந்தன.

வரைபடம் 5.5 வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தக சுட்டெண்



## சிறப்புக்குறிப்பு 8

## பொருளாதார அபிவிருத்தியில் எக்ஸிம் வங்கிகளின் பங்கு



பொதுவாக விரிவான நிதி மூலங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் எக்ஸிம் வங்கிகள் என குறிப்பிடப்படும் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிகள் முக்கியமாக நாட்டின் பன்னாட்டு வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காகவும் எல்லை கடந்த முதலீடுகளை வசதிப்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும். வர்த்தக வங்கித்தொழிலுக்கு அப்பால் கவனம் செலுத்தும் இச் சிறப்பியல்பு வாய்ந்த நிறுவனங்கள் இந் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தை அதிகரிப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. அவற்றின் குறிக்கோள்கள் அது போல் அவற்றின் பொருட்கள் மற்றும் பணிகள் நாட்டிற்கு நாடு வேறுபட்டுள்ள போதிலும், அநேகமாக அனைத்து எக்ஸிம் வங்கிகளும் கப்பல்படுத்துவதற்கு முன்னான கடன்கள், பொதியிடலுக்கான கொடுகடன்கள், ஏற்றுமதிக் கொடுகடன் நிதியிடல், செயற்பாட்டு மூலதனக் கடன்கள், ஏற்றுமதி உண்டியல்களின் கழிவிடல் என்பன போன்ற வர்த்தக நிதியிடல் வசதிகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கின்றன. இவை கடன் வழங்கும் நாட்டிலிருந்து பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதியை ஊக்குவிப்பதற்கு வெளிநாட்டு நிதியியல் நிறுவனங்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் அவற்றின் முகவர்களுக்கு கொடுகடன் வசதிகளை அதிகரித்தன. சில எக்ஸிம் வங்கிகள் தயாரிப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஏனை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் போன்ற வெளிநாட்டுச் செயற்றிட்டங்களைப் பொறுப்பேற்கும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு கொள்வனவுகளை வசதிப்படுத்தி நிதியியல் உதவியை வழங்குகின்றன. சில எக்ஸிம் வங்கிகளால் மேற்கொள்ளப்படும் ஏனைய செயற்பாடுகள் பெறுமதி கூட்டப்பட்ட தகவலை வழங்கல், தகவல், மதியுரைப் பணிகள் மற்றும் ஏனைய துணைப் பணிகள், ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி, பன்னாட்டு உத்தரவாதங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தக வசதிகளுக்கான நாணயக் கடிதம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பண்நாட்டு வர்த்தகத்திற்கு நிதியிடவும், ஊக்குவிக்கவும் எக்சிம் வங்கிகளை உருவாக்கியுள்ளன. யூஎஸ்எக்சிம் என அழைக்கப்படும் எக்ஸிம் வங்கியை 1935இல் நிறுவிய முதலாவது நாடு ஐக்கிய அமெரிக்க நாடாகும். யப்பான் மற்றும் கொரியா போன்ற அபிவிருத்தியடைந்த ஏனைய நாடுகள் 1950 இல் எக்ஸிம் யப்பானையும் 1976இல் எக்ஸிம் கொரியாவையும் நிறுவின. பன்னாட்டு வர்த்தகத்தின் பெரும் பகுதி அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கிடையே நிகழ்கின்ற போதிலும் வணிக வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுளின் பங்கு கடந்த இரு தசாப்தங்களாக அதிகரித்து வருகின்றது. 1982இல் எக்ஸிம் வங்கியை (இந்தியா எக்ஸிம் வங்கி) நிறுவிய முதலாவது அபிவிருத்தியடைந்த நாடாக இந்தியா விளங்குகின்றது. இதன் பின்பு எக்ஸிம் வங்கிகளை நிறுவிய ஏனைய நாடுகளாக நைஜீரியா, மலேசியா, துருக்கி, தாய்லாந்து மற்றும் சீனா என்பன விளங்குகின்றன. இலங்கை அரசு இலங்கையில் பல தரப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நிதியிடுவதற்கு இந்தியா, சீனா, கொரியா, ஹங்கேரி மற்றும் மலேசியா எக்சிம் வங்கிகளிலிருந்து பல வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடுகடன் வசதிகளைப் பெற்றுள்ளது.

ஆசியாவில் தோற்றம் பெற்று வரும் சந்தைகள் எதிர்வரும் ஆண்டுகளில் பொருளாதாரம் மற்றும் வர்த்தக விரிவாக்கத்தின் போக்கை நிர்ணயிக்குமென பரவலாக நம்பப்படுகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் பலமான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் காலடி எடுத்து வைப்பதற்கான வாய்ப்பை சமாதானத்தின் விடியல் இலங்கைக்கு ஏற்படுத்தியிருப்பதால் உலக பொருளாதாரத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தின் இணைப்புகளைப் பலப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். ஏற்றுமதி - இறக்குமதி வங்கியானது ஊக்குவித்தல், நிதியிடல் மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தையும் முதலீடுகளையும் வசதிப்படுத்தல் என்பன மூலம் இலங்கைப் பொருளாதாரத்தை உலகின் எஞ்சிய பகுதியுடன் ஒருங்கிணைப்பதில் பெறுமதிமிக்க பங்கை வகிக்க முடியும். இதன்படி, ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் நிதியியல் உதவியை வழங்கியும் பொருட்கள், பணிகள் மற்றும் மூலதனத்திலான பன்னாட்டு வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் வளர்ச்சி, தொழில்நிலை மற்றும் உண்மை வருமானத்தை அதிகரிப்பதற்கு ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட மூலதனத்தை வழங்குவதன் மூலம் இலங்கையில் எக்ஸிம் வங்கியை நிறுவுவதற்கான ஆரம்ப முயற்சியை இலங்கை மத்திய வங்கி எடுத்தள்ளது.

பொதுவாக, எக்ஸிம் வங்கிகள் கடன் வழங்கும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக பன்னாட்டு வர்த்தகததை வசதிப்படுத்துவதற்கு நிறுவப்பட்ட ஏனைய நிறுவனங்களுடன் போட்டியிடுவதை தவிர்த்துக் கொள்கின்றன. அவை ஒழுங்குமுறைப்படுத்துநரால் வங்கித்தொழில் நிறுவனங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட பொதுவான விதிகள் மற்றும ஒழுங்குவிதிகளின் தொகுதியைப் பின்பற்றி அவற்றின் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. இலங்கையில், வர்த்தக நிதியிடலை வழங்கும் வர்த்தக வங்கிகளுக்கு மேலதிகமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பன்னாட்டு வர்த்தகத்தை வசதிப்படுத்தும் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. உத்தேசிக்கப்பட்ட எக்ஸிம் வங்கி ஆரம்ப ஆண்டுகளில் உற்பத்திப் பொருளை மையப்படுத்திய அணுகுமுறையை எடுக்குமெனவும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிறுவனங்களின் அதிகார வரம்பிற்குக் கீழ் வராத வர்த்தக நிதியின் அனைத்து விடயங்களையும் வாடிக்கையாளருக்கு வழங்கக்கூடிய வாடிக்கையாளரை மையப்படுத்திய ஒரு அணுகு முறைக்கு படிப்படியாக வளர்ச்சியுறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எக்ஸிம் வங்கி அபிவிருத்திச் செயல்முறையின் பல்வேறு கட்டங்களில் ஏற்றுமதியாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் உதவ முடியும். குறுகிய தவணையில் இது ஏற்றுமதிச் சந்தைகளின் அபிவிருத்திக்கு உதவியளித்து குறுகிய தவணை நிதியிடல் சாதனங்கள் பலவற்றினூடாக ஏற்றுமதி உற்பத்தி இயலளவை விரிவாக்கவும் உதவ முடியும். நடுத்தர தவணையில், புதிய தொழில்நுட்பங்களை புகுத்துவதற்கு நிதியிடல் மற்றும் பணிச் செயற்றிட்டங்களின் ஏற்றுமதிகளை

ஊக்குவிப்பதன் மூலம் அவற்றின் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கும் உதவ முடியும். நீண்ட தவணையில் ஏற்றுமதிகளுக்கு உதவுவதற்கும், அதன் நிதியிடல் நிகழ்ச்சித் திட்டங்களைப் பூரணப்படுத்துவதற்கு அறிவைக் கட்டியெழுப்பல் மற்றும் சந்தையை கட்டியெழுப்பல் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கான மதியுரை மற்றும் தகவல் பணிகளை வழங்குவதற்கும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நிதியிடுவதன் மூலம் வர்த்தகத்தை வசதிப்படுத்தும் பங்கை எக்ஸிம் வங்கி வகிக்க முடியும்.

இலங்கை எக்ஸிம் வங்கியால் வழங்கப்படும் வசதிகளூடாக குறிப்பிடத்தக்க நன்மைகளை அடையக் கூடியதாக இருக்கும். இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஏனைய நாடுகளிலிருந்தான அரசின் உதவியுடன் செயற்படும் போட்டியாளர்களுடன் சமமான வாய்ப்புடன் வெளிநாட்டுச் சந்தைகளில் போட்டியிடக் கூடியதாக இருக்கும். மேலும், தேவையான உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியிடலை வழங்குவதன் மூலம் வெளிநாட்டில், உட்கட்டமைப்பு வசதிகள், பொறி மற்றும் கட்டடங்களின் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கத்திற்காக எக்ஸிம் வங்கி பணிகளின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும். இது, நாட்டிற்கு கூடிய வெளிநாட்டுப்பண அனுப்பல்களை உருவாக்க உதவும். குறிப்பாக கணனி மற்றும் இயந்திரவியல் பொறியியலாளர்கள் போன்ற உயர் கல்விகற்ற தொழில்சார் நிபுணர்களுக்கு கூடிய தொழில்வாய்ப்புவசதிகளை உருவாக்கும். எனவே, எக்ஸிம் வங்கியை நிறுவுதல் இலங்கையின் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதற்கும், வளர்ச்சியை வசதிப்படுத்துவதற்கும், தொழில்நிலையை உருவாக்குவதற்கும் மக்களின் உண்மை வருமானத்தை அதிகரிப்பதற்கும் ஆயத்தமாக இருக்கிறது.

### வர்த்தகத்தின் போக்கு

**2009இல் இலங்கையின் ஏற்றுமதிகள் சென்றடையும் நாடுகளாக மேற்கு நாடுகள் தொடர்ந்தும் விளங்கிய வேளையில் ஆசிய நாடுகள் இலங்கையின் இறக்குமதி நாடுகள் வரிசையில் முன்னணியில் விளங்கின.** 2009இல் ஐக்கிய அமெரிக்காவையும் ஐக்கிய இராச்சியமும் இலங்கைக்கான மிகப்பெரும் ஏற்றுமதி நாடுகளாக விளங்கிய வேளையில் இந்தியா சிங்கப்பூர் மற்றும் சீனா என்பன மிக முக்கியமான இறக்குமதி நாடுகளாக விளங்கின. இலங்கையின் இறக்குமதிகளில் ஏறத்தாழ 17.8 சதவீதத்திற்கு வகைகூறியதன் மூலம் 2009இல் இந்தியா நாட்டின் மிகப் பெரும் வர்த்தகப் பங்காளராக தோற்றம் பெற்றது.

**இலங்கைக்கான முக்கிய ஏற்றுமதிச் சந்தையான ஐக்கிய அமெரிக்கா ஏற்றுமதிகளில் 22.2 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் இத்தாலியும் காணப்பட்டன.** இச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய விடயங்களாக புடவையும் ஆடைகளும் காணப்பட்டன. ஐரோப்பிய நாடுகளிடையே ஐக்கிய இராச்சியத்திற்குப் புறம்பாக (14.4 சதவீதம்), இத்தாலி (6.2 சதவீதம்), பெல்ஜியம் (5.1 சதவீதம்), சேர்மனி (4.9 சதவீதம்) என்பனவும் ஏற்றுமதிச் சந்தைகளைக் கொண்ட முக்கிய நாடுகளாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. நாட்டின் புடவை மற்றும் ஆடை உற்பத்திகளில் ஏறத்தாழ 16.9 சதவீதம் சேர்மனிக்கும் இத்தாலிக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் இலங்கையின் பதனிடப்பட்ட வைரங்களில் பெரும்பாலும் 75.8 சதவீதம் வைரத்திற்கான உலகின் முன்னணிச் சந்தைகளிலொன்றான பெல்ஜியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 2000ஆம் ஆண்டில் இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டமையினைத் தொடர்ந்து இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் கடுமையாக அதிகரித்து, 2009ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 4.5 சதவீதத்திற்கு வகைகூறின. மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் முறையே ஏறத்தாழ 15.1 சதவீதத்திற்கும் 10.9 சதவீதத்திற்கும் வகைகூறிய ருசியாவும் ஈரானும் 2009இல் தேயிலை ஏற்றுமதியின் முக்கிய நாடுகளாக தொடர்ந்தும் விளங்கின. ஒன்றாகப் பார்க்கையில் மத்திய கிழக்குப் பிராந்தியம் இலங்கைத் தேயிலையின் மிக முக்கியமான சேரிடமாக விளங்கி வருகிறது.


**2009இல் இந்தியா இறக்குமதிகளின் பாரிய மூலமாக தொடர்ந்தும் விளங்கி வருவதுடன் 2009இல் இறக்குமதிகளில் ஏறத்தாழ 17.8 சதவீதத்திற்கும் வகைகூறியது.** இந்தியாவிலிருந்தான முக்கிய இறக்குமதிகள் சுத்திகரிக்கப்பட்ட பெற்றொலிய உற்பத்திகள், உந்து ஈருருளிகள் மற்றும் முச்சில்லு வண்டிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. சிங்கப்பூரும் சீனாவும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பெரிய இறக்குமதி மூலங்களுக்கான நாடுகளாக விளங்கின. சிங்கப்பூரிலிருந்தான முக்கிய இறக்குமதிகள் வளமாக்கி, பெற்றோலிய உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்த வேளையில் சீனாவிலிருந்தான முக்கிய இறக்குமதியாகப் பருத்தி விளங்கியது. ஈரானும், கொங்கொங்கும் இலங்கைக்கான இறக்குமதிகளின் நான்காவது மற்றும் ஐந்தாவது பெரிய மூல நாடுகளாக விளங்குகின்றன. ஈரான் மற்றும் கொங்கொங்கிலிருந்தான இறக்குமதிகள் முக்கியமாக மசகெண்ணெய் மற்றும் துணி வகைகளை உள்ளடக்கியிருந்தன.

## 5.4 பணிகளிலுள்ள வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை


### பணிகளிலுள்ள வர்த்தகம்

**மோதல்கள் முடிவடைந்தமையின் காரணமாக உள்நாட்டு வியாபார சூழல் மேம்பட்டமை, உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2009இல் பணிகள் கணக்கு மிகையொன்றினைப் பதிவு செய்தது.** போக்குவரத்து, பயணம், தொலைத் தொடர்பூட்டல் மற்றும் கட்டட நிருமாணப் பணிகள் துறைகளில் காணப்பட்ட மெதுவான போக்கின் காரணமாக 2009இன் முதலரைப்பகுதியில் பணிகள் கணக்கின் மிகை விரைவாக சுருக்கமடைந்தது. எனினும், ஆண்டின் பின்னரைப்பகுதியில் சுருக்கத்தன்மை

வரைபடம் 5.6 நாடுகளின்படி ஏற்றுமதிகள்




வரைபடம் 5.7 நாடுகளின் இறக்குமதிகள்




இல்லாமல் போனமையானது 2009இற்கான பணிகள் கணக்கில் ஐ.அ.டொலர் 391 மில்லியன் கொண்ட திரண்ட மிகையொன்றைத் தோற்றுவித்தது. குறைந்த மட்டத்திலேனும் போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள், கட்டுமானம் மற்றும் காப்புறுதிப் பணிகள் என்பன இவ்வாண்டுப் பகுதியில் மிகைகளைப் பதிவு செய்தன.

## போக்குவரத்துப் பணிகள்

**பணிகள் கணக்கிலுள்ள முக்கிய துறையான போக்குவரத்து முதலரைப்பகுதியில் காணப்பட்ட பின்னடைவுகளிலிருந்தும் மீண்டு, ஆண்டின் பின்னரைப்பகுதியில் திருப்திகரமான மீட்சியைக் காட்டியது.** பயணிகள் கடடணம் சரக்குக் கட்டணங்கள் மற்றும் துறைமுகத்துடன் தொடர்பான பணிகள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் 2008இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முதலரைப்பகுதியில் 19 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், ஆண்டின் பின்னரைப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் போக்குவரத்துப் பணிகளின் அனைத்து துணைத் துறைகளும் சிறந்த செயலாற்றத்தைக் கொண்டிருந்தமையினால் போக்குவரத்துப் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் 2009இல் அ.டொலர் 865 மில்லியனை அடைந்தது. இருப்பினும் ஆண்டு முழுவதையும் பொதுவாகப் பார்க்கையில் இத் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல் 13.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, போக்குவரத்தின் பேரிலான வெளிப்பாய்ச்சல் 10.1 சதவீதத்தினால் பன்னாட்டு வர்த்தகத்தின் வீழ்ச்சிக்கும், பொழுதுபோக்கு, தொழில் வாய்ப்பு மற்றும் கல்வி போன்றவற்றின் மீது இலங்கையர்களினால் செலவிடப்பட்ட பணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கும் இணையாக வீழ்ச்சியடைந்தது.

**2009இல் பயணிகள் கட்டணங்கள் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் முன்னைய ஆண்டின் தொடர்பன காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 404 மில்லியனிற்கு 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** வியாபாரம் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய இரண்டிற்குமாக இலங்கைக்கு பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கை பின்னரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த போதும் பயணிகள் கட்டணங்களின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் 2008இன் பின்னரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்தமைக்கு 2009இல் எரிபொருள் மேலதிகக் கட்டணம் புறக்கீடு செய்யப்பட்டமையினைத் தொடர்ந்து வான் கட்டணங்கள் குறைவடைந்தமையே காரணமாகும்.

**உலகளாவிய பொருளாதார சரிவின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் சரக்கு மற்றும் துறைமுகத்துடன் நடவடிக்கைகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சலில் பின்னடைவுகள் காணப்பட்ட போதும், இத் துணைகள்துறை ஆண்டின் பின்னரைப்பகுதியில் மீட்சியை எடுத்துக்காட்டியது.** ஆசியா முழுவதிலும் உலகின் எஞ்சிய பகுதிகளிலும் வர்த்தக அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இவ்வாண்டுப் பகுதியில் இலங்கையின் துறைமுகப் பணிகளின் அளவல் வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது. எனினும் மோதல்கள் முடிவடைந்தமையினைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து நீர்க்கல எரிபொருள் பணிகள் உட்பட துறைமுகம் தொடர்பான பணிகள் மேம்பாடடைந்தன. இதன் விளைவாக, ஆண்டின் முதலரைப்பகுதியில் 32.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த கப்பற் சரக்கு மற்றும் துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் 2009இல் 14.5 சதவீத் கொண்ட வீழ்ச்சியை அறிவிக்குமளவிற்கு மேம்பாடடைந்தது.

**புதிய துறைமுகங்களின் நிருமாணம் மற்றும் ஏற்கனவேயுள்ள துறைமுகங்களின் மேம்பாடு என்பன பன்னாட்டு கடன் வர்த்தகத்தில் இலங்கையினை வலுவானதொரு முறையில் பிரசன்னப்படுத்துவதன் மூலம் நடுத்தர காலத்தில் துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் பெரும் பாய்ச்சலொன்றை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.** பன்னாட்டு கடல்மார்க்கங்களுக்கு மிக அண்மித்ததாகவுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கட்டடம் I இனை 2011இல் நிறைவு செய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. இது, தொகை, பொதுவான மற்றும் சரக்குக் காவிகளுக்கு வசதிகளை அளிப்பதன் மூலம் கூடியளவு வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை உருவாக்குமென்பதுடன் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்கும். கடற்போர், வேலை நிறுத்தம், பயங்கரவாதம் மற்றும் அவற்றுடன் தொடர்பான ஆபத்துக்கள் என்பன தொடர்பாக உலகிலுள்ள மிகப் பழையதும் சுறுசுறுப்பான காப்புறுதிச் சந்தைத் தலமுமான லண்டன் லொயட்ஸ் சங்கத்தினால் பேணப்படும் “பட்டியலிடப்பட்ட பிராந்தியம்” என்ற பட்டியலிலிருந்து நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவது, வெளிநாட்டு முதலீடுகளுக்கும் கடல்மார்க்க வியாபாரங்களுக்கும் மிக உயர்ந்த சூழ்நிலையை உருவாக்குகின்ற வேளையில் இலங்கைத் துறைமுகங்களுக்கு கூடியளவு கப்பல்களையும் கவரும்.

## பயணம் மற்றும் சுற்றுலா

**உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்தமையானது இலங்கையில் பயணம் மற்றும் சுற்றுலாத்தொழில் துறைக்கு புதியதொரு யுகத்தினைத் திறந்திருக்கிறது.** முதல் ஒரு சில மாத காலப்பகுதியில் கடுமையான வீழ்ச்சி காணப்பட்ட போதும் சுற்றுலா வருகையின் எண்ணிக்கை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீதத்தினால் அதிகரித்தது. 2009இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18.3 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தில் வீழ்ச்சியடைந்திருந்த வருகைகள் மேயில் மோதல்கள் முடிவடைந்ததுடன் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து, அடுத்து வந்த 7 மாத காலப்பகுதியிலும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 20.4 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தில் வளர்ச்சியடைந்தது. சூழ்நிலைகள் மாற்றமடைந்தமையினால் சில நாடுகளினால் விடுக்கப்பட்ட மோசமான பயண ஆலோசனைகள் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது தளர்த்தப்பட்டன. 2009இல் சுற்றுலா வருகைகளில் பெரும் எண்ணிக்கையினர் இந்தியாவிலிருந்தும் (83,634) அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியத்திலிருந்தும் (81,594) மாலைதீவு (31,916), சேர்மனி (29,654) ஆகிய நாடுகளிலிருந்தும் வகை தந்தனர். மத்திய கிழக்கு, பிரான்சு, அவுத்திரேலியா, சிங்கப்பூர் மற்றும் மலேசியா என்பனவற்றிலிருந்தான வருகைகளும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கப் பங்களித்தன. ஏறத்தாழ 80 சதவீதத்தினால் விடுமுறைக்காகவும் களியாட்டத்திற்காகவும் வருகை தந்த வேளையில் 8.6சதவீதத்தினால் வியாபார நோக்கங்களுக்காக வருகை தந்தனர். 2009இல் உலகளாவிய பொருளாதார மந்தம் மற்றும் சில நாடுகளில் பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் கடுமையாகப் பரவியமை என்பன பயணம் செய்வதிலிருந்தும் மக்களை தடுத்துவிட்டன.

அட்டவணை 5.7

தேறிய பணிகள்,வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்கள் (அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் 2008 | ஐ.அ.டொலர் மில்லியன் 2009 (ஆ) | ரூபா மில்லியன் 2008 | ரூபா மில்லியன் 2009(ஆ) |
|---|---|---|---|---|
| 1. போக்குவரத்து பணிகள் | 298 | 235 | 32,335 | 26,822 |
| 2. பயணம் | -86 | -61 | -9,297 | -7,094 |
| 3. தொடர்பூட்டல் பணிகள் | 26 | 26 | 2,756 | 3.004 |
| 4. கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள் | 230 | 245 | 24,917 | 28,161 |
| 5. கட்டவாக்கப் பணிகள் | 35 | 34 | 3,774 | 3,936 |
| 6. காப்புறுதிப் பணிகள் | 22 | 28 | 2,337 | 3,247 |
| 7. ஏனைய வியாபாரப் பணிகள் | -109 | -100 | -11,757 | -11,450 |
| 8. அரச செலவினம் வே.எ.கு | -14 | -16 | -1,508 | -1,846 |
| **மொத்த தேறிய பணிகள்** | **401** | **391** | **43,557** | **44,780** |
| 1. ஊழியர்களின் இழப்பீடு | -14 | -11 | -1,483 | -1,233 |
| 2. நேரடி முதலீடு | -464 | -223 | -50,256 | -25,573 |
| 3 வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -495 | -254 | -53,293 | -29,007 |
| **மொத்த தேறிய வருமானம்** | **-972** | **-488** | **-105,032** | **-55,814** |
| 1. தனியார் | 2,565 | 2,927 | 277,711 | 336,578 |
| 2. பொது அரசு | 101 | 77 | 10,928 | 8,920 |
| **மொத்த தேறிய நடைமுறை மாற்றல்கள்** | **2,666** | **3,005** | **288,639** | **345,498** |

(அ) இவ் வெளிபடுத்துகை ப.நா. நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லுகின்றது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2009இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 350 மில்லியனுக்கு 2.2 சதவீதத்தினால் அதிகரித்தன.** மோதல் நிகழ்ந்த காலப்பகுதியல் ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த சுற்றுலா விடுதிகளின் அறைகளில் தங்கும் வீதம் அதன் பின்னர் படிப்படியாக ஆண்டின் இறுதிப்பகுதியில் அதிகரித்தது. அதிகரித்த கேள்வியைக் கருத்திற் கொண்டு இலங்கையின் நட்சத்திர தர சுற்றுலா விடுதிகள் தங்குமிடத்திற்கான அவற்றின் கட்டணங்களை அதிகரித்துக் கொண்ட போதும் இலங்கையை மொத்த பன்னாட்டு சுற்றுலா நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை இன்னமும் மிக போட்டித்தன்மையினைக் கொண்டதாகவே இருக்கின்றது. 2010இல் சுற்றுலா வருகைகளின் எண்ணிக்கை 26 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 577,000 வருகைகளாகி 2004இல் பதிவு செய்யப்பட்ட 566,000 வருகைகளை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுவதனால் சுற்றுலா விடுதிகளின்

**அட்டவணை 5.8 சுற்றுலாவின் செயலாற்றம்**

| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008(அ) | 2009(ஆ) | வளர்ச்சி வீதம் 2008(அ) | வளர்ச்சி வீதம் 2009(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா பயணிகளின் வருகை | 549,308 | 559,603 | 494,008 | 438,475 | 447,890 | -11.2 | 2.1 |
| பொழுதுபோக்கு | 382,321 | 392,766 | 331,238 | 321,079 | 358,188 | -3.1 | 11.6 |
| வியாபாரம் | 92,879 | 96,981 | 52,116 | 37,261 | 38,473 | -28.5 | 3.3 |
| ஏனையவை | 74,108 | 69,856 | 110,654 | 80,135 | 51,229 | -27.6 | -36.1 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் ('000) | 4,754 | 5,793 | 4,940 | 4,166 | 4,076 | -15.7 | -2.2 |
| தங்கும் அறை குடியிருப்பு விகிதம் (%) | 45.4 | 47.8 | 46.2 | 43.9 | 48.4 | -5.0 | 10.3 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ. மில்லியன்) | 36,377 | 42,586 | 42,571 | 37,094 | 40,133 | -12.9 | 8.2 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூ) | 66,223 | 76,100 | 86,175 | 84,598 | 83,740 | -1.8 | -1.0 |
| மொத்த தொழில்நிலை (எண்ணிக்கை) | 125,004 | 133,558 | 145,239 | 124,456 | 125,153 | -14.3 | -100.0 |
| நேரடி | 52,085 | 55,649 | 60,516 | 51,857 | 52,147 | -14.3 | -100.0 |
| மறைமுகம் | 72,919 | 77,909 | 84,723 | 72,599 | 73,006 | -14.3 | -100.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

அறைகளை அதிகரிப்பதற்கும் பாரிய எண்ணிக்கையான சுற்றுலா பயணிகளின் தேவைகளை ஈடுசெய்யும் விதத்தில் சுற்றுலா துறையுடன் தொடர்பான உட்கட்டமைப்பினையும் வசதியையும் தரமுயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுற்றுலாக் கைத்தொழில் பாரிய வருமானத்தினை உருவாகக்கூடிய உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருப்பதனைக் கருத்திற் கொண்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, மோதல்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அதேபோன்று முதன்மைச் சுற்றுலா மையங்களாக தெரிவு செய்யப்பட்ட தீவின் மற்றைய பகுதிகளிலும் சுற்றுலா துறையினை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டிருக்கின்றது. அரசாங்கம், தீவின் மிகச் சிறந்த கடற்கரையோரங்கள் என அறியப்பட்ட கிழக்கு மாகாணத்தின் முதன்மைப் பொழுதுபோக்கு மையங்களாக அறுகம்குடா, பாசிக்குடா மற்றும் திருகோணமலை போன்ற அம் மாகாணங்களிலுள்ள கரையோர நகரங்களை மேம்படுத்துவதற்கு எண்ணியுள்ளது. கற்பிட்டி மற்றும் உள்நாட்டில் அடையாளம் காணப்பட்ட தெரிந்தொடுக்கப்பட்ட தீவுகளை கவர்ச்சிகரமான சுற்றுலா அமைவிடங்களாக அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்திச் சபையும் சுற்றுலாப் பயணிகளின் பல்வேறுபட்ட பிரிவினரையும் கவரும் விதத்தில் தொடர்ச்சியான விழாக்களை ஊக்குவித்து வருகின்றது.

### தொலைத் தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள்

**2009இன் முதலரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்திருந்த தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான மொத்த உட்பாய்ச்சல் ஆண்டின் பின்னரைப்பகுதியில் உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமையுடன் நன்கு செயலாற்றியது.** இருப்பினும், இவ்வாண்டினை முழுமையாகப் பார்க்கும் பொழுது தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான மொத்த வருவாய்களும் மொத்த வெளிப் பாய்ச்சல்களும் ஏறத்தாழ முறையே 1.0 சதவீதம் மற்றும் 2.7 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. நாட்டின் தொலைத் தொடர்பூட்டல் கைத்தொழில் குறிப்பாக, கடந்த அண்மைக் காலத்தில் மாபெரும் வளர்ச்சியைப் பதிவு செய்த செல்லிட தொலைபேசித் துறையில் பாரிய வளர்ச்சிக்கான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கிறது. முன்மொழியப்பட்ட சிறிலங்கா ஸ்பேஸ் ஏஜென்சி நிறுவப்பட்டதன் பின்னர் திட்டமிடப்பட்ட செய்மதி தொழில்நுட்பத்தினைப் பெற்றுக் கொள்வது, வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் விதத்தில் முழு உள்ளார்ந்த வளத்தினையும் பயன்படுத்திக் கொள்வதற்கு இலங்கையை இயலச் செய்வதுடன் வசதிகளையும் வழங்கும். தொழில்நுட்ப புதுப்புது விடயங்களின் இணைவுடன் பன்னாட்டு நேரடி தொடர்பு பரந்த தள இணையத்தள வலையமைப்பு, சென்மதி மற்றும் கம்பி தொலைக்காட்சி இணைப்பு என்பன மேம்பட்டன. இதன் விளைவாக தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தகவல், தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட வெளி மூலங்களிலிருந்தான வியாபார செய்முறை மற்றும் வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற அறிவுச் செய்முறை போன்ற மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகள் பெருமளவு வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட துறைகளாகத் தொடர்ந்தும் விளங்கின.** தகைமையுடைய தகவல் தொழில்நுட்ப பொறியிலாளர்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளமை, உயர்ந்த கல்வி அறிவு வீதம், வலுவான ஆங்கில மொழித் தேர்ச்சி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான ஆற்றல்வாய்ந்த சட்டக் கட்டமைப்பு, பன்னாட்டு தொலைத் தொடர்பூட்டல் நுழைவு வழி தாராளமயமாக்கப்பட்டுள்ள தன்மை போன்றவற்றின் காரணமாக இலங்கை தகவல் தொழில்நுட்பத்திலும் தகவல்

தொழில்நுட்ப இயலுமைப் பணிகளிலும் போட்டித்தன்மைமிக்க அநுகூலங்களைக் இலங்கை கொண்டுள்ள ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற அதன் முக்கிய சந்தைகளைக் கொண்ட நாடுகளில் பொருளாதாரம் மெதுவான நிலையில் காணப்பட்ட போதும் இத் துறையானது 2009இல் ஏறத்தாழ 6.5 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் காட்டியது.

### வருமான உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்

**பற்றாக்குறை 2008இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 972 மில்லியனிலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 488 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் வருமானக் கணக்கு குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.** இது, இவ்வாண்டுக் காலப்பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் உயர்ந்து ஒன்று சேர்ந்த வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் மீதான வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஓரளவு காரணமாக வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் குறைவடைந்தமையுடன் இணைந்தமையின் மூலம் பெறப்பட்டது. மேலும், யூரோ மற்றும் இசுடேர்லிங் பவுண் போன்ற ஒதுக்கில் வைத்திருக்கப்பட்ட நாணயங்கள் ஐ.அ.டொலருக்கெதிராக உயர்வடைந்தமை ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் வர்த்தப்படுத்தல் பிணையங்களின் சந்தைப் பெறுமதிப்படியான மதிப்பீட்டிலிருந்து கிடைத்த செலாவணி இலாபமும் உயர் பெறுமதிகளை விளைவித்தன. இவ்வாண்டு காலத்தில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மேம்பாடடைந்தமையின் காரணமாக வர்த்தக வங்கிகளை உள்ளடக்கிய தனியார் துறையின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள் மீதான தேறிய வட்டி வருவாய்களும் சாதகமான அபிவிருத்திகளைக் காட்டின. அதேவேளை வருமானக் கணக்கின் வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 603 மில்லியனுக்கு 35.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டு தொழில்முயற்சிகளினால் தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களில் குறிப்பிடத்தக்க குறைப்புக் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். இத் தொழில் முயற்சிகளின் இலாபம் மற்றும் பங்கிலாபங்களின் குறிப்பிடத்தக்கதொரு பகுதி ஏற்கனவேயுள்ள தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்காக 2009இல் மீள முதலீடு செய்யப்பட்டதானது 2008இல் மீள் முதலீடு செய்யப்பட்டதனை விடக் குறைவாகும்.

### நடைமுறை மாற்றல்கள்

**மெதுவடைந்த உலகப் பொருளாதாரத்தின் பின்னணியில் உள்முகப் பணவனுப்பல்கள் 2009இல் வலுவாகக் காணப்பட்டன.** தொழிலாளர் பணவனுப்பல்களை முக்கியமாக உள்ளடக்கிய தனியார் மாற்றல்கள் இலங்கைக்கான வெளிநாட்டு நிதியினை முக்கியமானதும் உறுதியானதுமான மூலமாக தொடர்ந்தும் இருந்து வருகின்றது. ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் மந்தமான வளர்ச்சியைக் காட்டிய போதும், நீண்ட உள்நாட்டு மோதல்கள் முடிவடைந்தமையானது வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களை அவர் தம் வீடுகளுக்கு கூடியளவு பணத்தினை அனுப்பத் தூண்டியமையின் காரணமாக 2009இல் மொத்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2008இன் 16.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,330 மில்லியனிற்கு 14.1 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இது வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறையினை முழுமையாக எதிரீடு செய்ய உதவியது. தொழிலாளர் பணவனுப்பல்களை முறைசார்ந்த வழிப்படுத்தல்கள் ஊடாக உட்பாய்ச்சுவதனை ஊக்குவிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியும் வர்த்தக வங்கிகளும் எடுத்த முயற்சிகளும் 2009இல் பணவனுப்பல்கள் உயர்ந்த மட்டத்தில் பதிவு செய்ய உதவின. வடக்கிலும் கிழக்கிலும் புதிய வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டிருப்பதின் காரணமாக 2010இலும் அதற்கு அப்பாலும் முறைசார்ந்த வழிப்படுத்தல்களூடாக உயர்ந்த பணவனுப்பல் உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அரசிற்கான நடைமுறை மாற்றல்களில் வீழ்ச்சி காணப்பட்ட போதும், தனியார் மாற்றல்களில் காணப்பட்ட மேம்பாடு காரணமாக தேறிய நடைமுறை மாற்றல்கள் ஐ.அ.டொலர் 3,005 மில்லியனிற்கு அதிகரித்தன.

### நடைமுறைக் கணக்கு மீதி


**ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 339 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்த நடைமுறைக் கணக்கு, 2009இல் சிறிதளவு பற்றாக்குறைக்கு மாற்றமடைந்தமைக்கு 2009இன் இறுதிக் காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியே காரணமாகும்.** 2009இல் நடைமுறைக் கணக்கு, 2008இன் ஐ.அ.டொலர் 3,886 மில்லியன் கொண்ட பாரிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 214 மில்லியன் கொண்ட சிறிதளவு பற்றாக்குறையினையே பதிவு செய்தது. மொ.உ.உற்பத்தி நியதிகளில், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2008இன் மொ.உ.உற்பத்தியின் 9.5 சதவீதத்திலிருந்து 2009இல் மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதத்திற்கு மேம்பட்டது. இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளின் செலவினங்களிலும் ஏற்பட்ட குறைப்பு ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பிலும் பார்க்க மிகக் கூடுதலாக இருந்தமையின் காரணமாக, பொதுவாகப் பார்க்கையில் வர்த்தகப் பற்றாக்குறை 2009இல் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தது. வர்த்தகக் கணக்கிலும் வருமானக் கணக்கிலும் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியிலே குறைவான பற்றாக்குறை உயர்ந்தளவு தொழிலாளர் பணவனுப்பல்களினால் எதிரீடு செய்யப்பட்டதுடன் பணிகள் கணக்கில் காணப்பட்ட மிகை நடைமுறைக் கணக்கில் சிறிதளவு பற்றாக்குறையினைத் தோற்றுவித்தது.

## 5.5 மூலதன, நிதியியல் பாய்ச்சல்களும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு நேரடி முதலீடு

**2009ஆம் ஆண்டுப் பகுதியில் கடன்கள் உட்பட பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2008இன் ஐ.அ.டொலர் 889 மில்லியன் கொண்ட சாதனை மட்டத்தினை அடைந்த பின்னர், ஐ.அ.டொலர் 601 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்களின் மீது உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள் செலுத்திய தாக்கமே முக்கிய காரணமாகும்.** உலகளாவிய நிதியியல் சரிவுகள் புதிய பங்கு முதலீடுகளையும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல் சீனாவிலிருந்து பதிவு செய்யப்பட்டதுடன் அத் தொகை ஐ.அ.டொலர் 145 மில்லியன் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் இந்தியாவும் முறையே ஐ.அ.டொலர் 80 மில்லியனையும் ஐ.அ.டொலர் 78 மில்லியன்களையும் கொண்டிருந்தன. தொலைத் தொடர்பூட்டல்,

வரைபடம் 5.8 மூலதனம் மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள்




வலு மற்றும் சக்தி கைத்தொழில்கள் சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியாவிலிருந்தான வெளிநாட்டு நேரடி முதலீட்டுகளில் பெரும் பங்கினைக் கவர்ந்து கொண்டன. 2009இன் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 19 மில்லியன் கொண்ட பங்கு முதலீடுகள் பங்குடமையாளர்களின் ஐ.அ.டொலர் 121 மில்லியன் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள், ஐ.அ.டொலர் 110 மில்லியன் கொண்ட கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள், ஐ.அ.டொலர் 197 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள கம்பனிகளில் வைத்திருக்கப்பட்ட வருமானங்கள் மீள முதலீடு செய்யப்பட்டமையினால் கிடைத்த ஐ.அ.டொலர் 154 மில்லியன் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை வெளிநாட்டு நேரடி முதலீட்டின் வெளிப்பாய்ச்சல் 2008இன் ஐ.அ.டொலர் 62 மில்லியினலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 20 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கும் விதத்தில் முன்னைய ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் குறைந்த அளவு பெறப்பட்டமையே முக்கிய காரணமாகும். இதன் விளைவாக, 2009இல் இடம்பெற்ற தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2008இல் பதிவு செய்யப்பட்ட ஐஅ.டொலர் 827 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 581 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டுக் கடப்பாடு இவ்வாண்டுக் காலப்பகுதியில் 2008 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல்கள் நீண்டகாலத் தன்மையினைக் கொண்டனவாகவும், அதன் காரணமாக தளம்பல்கள் குறைந்தனவாகவும் குறிப்பாக நெருக்கடிச் சூழல் காலத்தில் சடுதியாக மீளப்பெறப்படுவதனால் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் குறைந்தனவாகவும் காணப்பட்டன.** வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கு மாறாக, அரச பிணையங்கள் மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகளிலுள்ள வெளிநாட்டு முதலீடுகள் போன்ற குறுங்கால நிதியியல் பாய்ச்சல்கள் தளம்பல்களைக் கொண்டனவாயும் குறிப்பாக நெருக்கடி நிலைமைகளின் போது சடுதியான மீளப்பெறல்கள் தொடர்பான இடர்நேர்வுகளுக்குட்பட்டவையாகவும் இருந்தன. மோதல்கள் முடிவடைந்ததனைத் தொடர்ந்து ஏற்பட்ட சாதகமான தோற்றப்பாட்டின் காரணமாக, வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல்கள் நடுத்தர காலத்தில் மிகச் சாதகமாக மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி வேலைகள் தொடங்குவதுடன், குறிப்பாக சுற்றுலா, வேளாண்மை மற்றும் தயாரிப்பு துறைகளில் இன்னும் கூடுதலான புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### அரசிற்கான வெளிநாட்டு மூலதனம்

#### நடுத்தர மற்றும் நீண்டகால மூலதனம்

**உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் அரசிற்கான வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்த போதும் பின்னரைப்பகுதியில் உட்பாய்ச்சல்களில் வலுவான மீட்சியொன்று காணப்பட்டது.** அரசிற்கான வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல் மோதல் முடிவடைந்து ப.நா.நிதிய துணைநில் ஒழுங்குவசதிக்கான ஒப்புதல் கிடைத்தமையினைத் தொடர்ந்து, ஆண்டின் பின்னரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இலங்கையின் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறியின் வழங்கல் 2009 ஒத்தோபரில் வெற்றிகரமாக நிறைவடைந்தது. வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகையினைவிட பதின்மூன்று தடவைகள் மேலதிகமாக உதவப்பட்டமை இலங்கையின் பொருளாதாரத்தின் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வைத்துள்ள நம்பிக்கையினை பிரதிபலித்தது. ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டிற்கான முறி மற்றும் கொடைகளை உள்ளடக்கிய அரசிற்கான நீண்டகால உட்பாய்ச்சல் 2008இன் ஐ.அ.டொலர் 1,347 மில்லியனிலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 2001 மில்லியனிற்கு அதிகரித்தது.

**ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் நீங்கலாக, அரசிற்கான மொத்த நீண்டகால மற்றும் நடுத்தரகாலக்கடன் உட்பாய்ச்சல்கள் 2008இன் ஐ.அ.டொலர் 1,059 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,280 மில்லியனாகக் காணப்பட்டது.** இக் கடன் பெறுகைகளில் ஐ.அ.டொலர் 673 மில்லியன் (53 சதவீதம்), சலுகை நியதிகளில் பெறப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 607 மில்லியன் (47 சதவீதம்) சலுகையற்ற நியதிகளில் பெறப்பட்டது. உட்பாய்ச்சல் சலுகை ரீதியான கடன்களில் பெரும்பாலானவை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக விரிவாக்கம், மேல் கொத்மலை நீர் மின்வலு பொறி, தென்பகுதி நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் புத்தளம் நிலக்கரி வலுச் செயற்றிட்டம் போன்ற செயற்றிட்டங்களின் உட்கட்டமைப்பிற்காக நெறிப்படுத்தப்பட்டுள்ளன. நடைமுறை மற்றும் மூலதனத்தன்மை இரண்டினையும் கொண்ட கொடைகளின் மொத்தப் பெறுகைகள் 2008இன் ஐ.அ.டொலர் 288 மில்லியனிலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 221 மில்லியனிற்கு குறைவடைந்தன. எனினும், அரசாங்கம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் நலம், கல்வித் துறைகளின் அபிவிருத்திச்செயற்றிட்டங்களின் மீள்கட்டுமானத்திற்காக 2009இல் நியாயமான தொகையொன்றினைத் தொடர்ந்தும் பெற்றுக் கொண்டது.

**முக்கிய செயற்றிட்டங்கள் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்தும் வீதம்[1] 2008இன் 20.5 சதவீதத்திலிருந்து 2009இல் 24.1 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு இவ்வாண்டில் புதிய செயற்றிட்டங்களுக்கான பகிர்ந்தளிப்புக்கள்**

1. வெளிநாட்டு உதவிப் பயன்படுத்துகை வீதமென்பது 2009 காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டவற்றில் 2009 யூன் இறுதிவரை பகிர்ந்தளிக்கப்படாத மீதயின் விகிதமாகும்.

5

வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

**கணிசமாக அதிகரித்தமையே பெருமளவிற்குக் காரணமாகும்.** அதேவேளை, 2009இல் நீண்டகாலக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 940 மில்லியன்களாக விளங்கியமைக்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட கூட்டுக்கடன்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமையும் கடந்த காலத்தில் பெறப்பட்ட ஒன்று சேர்ந்த படுகடனின் மீள்கொடுப்பனவும் முக்கிய காரணங்களாக இருந்தன.

### குறுங்கால மூலதனம்

**வெளிநாட்டவர்களின் அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பேரிலான குறுங்கால தேறிய உட்பாய்ச்சல்கள் 2008இன் தேறிய வெளிப்பாய்ச்சல்களான ஐ.அ.டொ. 213 மில்லியன்களுடன் ஒப்பிடும் பொழுது 2009இல் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் கொண்ட சாதனை மட்டத்தினை அடைந்தன.** எனினும், ஆண்டின் முதலரைப்பகுதியில் வெளிநாட்டவர்களினால் திறைசேரி உண்டியல்களிலும் முறிகளிலும் மேற்கொள்ளப்பட்ட முதலீடு தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்தமைக்கு உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் முதலீடுகள் மீளப் பெறப்பட்டமையே காரணமாகும். புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை, உறுதியான செலாவணி வீதம் மற்றும் ஒப்பீட்டு அடிப்படையில் தாழ்ந்த வட்டி வீதங்கள் என்பன அரச பிணையங்களுக்கு உயர்ந்தளவு வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை, குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் கவர்ந்தமையின் மூலம் 2009இன் ஆரம்பத்தில் காணப்பட்ட போக்கு மாற்றமடைந்தது. ஆண்டின் பின்னரைப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பேரில் ஐ.அ.டொலர் 1,587 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை அரசாங்கம் 4-6 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளின் மீதே பெற்றுக் கொண்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் செய்யப்படும் எந்தவொரு சடுதியான மீளப் பெறுகைகளும் உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மீது தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்துவதனை இல்லாமல் செய்வதற்காக அவற்றைத் தணித்து வசதியளிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் ஈர்த்துக் கொள்ளப்பட்டன.

| அட்டவணை 5.9 | 2009இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள் |
|---|---|

| கடன்வழங்குநரும் செயற்றிட்டமும் | | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர்கள் மில்லியன் |
|---|---|---|
| **ஏபி செவன்ஸ்க் ஏற்றுமதிக் கடன் கூட்டுத்தாபனம்** | | **22.0** |
| இதில்; | நான்காவது கிராமிய மின்சாரப்படுத்தல் செயற்றிட்டம் - யூரோ பகுதி | 11.6 |
| | இரத்மலானை, ஜா-எல கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் செயற்றிட்டம் | 10.4 |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | **243.5** |
| இதில்; | கொழும்பு துறைமுக விரிவாக்கச் செயற்றிட்டம் | 48.7 |
| | தேசிய பெருந்தெருக்கள் துறை செயற்றிட்டம் | 28.7 |
| | வலுத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 19.6 |
| | இரண்டாம் நிலை நகரங்கள் மற்றும் கிராமிய சமூகத்தின் நீர் / உடல்நலம் | 17.4 |
| | இரண்டாம் நிலை நகரங்கள் மற்றும் கிராமிய சமூகத்தின் நீர் / உடல்நலம் இணைப்பு 1 | 15.6 |
| | தென்மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் - இணைப்பு | 14.9 |
| | தொலைதூரக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் | 11.2 |
| **ஐரோப்பிய முதலீட்டு வங்கி** | | **21.2** |
| இதில்; | சுனாமிக்குப் பின்னரான கடன் - ஒப்பந்தம் ஏ | 14.1 |
| **பிரான்சிய அரசாங்கம்** | | **19.4** |
| இதில்; | திருகோணமலை அபிவிருத்தி உட்கட்டுமான செயற்றிட்டம் | 17.1 |
| **இந்திய அரசாங்கம்** | | **30.0** |
| இதில்; | கொழும்பு - மாத்தறை புகையிரதப் பாதையை தரமுயர்தல் | 27.3 |
| **ஜப்பானிய அரசாங்கம்** | | **295.1** |
| இதில்; | தென்மாகாண பெருந்தெரு கட்டுமான செயற்றிட்டம் | 57.7 |
| | தென்மாகாண பெருந்தெரு கட்டுமான செயற்றிட்டம் (II) | 45.9 |
| | மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டம் | 45.1 |
| | கொழும்பு பெரும்பாகத்திற்கான போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் | 24.0 |
| | லுணுவில சூழல் மேம்படுத்தல் மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்றிட்டம் | 20.6 |
| | கொழும்பு நகரம் மின்சார வழங்கல் அபிவிருத்திச் செயற்றிட்டம் | 12.8 |
| | வறியோர் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | 11.8 |
| | வறியோர் பொருளாதார உயர்வு, சமூக மேம்படுத்தல் செயற்றிட்டம் | 11.6 |
| | கிழக்கு மாகாண வறியோர் உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்றிட்டம் | 11.2 |
| | மாகாண வீதி மேம்படுத்தல் செயற்றிட்டம் | 10.5 |
| **மக்கள் சீன குடியரசு அரசாங்கம்** | | **291.4** |
| இதில்; | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம் | 153.4 |
| | **புத்தளம் நிலக்கரி வலுச்செயற்றிட்டம் - விருப்புக் கொள்வனவாளர் கடன்** | 129.3 |
| **எச்.எஸ்.பிசி வங்கி பிஎல்சி (ஐக்கிய இராச்சியம்)** | | **98.0** |
| இதில்; | பிராந்திய பாலங்கள் செயற்றிட்டம் | 71.1 |
| | டிக்கோவிட்ட மீன்பிடி துறைமுக அபிவிருத்தி | 22.9 |
| **பன்நாட்டு அபிவிருத்திச் சம்மேளனம்** | | **148.1** |
| இதில்; | வீதித் துறை உதவிச் செயற்றிட்டத்திற்கான மேலதிக நிதி | 65.0 |
| | வீதித் துறை உதவிச் செயற்றிட்டம் | 14.5 |
| | இரண்டாவது வடக்கு - கிழக்கு நீர் வழங்கல் வேளாண்மை செயற்றிட்டம் | 10.4 |
| | நலத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்கான மேலதிக நிதி | 10.1 |
| **டென்மார்க் நோர்டியா வங்கி ஏ/எஸ்** | | **24.8** |
| இதில்; | ஒலுவில் துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டம் | 13.4 |
| | களனி வலது கிளை நீர் சுத்திகரிப்புப் பொறி | 11.4 |

மூலம் : வெளிநாட்டு மூலவளத் திணைக்களம்

### தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வெளிநாட்டு மூலதனம்

### நீண்டகால மூலதனம்

**2009இல் தனியார் துறைக்கான வெளிநாட்டு கடன்களின் உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 390 மில்லியனிற்கு 47 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு முதலீட்டுச் சபைக் கம்பனிகளினதும் அதேபோன்று ஏனைய தனியார்துறை தொழில்முயற்சிகளினதும் வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** 2009இல் முதலீட்டுச் சபையின் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களின் உட்பாய்ச்சல்கள் 2008இன் ஐ.அ.டொலர் 137 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 197 மில்லியனை அடைந்தன. 2009இல் தனியார் துறையின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் முக்கியமாக தொலைத் தொடர்பூட்டல், வலு மற்றும் சக்தி மற்றும் வான் போக்குவரத்து தொழில் துறைகளின் முதலீடுகளுக்கானவையாகக் காணப்பட்டன.

### குறுங்கால மூலதனம்

**தனியார் குறுங்கால மூலதன உட்பாய்ச்சல் சொத்துப்பட்டியல் முதலீடுகள் தனியார் குறுங்காலக் கொடுகடன்கள் மற்றும் வர்த்தக வங்கிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.** 2009இல் குறுங்கால தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 2008இன் ஐ.அ.டொலர் 679 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 311 மில்லியனுக்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஈரானுக்கான தொடர்க் கொடுகடன் மீளச் செலுத்தப்பட்டமையும் 2009இல் நிலவிய எண்ணெய் விலைகள் உட்பட பன்னாட்டுப் பண்ட விலைகள் தாழ்வடைந்தமையின் விளைவாக வர்த்தகக் கொடுகடனின் பெறுமதி குறைவடைந்தமையும் முக்கிய காரணங்களாக விளங்கின. 2008இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 601 மில்லியன் கொண்ட ஈரானியக் கொடுகடனுடன் ஒப்பிடுகையில் 2009இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எண்ணெய் இறக்குமதிக்காகக் கிடைக்கும் ஐ.அ.டொலர் 193 மில்லியன் கொண்ட ஈரானிய தொடர் கொடுகடன் உட்பட ஐ.அ.டொலர் 299 மில்லியன் கொண்ட தேறிய வர்த்தகக் கடனைப் பெற்றிருக்கிறது.

**ஆண்டின் பின்னரைப்பகுதியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல் அதிகரித்த போதும் மொத்த சொத்துப்பட்டியல் முதலீடுகளின் உட்பாய்ச்சல் 2008இன் ஐ.அ.டொலர் 548 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 375 மில்லியனுக்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தது.** இதற்கு உலகம் முழுவதிலுமுள்ள அநேக பங்குச்சந்தைகளைப் பாதித்த உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் தாக்கமே முக்கிய காரணமாகும். இதன்படி, 2009இல் தேறிய சொத்துப்பட்டியல் முதலீடுகள், 2008இன் ஐ.அ.டொலர் 60 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில், ஐ.அ.டொலர் 6 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்தது.

**2009இல் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 435 மில்லியனால் அதிகரித்தமைக்கு உள்நாட்டுச் சொத்துக்கள் வெளிநாட்டு நாணயத் திரவச் சொத்துக்களுக்கு மாற்றப்பட்டமையே முக்கிய காரணமாகும்.** மேலும், வர்த்தக வங்கிகளின் தேறிய பொறுப்புக்கள் 2009இல் ஐ.அ.டொலர் 98 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு கரைகடந்த வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலுள்ள வெளிநாட்டு நாணய வைப்புக்களில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாக இருந்தது.


## சென்மதி நிலுவை

**2008இல் ஐ.அ.டொலர் 1,385 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் சென்மதி நிலுவையில் காணப்பட்ட திரண்ட நிலுவை 2009இல் ஐ.அ.டொலர் 2,725 மில்லியன் கொண்ட முன்னெப்பொழுதுமில்லாத மிகையை அடைந்தது.** உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள், 2009இன் முதற் காலாண்டுப் பகுதியில் நாட்டின் வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் மீது தொடர்ந்தும் பாகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. முதற் காலாண்டு முடிவடைகையில் சென்மதி நிலுவையில் காணப்பட்ட பற்றாக்குறை ஐ.அ.டொலர் 688 மில்லியன்களை அடைந்து வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாடு தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவித்தது. இக் கரிசனைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில் 2009இன் முதற் காலாண்டுப்பகுதியில் அவசர வழிமுறைகள் பல மேற்கொள்ளப்பட்டன. இலங்கை மத்திய வங்கி இப் பிராந்தியத்திலுள்ள சில மத்திய வங்கிகளுடன் நாணய பரிமாற்றல் வசதிகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதுடன், அத்தகைய ஒழுங்குகளின் கீழ் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 200 மில்லியன்களை பெற்றுக் கொண்டது. வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடையே திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடு செய்வது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களின் உட்பாய்ச்சலை ஊக்குவிப்பதற்காக வதியாதோர் வெளிநாட்டு நாணய மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீது உழைக்கப்பட்ட பட்டியலின் மீத 20 சதவீதமான வட்டியை ரூபாவில் செலுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், வதிவற்றவர்களுக்கு வழங்கப்படும் பணி ஏற்பாடுகளினூடாக உழைக்கப்பட்ட வெளிநாட்டு வருமானம் மற்றும் இலாபங்களின் மீது வரிச் சலுகைகளை வழங்கும் விதத்தில் உள்நாட்டரசிறைச் சட்டம் திருத்தப்பட்டது. ஏற்றுமதி தொடர்பான போட்டித்தன்மையினை அதிகரிப்பதற்காக செலாவணி வீதத்தில் சில நெகிழ்ச்சித் தன்மைகள் அனுமதிக்கப்பட்டதுடன் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு பொருளாதார தூண்டல் பொதியொன்றும் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டது. ப.நா.நிதியம் - துணைநில் ஒழுங்கு வசதியின் முதல் இரண்டு தொகுதிகள் கிடைத்தமை உட்பட நாட்டிற்குள் பாய்ந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களினால் வழங்கப்பட்ட ஆதரவு, ப.நா.நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிஎஉ இன் பொதுவான மற்றும் சிறப்பான ஒதுக்குகள் மற்றும் இரண்டாவது நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கலிலிருந்தான பெறுகைகள் என்பன 2009 இறுதியில் நாட்டின் சென்மதி நிலுவை முன்னெப்பொழுதுமில்லாத மிகையான ஐ.அ.டொலர் 2,725 மில்லியன்களைப் பதிவு செய்வதற்கு உதவியிருக்கின்றன.

## வெளிநாட்டு ஒதுக்குகள்

**ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் நீங்கலான மொத்த வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் 2008இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,594 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 திசெம்பர் இறுதியில் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டமான ஐ.அ.டொலர் 5,097 மில்லியனுக்கு உயர்வடைந்தன.** இது 2008இல் 1.4 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாக இருந்தமையுடன் ஒப்பிடுகையில் 6.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. எண்ணெய் இறக்குமதி உண்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமை, குறுங்கால முதலீடுகள் வெளியில் அனுப்பப்பட்டமை என்பனவற்றின் விளைவாக 2008இன் முதற் காலாண்டில் வீழ்ச்சியடைத் தொடங்கிய ஒதுக்குகளின் வீழ்ச்சி 2009இன் முதற் காலாண்டு வரையான காலப்பகுதி முழுவதும் நலிவுற்றே காணப்பட்டது. இதன் விளைவாக, 2009 மாச்சு இறுதியில் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1,082 மில்லியன் கொண்ட மிகக் குறைந்த மட்டத்தை அடைந்தன. எனினும், மோதல்கள் முடிவடைந்ததுடன், 2009இன் இரண்டாம் காலாண்டிலிருந்து வெளிநாட்டு ஒதுக்குகளின் நிலைமை மேம்பாடுகளைத் தொடங்கியது. இச் சூழ்நிலையானது சென்மதி நிலுவையினை வலுப்படுத்துவதற்காக 2009 யூலை 24ஆம் நாளன்று கிடைத்த சிஎஉ 1.65 பில்லியன் (ஐ.அ.டொலர் 2.6 பில்லியனிற்குச் சமமானது) கொண்ட ப.நா.நிதியத்தின் துணைநில் ஒழுங்கு வசதியின் ஒப்புதலுடன் மேம்பாடடைந்தது. மேலும், முதலீட்டாளர் நம்பிக்கையில் ஏற்பட்ட உத்வேகம், உள்நாட்டு திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் சந்தைக்குள் உயர்ந்தமட்ட வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்தது. மேலும் ப.நா. நிதியத்தின் சிஎஉ பொதுவான மற்றும் சிறப்பான ஒதுக்குகளின் கீழ், 2009 ஒகத்தில் இலங்கை சிஎஉ 324 மில்லியன்களை (ஐ.அ. டொலர் 508 மில்லியனுக்குச் சமமானது) பெற்ற வேளையில்

வரைபடம் 5.9 காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்



**அட்டவணை 5.10**

**இலங்கையின் வெளிநாட்டு சொத்துக்கள் (அ)**

| உடைமை | ஐ.அ.டொலர் மில்லியன் (ஆ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 | 2008(இ) | 2009(ஈ) | 2005 | 2006 | 2007 | 2008 (இ) | 2009(அ) |
| 1. அரசு | 131 | 128 | 99 | 101 | 113 | 13,417 | 13,789 | 10,768 | 11,411 | 12,920 |
| 2. மத்திய வங்கி | 2,604 | 2,709 | 3,409 | 2,301 | 5,244 | 265,873 | 291,747 | 370,640 | 260,297 | 599,880 |
| 3. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 2,735 | 2,837 | 3,508 | 2,402 | 5,357 | 279,290 | 305,536 | 381,408 | 271,708 | 612,799 |
| 4. வர்த்தக வங்கிகள் | 1,466 | 1,169 | 1,448 | 1,238 | 1,673 | 149,656 | 125,867 | 157,454 | 140,075 | 191,373 |
| 5. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 4,201 | 4,005 | 4,956 | 3,640 | 7,030 | 428,946 | 431,403 | 538,862 | 411,783 | 804,173 |
| 6. திரண்ட அலுவல்சார் சொத்துக்கள் மாதங்களில் | | | | | | | | | | |
| 6.1 பொருட்களின் இறக்குமதிகள் | 3.7 | 3.3 | 3.7 | 2.0 | 6.3 | | | | | |
| 6.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 3.3 | 2.9 | 3.3 | 1.8 | 5.5 | | | | | |
| 7. மொத்த சொத்துக்கள் மாதங்களில் | | | | | | | | | | |
| 7.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.7 | 4.7 | 5.3 | 3.1 | 8.3 | | | | | |
| 7.2 பொருட்கள், பணிகளின் இறக்குமதிகள் | 5.0 | 4.1 | 4.7 | 2.8 | 7.2 | | | | | |

(அ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் உட்பட சந்தை விலையில் கணிக்கப்பட்டுள்ளன

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவப்படுத்தும் வீதங்கள் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ளன ஆண்டு இறுதி வீதங்களின் மாற்றப்பட்டுள்ளன

| ஆண்டு | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றிற்கு ரூபா (ஆண்டிறுதி) | 102.12 | 107.71 | 108.72 | 113.14 | 114.38 |

(இ) வெளிநாட்டுச் சொத்துக்களின் வகைப்படுத்தலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக மத்திய வங்கியினால் உள்நாட்டு வங்கிகளில் பேணப்படும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) 2009 திசெம்பர் முடிவில், வெளிநாட்டு செலாவணி உடன்படிக்கைகளின் செலுத்த வேண்டிய மீதியான ஐ.அ.டொலர். 245 மில்லியன் உள்ளடக்கப்படவில்லை.

(உ) தற்காலிகமானவை

இரண்டாவது நாட்டிற்கான பன்னாட்டு முறியத்தின் வழங்கல் தொடர்பாக ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட தொகை 2009 ஒத்தோபரில் பெறப்பட்டமையானது நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கு நிலைமையினை 2009 இறுதியளவில் ஐ.அ.டொலர் 5,097 இற்கு அதிகரித்தன. அதேவேளை மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வர்த்தக வங்கிகளின் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் 2009 இறுதியில் ஐ.அ.டொலர் 6,770 இற்கு அதிகரித்ததுடன் இது எட்டு மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகவும் இருந்தது.

**ஆண்டின் இறுதிப்பகுதியில் காணப்பட்ட சாதகமான அபிவிருத்திகள், ஸ்டான்டட் அன்ட் புவர் மற்றும் பிட்ச் றேட்டிங் என்பன நாட்டிற்கான தரமிடல் தோற்றப்பாட்டினை உயர்த்துவதற்கு காரணமாயின.** ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கைக்கான நாட்டிற்கான தரமிடல் தோற்றப்பாட்டினை மோதல் முடிவடைந்த ஒரு சில நாட்டிகளுக்குள் "உறுதியான" நிலையிலிருந்து "எதிர்க்கணிய" நிலைக்கு விளங்கிக் கொள்ள முடியாதவாறு திருத்திக் கொண்டது. மீண்டும் இது 2009 ஒத்தோபரில் "நிலையான" நிலையிலிருந்து "சாதகமான" நிலக்கு மேலும் திருத்தியது. ஸ்டான்டட் அன்ட் புவர் நீண்டகால வெளிநாட்டு நாணய வழங்குனர் செலுத்தத் தவறிய தரமிடலை "பீ" இல் நிர்ணயித்தது. பிட்ச் தரமிடலும் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் தோற்றப்பாட்டினை ஒத்தோபரில் "எதிர்கணிய" நிலையிலிருந்து "உறுதியான" நிலைக்கு திருத்திக் கொண்டதுடன் நீண்டகால வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணய வழங்குநர் செலுத்தத் தவறிய தரமிடலாகவும் நாட்டின் உச்ச மட்டத்தினை "பீ+" இலும் குறுங்கால வழங்குநர் செலுத்தத் தவறிய வீதத்தின் "பீ" இலும் நிர்ணயித்தது.

**இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குகளின் நீண்டகால உறுதிப்பாட்டினைப் பலப்படுத்தும் பொருட்டும் வெளிநாட்டுச் சொத்துக்களின் சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்தும் பொருட்டும் இலங்கை மத்திய வங்கி, 2009 நவெம்பரில் ப.நா. நிதியத்திலிருந்து 10 மெற்றிக்தொன் தங்கத்தினைக் கொள்வனவு செய்தமையின் மூலம் அதன் தங்கத்தினை அதிகரித்துக் கொண்டது.** தங்கத்தினை உடமையாக வைத்திருப்பது உறுதித்தன்மையினை வழங்குமெனவும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் முக்கியமான பன்னாட்டு நாணயங்களிலும் நிதியியல் கருவிகளிலும் ஏற்படக்கூடிய தளம்பல்களுக்கெதிரான நீண்டகால பாதுகாப்பினை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**குறுங்கால பொறுப்புக்களுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் விகிதத்தினால் அளவிடப்பட்டவாறான ஒதுக்குப் போதுமையும் 2008 இறுதியின் 33 சதவீதத்திலிருந்து 2009 இறுதியில் 81 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு குறுங்காலப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பினைவிட ஒதுக்குகளில் ஏற்பட்ட விரிவாக்கம் பெரிதாக இருந்தமையே காரணமாகும்.** திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் சந்தைக்குள் வந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் முழுப் பெறுகைகளும் இலங்கை மத்திய வங்கியினால் ஈர்த்துக் கொள்ளப்பட்டமையானது குறுங்காலப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் தாக்கத்தினை இல்லாமல் செய்ததன் மூலம் ஒதுக்குப் போதுமை விகிதம் மேம்பாடடைய வசதியளித்தது.

**முதலீட்டாளர் நம்பிக்கை மேம்பட்டு வருகின்றது என்ற நம்பிக்கை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் சமநிலைத்தன்மை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான சில கட்டுப்பாடுகளைப் படிப்படியாகத் தளர்த்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது.** இதற்கமைய, 2010 மாச்சு 11ஆம் நாளிலிருந்து இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச்

## சிறப்புக்குறிப்பு 9

## துணைநில் ஒழுங்குவசதிகள்

### அறிமுகம்

துணைநில் ஒழுங்கு, பன்னாட்டு நாணய நிதியத்தின் கடன் வழங்கல் வசதிகளிலொன்றாகும். இது நாடுகள் அவற்றின் குறுங்கால சென்மதி நிலுவை பிரச்சனைகளை வெற்றி கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட வசதியாகும். 1952 யூனில் இது தொடங்கப்பட்டதிலிருந்து துணைநில் ஒழுங்கு வசதி உறுப்பினர் நாடுகளினால் கிரமமாகப் பயனபடுத்தப்பட்டு வருவதுடன் இது வளர்ந்து வரும் சந்தைகளுக்கான ப.நா. நிதியத்தின் முக்கியமான கடன் வழங்கல் கருவியாகவும் இருக்கிறது. சென்மதி நிலுவை நெருக்கடி எவ்வித தாமதமுமின்றி கட்டுப்படுத்தப்பட வேண்டிய தேவையைக் கொண்டதொரு நிலைமை என்பதனால் துணைநில் வசதிக் கட்டமைப்பானது, வெளிநாட்டு நிதியிடல் தேவைகளைக் கொண்ட நாடுகளுக்கு விரைந்து பதிலிறுத்துவதற்கு ப.நா. நிதியத்தினை அனுமதிக்கத்தக்கதொரு முறையிலேயே வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் நெருக்கடிகள் மற்றும் வலுவான வளர்ச்சியை மீண்டும் அவர்கள் அடைவதற்கான விதத்தில் உதவிக் கொள்கைகள் வடிவமைக்கப்பட்டுமிருக்கின்றன. மேலும் துணைநில் ஒழுங்கு நிதியம், அரசாங்கத்திற்கு கடன் வழங்குகின்ற மற்றைய பல்புடை மற்றும் இருபுடைக் கடன் வழங்குநர்கள் போலன்றி ஒதுக்கங்களைக் கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக நாடுகளின் மத்திய வங்கிகளுக்கு கடன் வழங்கப்படுவதுடன் இதன் காரணமாக இவை உள்நாட்டு பணநிரம்பலின் மீது எவ்வித தாக்கத்தினையும் கொண்டிருக்கமாட்டா. நாடுகள், நிலைமைகள் மோசமடையுமிடத்து துணைநில் வசதிகளை பயன்படுத்தும் விருப்பத்தேர்வினை கொண்டிருக்கின்ற போதும் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையினை எடுப்பனவு செய்ய அந்நாடுகள் தெரிவு செய்யாதவிடத்து துணைநில் ஒழுங்குகளை எச்சரிக்கையுடனான அடிப்படையில் பெற்றுக்கொள்ள முடியும். 2007இல் துணை வாடிக்கையாளர் ஈட்டு நெருக்கடியின் காரணமாக உருவான உலகளாவிய நிதியியல் குழப்ப நிலைமைகளின் காரணமாக, துணைநில் ஒழுங்குகள் மிகவும் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற ப.நா. நிதியத்தின் ஒரு வசதியாக தற்பொழுது மாறி வருகின்றது. 2009இல் நிபந்தனைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு இலகுபடுத்தப்பட்டதுடன் கடன்பாட்டு எல்லைகளும் உயர்த்தப்பட்டதன் மூலம் ப.நா. நிதிய துணைநில் ஒழுங்குவசதியின் செயற்பரப்பு விரிவாக்கப்பட்டு கூடியளவிற்கு நெகிழ்ச்சித்தன்மை கொண்டதாகவும் உறுப்பினர்களின் தேவைப்பாடுகளுக்கு செவிசாய்க்கத்தக்க விதத்திலும் மாற்றப்பட்டுள்ளது.

தற்போதைய உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் தீவிரமான தன்மையினைப் பரிசீலனையில் கொண்டு, ப.நா. நிதியம் அதன் கடன் வழங்குகின்ற நிபந்தனைகளை அளவிடப்படக் கூடியதும் அவதானிக்கத்தக்கதுமான பிரமாணங்களின் மீது கவனம் செலுத்துகின்ற விதத்தில் திருத்தியிருக்கிறது. இது, பரந்த ரீதியில் அளவு கணியம்சார் செயலாற்றுப் பிரமாணம் மற்றும் அமைப்பியல் சார்ந்த அடிப்படை அளவீட்டுக் குறியீடு என வகைப்படுத்தப்பட்டது. அளவுக் கணியம்சார் பிரமாணம் உண்மையில் நாணயக் கூட்டுக்கள், இறை நிலுவைகள் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகள் போன்ற பேரண்டப் பொருளாதார கொள்கை மாறிகளேயாகும். கணியம்சார் செயலாற்றுப் பிரமாணத்தின் கீழ் உறுப்பினர் நாடுகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுவதுடன் கடன் பகிர்ந்தளிப்பினை தொடர்வது நிகழ்ச்சித்திட்ட இலக்குகளுடன் இசைந்திருக்கும் அத்தகைய இலக்குகளின் சாதனைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அமைப்பியல் அடித்தள குறியீடுகள் நிதியியல் துறையினையும் அரச நிதியியல் முகாமைத்துவத்தினையும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியிருந்தது. துணைநில் ஒழுங்கு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செயலாற்றம் கிரமமான மீளாய்வுகளினூடாக மதிப்பிடப்பட்டன.

### இலங்கைக்கு துணைநில் ஒழுங்கு வசதி ஏன் தேவைப்படுகிறது?

2008இன் பின்னரைப் பகுதியில் உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்ததுடன் எண்ணெய் மற்றும் ஏனைய பண்ட விலைகளின் உயர்வுடன் இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமையின் காரணமாக நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தது. இது, அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் செய்யப்பட்ட முதலீடுகள் மீளப் பெறப்பட்டமையுடன் சேர்ந்து நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளில் கணிசமான வீழ்ச்சியைத் தோற்றுவித்தது. இப் பிரச்சனையினை எதிர்நோக்குவதற்கு பின்பற்றப்பட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை வழிமுறைகளுடன் இலங்கையும் 2009 மாச்சில் துணைநில் ஒழுங்கின் வடிவில் ப.நா. நிதியத்திடமிருந்து விதிவிலக்கான வழியில் உதவிகளைக் கோரியது. உலகளாவிய நெருக்கடிகள் இலங்கை மீது கொண்டிருந்த தாக்கத்தினையும் துணைநில் ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்தி சென்மதி நிலுவையின் சமநிலையற்ற தன்மையினை சீர்செய்து கொள்ளக்கூடிய ஆற்றல் நாட்டிற்குள்ளதா என்பதனையும் மதிப்பிடுவதற்காக நுணுக்கமாகக் கவனிக்கின்ற நடைமுறைகளைத் தொடர்ந்து சிஎஉ 1.65 பில்லியன் (ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்) கொண்ட 20 மாத துணைநில் ஒழுங்குவசதிகள் அதாவது நாட்டின் தற்போதைய அனுமதிப் பங்கில் 400 சதவீதம் 2009 யூலை 24ஆம் நாளிலிருந்து ப.நா. நிதியத்தினால் அனுமதிக்கப்பட்டது. இது ப.நா. நிதியத்தினால் இலங்கைக்கு அனுமதிக்கப்பட்ட முன்னொரு போதுமில்லாத உயர்ந்த வசதியாகும்.

### துணைநில் ஒழுங்குடன் இணைந்த காலம்

மொத்தமாகக் கிடைத்த துணைநில் ஒழுங்குவசதியான சிஎஉ 1.65 பில்லியன், ஒவ்வொன்றும் சிஎஉ 206.7 மில்லியன் கொண்ட எட்டு சமமான தவணைகளில் பகிர்ந்தளிப்பதற்கு அட்டவணையிடப்பட்டது. முதலாவது தவணை 2008 யூலையில் துணைநில் வசதி ஒழுங்கு அனுமதி கிடைத்தவுடன் விடுவிக்கப்பட்டதுடன் மீதியை இரண்டாண்டு காலப்பகுதியில் பகிர்ந்தளிப்பதற்கு அட்டவணையிடப்பட்டது. கடனை 2012 ஏப்பிறலில் தொடங்கி நான்காண்டு காலப்பகுதியில் திருப்பிச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. துணைநில் ஒழுங்குவசதியின் வட்டி வீதம் இரண்டு கூறுகளை, அதாவது பணிக் கட்டணம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ஆகிய இரு கூறுகளைக் கொண்டதாகும். பணிக் கட்டணமானது, ப.நா. நிதிய வெப்தளத்தில் வெளியிடப்படுகின்றதும் வாராந்தம் பூரணப்படுத்தபடுகின்றதுமான சிஎஉ வீதத்தினை அடிப்படையாகக் கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட இலாபம் அனுமதி பங்கின் 300

சதவீதம் வரையான வெளிநின்ற கடன் தொகையில் ஆண்டிற்கு 1 சதவீதமாகும். வெளிநின்ற கடன் தொகை அனுமதிப் பங்கின் 300 சதவீதத்தினை விஞ்சும் பொழுது ஆண்டிற்கு 2 சதவீத மேலதிகக் கட்டணமொன்று விதிக்கப்படும். மேலும், வெளிநின்ற கடன்தொகை மூன்றாண்டுகளுக்கும் மேலாக 300 சதவீத அனுமதிப் பங்கினை விஞ்சும் பொழுது மேலதிகக் கட்டணம் ஆண்டிற்கு 3 சதவீதத்திற்கு கூட்டப்படும். துணைநில் ஒழுங்குவசதிக்கு ஒப்புதலளிக்கப்பட்ட நேரத்தில் (அதாவது 2009 யூலை 24ஆம் நாளன்று) நிலவிய சிஎஉ வீதம் 0.3 சதவீதமாக இருந்தது. இதற்கமைய, வசதி ஒப்புதலளிக்கப்பட்ட நேரத்தில் காணப்பட்ட பயனுறு வட்டி வீதம் 1.3 சதவீதமாகும். இது அப்போது சந்தையில் நிலவிய வீதங்களைவிடக் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவானதாகும்.

இவ் வசதியின் முக்கிய குறிக்கோள்களாக வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதல், இறை நிலைமைகளை வலுப்படுத்துதல், நாணய உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் உள்நாட்டு நிதியியல் நிலைமைகளை பலப்படுத்துதல் என்பன காணப்பட்டன. மற்றைய எந்தவொரு நாட்டினையும் போன்றே இலங்கையும் அளவு கணியம்சார் செயலாற்றப் பிரமாணத்தின் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இலக்குகளையும் “அமைப்பியல்” அடிப்படை அளவீட்டுக் குறியீடு” இன் கீழ் குறித்துரைக்கப்பட்டிருக்கும் கொள்கை நடவடிக்கைகளையும் பின்பற்றி நடக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு தொகுதியும் அட்டவணைப்படுத்தப்பட்டவாறு பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன்னதாக, ஒவ்வொரு பரீட்சிப்பு திகதியிலும் மூன்று அளவுக் கணியம்சார் செயலாற்றப் பிரமாணத்தினை எய்தியிருக்க வேண்டுமென இலங்கை தேவைப்படுத்தப்பட்டது. மூன்று அளவுக் கணியம்சார் செயலாற்றப் பிரமாணங்களாக தேறிய பன்னாட்டு ஒதுக்குகள், மத்திய வங்கியின் ஒதுக்குப் பணம் மற்றும் மத்திய அரசாங்கத்தின் தேறிய உள்நாட்டு நிதியிடல் என்பன விளங்கின. தேறிய பன்னாட்டு ஒதுக்கு தொடர்பான இலக்கின் கீழ் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கானது எந்தவொரு எதிர்பார்க்கப்படாத வெளிநாட்டு நாணயத்தின் வெளிப்பாய்ச்சல்களையும் எதிர்கொள்ளக்கூடிய வலுவான நிலையில் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒதுக்குப் பணம் தொடர்பான இலக்கின் கீழான முக்கிய குறிக்கோள் யாதெனில் பொருளாதார நடவடிக்கைகளின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிக்கின்ற விதத்தில் மோசமான திரவத்தன்மை அளவுகளைப் பேண வேண்டும் எனவும் அதேவேளையில் பணவீக்கம் உறுதியான கீழ்மட்டமொன்றில் பேணப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. தேறிய உள்நாட்டு நிதியிடல் இலக்கின் நோக்கம் அரசின் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை விரும்பத்தக்கதொரு மட்டத்தில் பேண வேண்டும் என்பதாகும். தற்போதைய வசதியின் கீழான அமைப்பியல் அடிப்படை அளவீட்டு குறியீட்டுடன் இணைந்த கொள்கை நடவடிக்கைகள் உள்நாட்டு நிதியியல் முறைமை அமைப்பினை வலுப்படுத்தல் இழப்புக்களை ஏற்படுத்தும் அரச நிறுவனங்களை மீண்டும் ஆற்றப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்ட குறிக்கோள்களையும் இசைவுபடுத்தும் விதத்தில் அரச கொள்கையினை வடிவமைத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. அனைத்து மூன்று அளவு கணியம்சார் செயலாற்றப் பிரமாணங்களும் அமைப்பியல் அடிப்படை அளவீட்டு குறியீடுகளும் இலங்கையின் பொருளாதாரத்தில் பேரண்ட பொருளாதாரத்தினையம் நிதியியல்துறை உறுதிப்பாட்டினையும் பேணுகின்ற குறிக்கோளுடன் நிர்ணயிக்கப்பட்டிருப்பவையாகும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2009 யூலையிலும் நவெம்பரிலும் ஐ.அ.டொலர் 652 மில்லியன் கொண்ட இரு தொகுதிக் கடன்கள் பெறப்பட்டன.

கடந்த காலத்தில் இலங்கையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ப.நா. நிதிய வசதிகளின் விபரங்கள் சி.கு அட்டவணை 9.1 இல் தரப்பட்டுள்ளது.

**சி.கு அட்டவணை 9.1** — **1990இல் இருந்து இலங்கை பெற்ற ப.நா. நிதிய கடன்கள் (அ)**

சி.எ.உ. மில்லியன்கள்

| ஆண்டு | விபரம் | அனுமதியளிக்கப்பட்ட தொகை | எடுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1991 | வறுமை தணிப்பு மற்றும் வளர்ச்சிக்கான உதவி | 336.0 | 280.0 |
| 2001 | துணைநில் ஒழுங்கு வசதிகள் (ஆ) | 200.0 | 200.0 |
| 2003 | வறுமை தணிப்பு மற்றும் வளர்ச்சிக்கான உதவி (இ) | 269.0 | 38.4 |
| 2003 | விரிவாக்கப்பட்ட நிதி வசதி | 144.4 | 20.7 |
| 2005 | இயற்கை அனர்த்தங்களுக்கான அவசர உதவி (சுனாமி) | 103.4 | 103.4 |
| 2009 | துணைநில் ஒழுங்கு வசதிகள் | 1,653.6 | 413.4 (ஈ) |

(அ) ப.நா. நிதியத்திடமிருந்து இலங்கை பெற்ற முன்னை கடன்கள் பற்றிய விபரங்கள் 1998இல் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட சுதந்திர இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் என்ற வெளியீட்டில் சிறப்பு குறிப்பு 4.4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) வசதி தொடர்பான விபரங்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2001இன் சிறப்புக்குறிப்பு 3இல் கிடைக்கிறது.

(இ) வசதி தொடர்பான விபரங்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2002இன் சிறப்புக்குறிப்பு 4இல் கிடைக்கிறது.

(ஈ) 2009இல் பெறப்பட்ட இரண்டு பகுதிகளையும் உள்ளடக்குகின்றது.

அட்டவணை 5.11

## வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் வங்கிதொழிற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009(அ) | 2005 | 2006 | 2007 | 2008 | 2009(அ) |
| **1. நடுத்தர, நீண்ட காலப்படுகடன்** | 10,690 | 11,347 | 12,879 | 13,646 | 15,564 | 1,091,644 | 1,222,175 | 1,400,883 | 1,543,952 | 1,780,313 |
| 1.1 அரசு | 9,354 | 10,245 | 11,744 | 12,593 | 13,769 | 955,207 | 1,103,418 | 1,276,846 | 1,424,729 | 1,574,933 |
| 1.2 அரச கூட்டுதாபனங்களும் அரச உத்தரவாதத்துடனான தனியார்துறையும் | 567 | 465 | 345 | 251 | 110 | 57,912 | 50,065 | 37,501 | 28,429 | 12,608 |
| 1.3 அரச கூட்டுதாபனங்களும் அரச உத்தரவாதமற்ற தனியார்துறையும் | 388 | 393 | 539 | 634 | 967 | 39,588 | 42,376 | 58,553 | 71,715 | 110,570 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள்(அ) | 381 | 244 | 251 | 169 | 719 | 38,937 | 26,316 | 27,933 | 19,079 | 82,201 |
| **2. குறுங்கால படுகடன்** | 664 | 634 | 1,111 | 1,460 | 3,098 | 67,759 | 68,286 | 120,748 | 165,207 | 354,341 |
| 2.1 அரசு (இ) | - | - | 457 | 212 | 1,622 | - | - | 49,641 | 24,006 | 185,534 |
| 2.2 ஏனையவை (ஈ) | 664 | 634 | 654 | 1,248 | 1,476 | 67,759 | 68,286 | 71,107 | 141,201 | 168,808 |
| **3. வங்கியற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்** | 1,666 | 1,994 | 2,493 | 2,669 | 2,251 | 170,170 | 214,802 | 271,063 | 301,950 | 257,575 |
| 3.1 மத்திய வங்கி (உ) | 1 | 3 | 2 | 1 | 227 | 131 | 284 | 219 | 64 | 26,042 |
| 3.2 வர்த்தக வங்கிகள் (ஊ) | 1,388 | 1,681 | 2,046 | 1,861 | 1,763 | 141,753 | 181,040 | 222,389 | 210,531 | 201,696 |
| 3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 277 | 311 | 446 | 808 | 261 | 28,286 | 33,478 | 48,454 | 91,355 | 29,837 |
| **4. மொத்த வெளிநாட்டுப்படுகடன் (1+2)** | 11,354 | 11,981 | 13,989 | 15,107 | 18,662 | 1,159,403 | 1,290,461 | 1,521,581 | 1,709,159 | 2,134,654 |
| **5. மொத்த வெளிநாட்டுபடுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)** | 13,020 | 13,976 | 16,483 | 17,775 | 20,919 | 1,329,573 | 1,505,263 | 1,792,643 | 2,011,109 | 2,392,229 |
| **ஒப்பந்த குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர மற்றும் நீண்ட கால கடன்கள்** | | | | | | | | | | |
| செயற்றிட்டக்கடன்கள் | 7,416 | 9,087 | 10,002 | 11,148 | 11,914 | 757,262 | 978,356 | 1,087,359 | 1,261,304 | 1,362,806 |
| செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,655 | 867 | 1,064 | 740 | 708 | 169,038 | 93,331 | 115,697 | 83,703 | 81,025 |
| நிரம்பலாளர் கொடுகடன் | 283 | 435 | 679 | 705 | 1,146 | 28,907 | 46,877 | 73,790 | 79,722 | 131,103 |
| ப.நா.நி.எடுப்பனவுகள் (ஆ) | 381 | 244 | 251 | 169 | 719 | 38,937 | 26,316 | 27,933 | 19,079 | 82,201 |
| ஏனைய கடன்கள் (எ) | 955 | 718 | 884 | 885 | 1077 | 97,500 | 77,295 | 96,054 | 100,145 | 123,178 |
| **குறுங்காலப்படுகடனும் வங்கித் தொழிற்துறையுப் பொறுப்புக்களும்** | 2,330 | 2,628 | 3,604 | 4,129 | 5,349 | 237,929 | 283,088 | 391,811 | 467,157 | 611,916 |
| **மொ.உ.உ.இன் சதவீதமாக (ஏ)** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 46.5 | 42.4 | 43.2 | 37.1 | 44.4 | 47.3 | 43.9 | 42.4 | 38.8 | 44,2 |
| மொத்த வங்கித் தொழிற்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 6.8 | 7.1 | 7.7 | 6.6 | 5.4 | 6.9 | 7.3 | 7.6 | 6.8 | 5.3 |
| மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 53.3 | 49.4 | 51.0 | 43.7 | 49.8 | 54.2 | 51.2 | 50.1 | 45.6 | 49.6 |
| குறுங்காலப்படுகடன் | 2.7 | 2.2 | 3.4 | 3.6 | 7.4 | 2.8 | 2.3 | 3.4 | 3.7 | 7.3 |
| குறுங்காலப்படுகடனும் வங்கித்தொழிற்துறையின் வெளிநாட்டு பொறுப்புக்கள் | 9.5 | 9.3 | 11.1 | 10.1 | 12.7 | 9.7 | 9.6 | 10.9 | 10.6 | 12.7 |
| **மொத்தப் படுகடனினதும் பொறுப்புக்களினதும் சதவீதமாக** | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 5.1 | 4.5 | 6.7 | 8.2 | 14.8 | 5.1 | 4.5 | 6.7 | 8.2 | 14.8 |
| குறுங்காலகப் பொறுப்புக்கள் | 12.8 | 14.3 | 15.1 | 15.0 | 10.8 | 12.8 | 14.3 | 15.1 | 15.0 | 10.8 |
| **அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுபடன் (ஐ)** | 24.3 | 22.4 | 31.7 | 60.8 | 57.8 | 24.3 | 22.4 | 31.7 | 60.8 | 57.8 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) 2009இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் முதன்னிலை எடுப்பனவு வசதியின் கீழான எடுப்பனவுகள் உள்டங்கலாக

(இ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேறி உண்டியல்கள் மற்றும் முறிகளை உள்ளடங்குகின்றது

(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈரானிய கொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.

(உ) 2009இல் ஐ.அ.டொலர் 200 மில்லியன் நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக

(ஊ) கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளை உள்ளடக்கி வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்

(எ) அரச கூட்டுதாபனங்களினதும் தனியார்துறை நிறுவனங்களினதும் நீண்டகாலக் கடன்களை உள்ளடக்கியது

(ஏ) தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைகளத்தால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளிலமைந்த மொ.உ.உ யினை அடிப்படையாகக் கொண்டது.

(ஐ) வெளிநாட்டுச் சொத்துக்களின் வகைப்படுத்தலில் ஏற்பட்ட மாற்றங் காரணமாக 2008ற்கான அலுவல்சார் ஒதுக்குகள் திருத்தியமைக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான, அதாவது, குறிப்பிட்ட காரணங்களுக்காக வெளிநாடுகளில் வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதியளித்தல், வெளிநாட்டு நாணயத்தில் முன்னோக்கிய ஒப்பந்தங்களை மேற்கொள்ள அனுமதித்தல், தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளின் பொருட்பட்டியல் பெறுமதியின் மீதான முற்பணிக் கொடுப்பனவுகளுக்கெதிரான அளவுத் தேவைப்பாடுகளை அகற்றுதல், இறக்குமதி உண்டியல்களின் முன்கொடுப்பனவுகள் மீதான இடைநிறுத்தலை நீக்குதல் மற்றும் வர்த்தக வங்கிகளில் வதிவற்றோரினால் பேணப்பட்ட வேறுபட்ட முதலீட்டுக் கணக்குகளை ஒருமுகப்படுத்தல் என்பன மீதான குறிப்பிட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்கிறது.


வழிகாட்டலில் அறிவிக்கப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியும் வெளிநாட்டுக் கம்பனிகளிலுள்ள பங்கு அல்லது குறுங்கால படுகடன் கருவிகளில் முதலீடு செய்ய இலங்கையர்களை அனுமதித்தல், உள்ளூர் கம்பனிகளினால் வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட தொகுதிக் கடன்களில் முதலீடு செய்ய வெளிநாட்டவர்களை அனுமதித்தல், காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் பொது நிதியத்தின் அல்லது தொழில்நுட்ப ஒதுக்கின் ஒரு பகுதியை வெளிநாட்டுச் சொத்துக்களில் முதலீடு செய்ய அனுமதித்தல், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் வெளிநாட்டுப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிட அனுமதித்தல் மற்றும் குறிப்பிட்ட வெளிநாட்டுக் கம்பனிகள் இலங்கையில் வியாபாரத் தலங்களை நிறுவ அனுமதித்தல் போன்ற மற்றைய பல கட்டுப்பாட்டுகளைத் தளர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந் நடவடிக்கைகள், பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவிற்கு விரிவடைய வசதியளிக்குமெனவும் இலங்கையின் பொருளாதாரம் எஞ்சிய உலகத்துடன் மேலும் ஒருங்கிணைக்கப்படுவதற்கு வழியமைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.6 வெளிநாட்டுப் படுகடனும் படுகடன் பணிகளும்

### வெளிநாட்டுப் படுகடன்

**நாட்டின் நடுத்தர மற்றும் நீண்டகால மற்றும் குறுங்கால படுகடன்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2008இன் 37.1 சதவீதத்திலிருந்து 2009இன் மொ.உ.உற்பத்தியின் 44.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.** ஐ.அ.டொலர் நியதிகளில் 2009இல் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஏறத்தாழ 23.5 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 18,662 மில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் கொள்வனவு மற்றும் வெளிநாட்டு முறிகளின் வழங்கல் என்பனவற்றின் பொருட்டு ஏற்பட்ட பெருமளவு வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மற்றும் ப.நா. நிதிய துணைநில் ஒழுங்கு வசதியின் கீழான பகிர்ந்தளிப்பு என்பனவற்றின் காரணமாக முக்கியமாக ஏற்பட்டதாகும். வெளிநின்ற மொத்த வெளிநாட்டு படுகடனில் 36.8 சதவீதம் சிஎஉ இல் குறித்துரைக்கப்பட்டவிடத்து 29.4 சதவீதம் யப்பானிய யென்னிலும் இருந்தவேளையில் 21.5 சதவீதம் ஐ.அ.டொலர்களில் காணப்பட்டது. மொத்த வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்துள்ள போதும் மொத்த வெளிநாட்டுப் படுகடனையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களையம் உள்ளடக்கிய மொத்த

வரைபடம் 5.10 வெளிநாட்டுப் படுகடன்




அட்டவணை 5.12 வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

| வகை | ஐ.அ.டொலர் மில்லியன் 2005 | 2006 | 2007 | 2008 | 2009(அ) | ரூபா மில்லியன் 2005 | 2006 | 2007 | 2008 | 2009 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 623 | 1,080 | 1,232 | 1,525 | 1,702 | 62,577 | 112,670 | 136,521 | 165,511 | 195,727 |
| 1.1 படுகடன் தீர்ப்பனவுகள் | 419 | 759 | 791 | 1,075 | 1,346 | 42,075 | 79,227 | 87,731 | 116,702 | 154,713 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 39 | 144 | 5 | 77 | 95 | 3,902 | 15,276 | 789 | 8,582 | 10,941 |
| (ii) ஏனையவற்றிற்கு | 380 | 615 | 786 | 998 | 1,251 | 38,173 | 63,952 | 86,942 | 108,120 | 143,772 |
| 1.2 வட்டிக்கொடுப்பனவுகள் | 204 | 321 | 441 | 450 | 357 | 20,502 | 33,443 | 48,790 | 48,809 | 41,014 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 10 | 14 | 14 | 11 | 6 | 973 | 1,452 | 1,509 | 1,173 | 644 |
| (ii) ஏனையவற்றிற்கு | 194 | 307 | 427 | 440 | 351 | 19,530 | 31,991 | 47,281 | 47,636 | 49,370 |
| 2. வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் | 7,887 | 8,508 | 9,415 | 10,115 | 8,977 | 793,153 | 885,380 | 1,041,932 | 1,095,679 | 1,051,289 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 9,891 | 10,980 | 12,365 | 13,001 | 12,423 | 994,751 | 1,142,515 | 1,368,959 | 1,408,637 | 1,427,653 |
| 4. படுகடன் பணி விகிதம் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 7.9 | 12.7 | 13.1 | 15.1 | 19.0 | 7.9 | 12.7 | 13.1 | 15.1 | 19.0 |
| (ii) ப.நா.நி கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 7.3 | 10.8 | 12.9 | 14.2 | 17.8 | 7.3 | 10.8 | 12.9 | 14.2 | 17.9 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 6.3 | 9.8 | 10.0 | 11.7 | 13.7 | 6.3 | 9.9 | 10.0 | 11.7 | 13.7 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல் நீங்கலாக | 5.8 | 8.4 | 9.8 | 11.1 | 12.9 | 5.8 | 8.4 | 9.8 | 11.1 | 12.9 |
| 5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 268 | 610 | 813 | 1,066 | 1,166 | 26,927 | 63,368 | 89,924 | 115,508 | 134,019 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 43.0 | 56.4 | 66.0 | 69.9 | 68.5 | 43.0 | 56.2 | 65.9 | 69.8 | 68.5 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) ரூபா பெருமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்

(இ) ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் தவிர்த்து

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டு படுகடன் பொறுப்புக்கள் மொ.உ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2008இன் 43.7 சதவீதத்திலிருந்து 2009இல் 49.8 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு மேலே குறிப்பிட்ட உயர்ந்த வெளிநாட்டு படுகடன் உட்பாய்ச்சல்களே காரணமாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2009 இறுதியில் ஐ.அ.டொலர் 2,251 மில்லியனுக்கு 15.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நாணய பரிமாற்றல் வசதிகளின் காரணமாக புதிய பொறுப்புக்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் 2009 இறுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி ஒட்டுமொத்த வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தது.

**அரச படுகடன் தொடர்ந்தும் வெளிநாட்டுப் படுகடனின் முக்கிய பங்கிற்கு வகைகூறியது.** மொத்த நடுத்தர நீண்டகாலப் படுகடனில், அரச படுகடன் 88.5 சதவீதத்திற்கு அரச படுகடன் வகைகூறிய வேளையில், எஞ்சிய பங்கு தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகளையும் ப.நா. நிதியத்திற்கான படுகடன் கடப்பாடுகளையும் கொண்டிருந்தன. மொத்த அரச வெளிநாட்டு படுகடனில், சலுகை ரீதியான படுகடன் 2008இல் பதிவு செய்யப்பட்ட 86 சதவீதத்துடன் ஒப்பிடுகையிரல் 2009இன் இறுதியில் 81 சதவீதத்திற்கு வகைகூறியது. தாழ்ந்த மத்திய தர வருமான அந்தஸ்திற்கு நாடு உயர்வடைந்தமையானது பல்புடை கடன் வழங்கல் நிறுவனங்களிலிருந்தான சலுகைக் கடன்களின் கிடைப்பனவினை குறைத்திருப்பதானது பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கு சலுகையற்ற கடன்களை நாடுவதற்கு அரசாங்கத்தினை நிர்ப்பந்தித்தது.

### வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவு

**கடன் தீர்ப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியின் சதவீதமாக 2008இன் 15.1 சதவீதத்திலிருந்து 2009இல் 19.0 சதவீதத்திற்கு அதிகரித்தன.** ஐ.அ.டொலர் நியதிகளில் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2009இல் 11.6 சதவீதத்தினால் அதிகரித்தன. சுனாமியின் பின்னர் வழங்கப்பட்ட சட்ட இசைவுத் தாமதத்தின் காரணமாக மீள் அட்டவணையிடப்பட்ட படுகடன் கடப்பாடுகளின் கீழான இறுதிக் கொடுப்பனவு 2009 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட கூட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் காணப்பட்ட வேளையில் வணிக ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் இவ்வாண்டில் செய்யப்படட பணிகள் என்பன நாட்டின் வெளிநாட்டில் படுகடன் பணிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கான முக்கிய காரணங்களாக விளங்கின.

## 5.7 செலாவணி வீத அமைப்பும் செலாவணி வீத அசைவுகளும்

**2009இல் செலாவணி வீதக் கொள்கையானது, ஆண்டின் முதல் ஒரு சில மாத காலத்தில் வெளிநாட்டுச் செலாவணி குறிப்பிடத்தக்களவிற்கு வெளிப்பாந்தமையினதும் அதன் பின்னர் கணிசமானளவிற்கு உட்பாய்ந்தமையினதும் பின்னணியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியின் திரவத் தன்மையில் போதுமான மட்டத்தினைப் பேணுவதன் மீதே குவிந்திருந்தது.** அரச பிணையங்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் வெளியில் அனுப்பப்பட்டமை, உயர்ந்த பெற்றோலிய உண்டியல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டமை ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வர்த்தக நிதியிடல் மூலங்கள் கடுமையாக வறிதடைந்தமை என்பன உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணிக்கு பாரிய கேள்வியை தோற்றுவித்தன. இக் காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிரான ரூபாவின் செலாவணி வீதம் பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையுடன் அசைந்த வேளையில் மத்திய வங்கியின் எச்சரிக்கையுடனான தலையீடுகளின் மூலமாக மிகையான சந்தைத் தளம்பல்களும் தடுக்கப்பட்டன. இதன் விளைவாக, 2009இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ரூபா படிப்படியாகத் தேய்வடைந்து 2009 ஏப்பிறல் 24ஆம் நாளில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூ.120.25 கொண்ட மிகக் குறைந்த மட்டத்தினை அடைந்தது.


**மோதல்கள் முடிவடைந்ததன் பின்னர் அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கையினைத் தொடர்ந்து ஏற்பட்ட பாரிய மூலதன உட்பாய்ச்சல் ரூபா படிப்படியாக உயர்வடையக் காரணமாயிற்று.** 2009 மே இறுதியளவில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா, ரூ.114.93இற்கு உயர்வடைந்தது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட மிகையான தளம்பல்களைத் தணிப்பதற்கும் ரூபாவின் உயர்வினால் ஏற்றுமதித் துறையின் போட்டித்தன்மை நியாயமற்ற முறையில் பாதிக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்குமாக இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலவாணியினை ஈர்த்துக் கொண்டமையின் மூலம் அதன் ஒதுக்கு நிலைமையினை வலுப்படுத்திக் கொண்டது. 2009 ஒத்தோபர் இறுதிவரை ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா ஏறத்தாழ 114.80 ஆக ஒப்பீட்டு அடிப்படையில் உறுதியாக இருந்த போதும் 2009இன் இறுதிப்பகுதியில் காணப்பட்ட வலுவான வெளிநாட்டு செயலாற்றம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் செய்யப்பட்ட மேலதிக முதலீடுகளிலிருந்தான நன்மைகள் மற்றும் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட இரண்டாவது நாட்டிற்கான முறிகளின் வழங்கல் என்பனவற்றின் விளைவாக ரூபாவானது ஐக்கிய அமெரிக்கா டொலருக்கெதிராக மேலும் உயர்வடைந்தது.

**2009 இறுதியளவில் ரூபாவானது ரூ.114.38 உயர்வடைந்தமையானது, 2008இன் ஏறத்தாழ 3.91 சதவீதம் கொண்ட தேய்வுடன் ஒப்பிடுகையிரல் ஐ.அ.டொலருக்கெதிராக 1.09 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த தேய்வினை விளைவித்தது.** அதேவேளை, 2009இல் ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் 2008இல் காணப்பட்ட ஐ.அ..டொலர் ஒன்றிற்கு 108.33 உடன் ஒப்பிடும் போது 2009இல் ஐ.அ. டொலரொன்றிற்கு ரூ.114.94 ஆகக் காணப்பட்டது. இவ்வாண்டுப் பகுதியில் ரூபாவானது யூரோ (2.60 சதவீதம்), இந்தியா ரூபா (4.13 சதவீதம்), இசுடேர்லிங் பவுண் (10.16 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் யப்பானிய யென்னிற்கெதிராக (0.89 சதவீதம்) உயர்வடைந்தது.

### பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2009ஆம் ஆண்டுப்பகுதியில் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும், 2008இல் அவதானிக்கப்பட்ட உயர்வடைந்து சென்ற போக்கிற்கு மாறாக தேய்வடைந்தன.** நாணயக் கூடையிலுள்ள

வரைபடம் 5.11 செலாவணி வீத அசைவுகள்




பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவுத் தேய்வினை பிரதிபலிக்கின்ற விதத்தில் 5 நாணயங்கள் மற்றும் 24 நாணயங்களின் கூடை இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட இலங்கை ரூபா 2009இலும் தேய்வடைந்தது. பெயரளவுச் செலாவணி வீதங்களில் காணப்படும் வேறுபாடுகளுக்குப் புறம்பாக மற்றைய நாடுகளிடையேயான பணவீக்க வேறுபாடுகளைக் கணக்கில் கொள்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் 2009இல் தேய்வடைந்து இலங்கை ஏற்றுமதிகளின் போட்டித்தன்மை மேம்பாட்டமையினை எடுத்துக்காட்டியது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட உயர்வடைந்து சென்ற போக்கிற்கு மாறானதாக இது இருந்தபோதும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் நெருக்கடிக்கு முன்னைய மட்டங்களுக்கு இன்னமும் தேய்வடையவில்லை. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் தேய்விற்கு வர்த்தகப் பங்காளர் நாடுகளின் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுப் பணவீக்கத்தில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்தளவு குறைப்பு காணப்பட்டமையும் ஐ.அ.டொலருக்கெதிரான போட்டி நாணயங்களின் செலாவணி வீதங்கள் உயர்வடைந்தமையும் காரணமாக விளங்கிய வேளையில், ரூபா 2009ஆம் ஆண்டு முழுவதும் தேய்வடைந்த நிலையிலேயே காணப்பட்டது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களின் கணிப்பு நாணயக்கூடையிலுள்ள நாடுகளின் பணவீக்க அசைவுகளை கணக்கில் கொண்ட போதும் இது ஏற்றுமதிப் போட்டித்தன்மையினை அதிகரிக்கும் உற்பத்தியாக்க மேம்பாடுகள் போன்ற மற்றைய அபிவிருத்திகளை உள்ளடக்கவில்லை.

அட்டவணை 5.13 செலாவணிவீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி சதவீதம் | | | ஆண்டுக்கான விகிதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2007 | 2008 | 2009 | 2007 | 2008 | 2009 | 2008 | 2009 | 2008 | 2009 |
| யூரோ | 160.27 | 159.45 | 163.72 | 151.63 | 159.32 | 160.21 | 0.51 | -2.60 | -4.82 | -0.56 |
| இந்திய ரூபா | 2.77 | 2.36 | 2.46 | 2.69 | 2.52 | 2.39 | 17.54 | -4.13 | 6.73 | 5.52 |
| யப்பானிய யென் | 0.97 | 1.25 | 1.24 | 0.94 | 1.05 | 1.23 | -22.44 | 0.89 | -10.51 | -14.60 |
| ஸ்டேர்லிங் பவுண் | 217.15 | 163.28 | 181.75 | 221.46 | 200.73 | 179.87 | 32.99 | -10.16 | 10.33 | 11.60 |
| ஐ.அ.டொலர் | 108.72 | 113.14 | 114.38 | 110.62 | 108.33 | 114.94 | -3.91 | -1.09 | 2.11 | -5.75 |
| சி.எ.உ | 171.57 | 174.27 | 178.67 | 169.37 | 171.24 | 177.22 | -1.55 | -2.46 | -1.10 | -3.37 |

| பயன்தரு செலாவணி வீதச் சுட்டெண் (ஆ),(இ) (2006=100) | மாதாந்தச் சுட்டென் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | மாதாந்த சுட்டெண் | | ஆண்டுச் சராசரி | |
| | திசெ. 2007 | திசெ. 2008 | தி.செ. 2009 | 2007 | 2008 | 2009 | 2008 | 2009 | 2008 | 2009 |
| பெ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 87.79 | 93.71 | 87.81 | 89.23 | 90.20 | 89.52 | 6.74 | -6.95 | 1.09 | -0.75 |
| உ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 106.05 | 125.89 | 119.61 | 100.27 | 118.41 | 120.85 | 18.71 | -4.98 | 18.09 | 2.07 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) பெ.தா.செ வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்கம் வேருபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உ.தா.செ.வீதம் கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(இ) உ.தா.செ.வீ கணிப்பிற்கான கொநுவிசு பயன்படுத்தப்பட்டுள்ளது.

## உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தி

**ஆண்டின் பின்னரைப் பகுதியில் கணிசமானளவு வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் அவதானிக்கபட்ட போதும், உலகளாவிய கேள்வியில் காணப்பட்ட பொதுவான போக்கின் விளைவாக வெளிநாட்டு வர்த்தகம் மெதுவடைந்தமை மற்றும் 2009இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற தன்மை என்பன 2009இல் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் குறைந்தமட்ட நடவடிக்கைகளைத் தோற்றுவித்தன.** 2009இன் பிற்பகுதியில் சந்தை நடவடிக்கைகள் அதிகரிக்கத் தொடங்கிய போதும், உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2008இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,660 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 6,335 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. உடன் சந்தையில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2008இன் ஐ.அ.டொலர் 5,472 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 4,624 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. ஊர்திகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட இன்றியமையாதனவல்லாத பொருட்கள் போன்ற குறிப்பிட்ட வகை இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்காகவும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஊக வர்த்தகத்தினைத் தடுப்பதற்காகவும் 2008 ஒத்தோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட முன்மதியுடைய வழிமுறைகளும் இவ் வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. 2009 மேயில் இவ் வழிமுறைகள் அனைத்தும் புறக்கீடு செய்யப்பட்ட போதும், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் அளவு 2008இல் நிலவிய மட்டத்திற்கு அதிகரித்திருக்கவில்லை. இதற்கு வெளிநாட்டு வர்த்தகத்தின் குறைந்த செயலாற்றமே காணரமாகும்.

**உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு போதுமான திரவத்தன்மையினை வழங்குவதற்காகவும் அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காகவும் 2009இல் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் இரு பக்கங்களிலும் தலையீடு செய்தமையானது செலாவணி வீதத்தில் ஒழுக்கற்றதும் நியாயமற்றதுமான அசைவுகளைத் தடுப்பதற்கு உதவியது.** 2009இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களை தடுப்பதற்காகவும் அதேபோன்று திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளில் செய்யப்படட குறுங்கால முதலீடுகள் வெளியில் அனுப்படுகின்றமை மற்றும் உயர் பெறுமதியைக் கொண்ட பெற்றோலிய இறக்குமதி உண்டியலின் கொடுப்பனவு என்பனவற்றினைக் கருத்திற் கொண்டு உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியின் திரவத்தன்மையின் போதுமான தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி தேறிய அடிப்படையில் உள்நாட்டுச் செலாவணிச் சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை நிரம்பல் செய்தது. இக் காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான அழுத்தத்தினை குறைப்பதற்காக இலங்கை மத்திய வங்கி, ஐ.அ.டொலர் 650 மில்லியனை நிரம்பல் செய்தது. மோதல்கள் முடிவடைந்ததன் பின்னர் திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்களின் மீதான முதலீடுகளிலும் மற்றும் உள்முக பணவனுப்பல்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பினைக் கருத்திற் கொண்டு வெளிநாட்டுச் செலாவணியை ஈர்ப்பதன் மூலமாக இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. இது ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா மேலும் உயர்வடைவதைத் தடை செய்தது. 2009ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 3,122 மில்லியன்களைக் கொள்வனவு செய்தமையானது ஐ.அ.டொலர் 2,292 மில்லியன் கொண்ட தேறிய ஈர்ப்புக்கு வழிவகுத்தது.

வரைபடம் 5.12 வங்கிகளுக்கிடையிலான காலாண்டுரீதியான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள்

